Deviyin **KANMANI** Tamil Fortnightly **APRIL - 1, 2010** Regd. No. TN/CH(C)/360/09-11 Registered With Registrar of News papers for India Under No.49510/89 Published every 1st and 15th of every month.

## என்னைப்பற்றி...




என்னுடைய பதிமூன்று வருட கனவு என் லட்சியம் எல்லாமே இது தான். விபத்தில் எனது கை முறிந்தபோதும் நம்பிக்கையோட எழுதி முடித்த நாவல் இது. ஒரு கையால் எழுதிய எனக்கு மற்றொரு கரமாய் இருந்து உதவிய என் கணவருக்கும் எனது நம்பிக்கையை வளர்த்த என் அன்னைக்கும் இது சமர்ப்பணம்.

கண்மணியில் 'உயிரில் கலந்த உறவே'என்ற முதல் நாவலில் என்னை அமோகமாய் வரவேற்ற அன்பு வாசகர்களின்ஆதரவு இந்தக் 'காத்திருந்த கண்களே' நாவலுக்கும்தொடரும் எனநம்புகிறேன்.

உங்களின்விமர்சனங்களை ஆவலாய் எதிர்பார்க்கிறேன்

என்றும் அன்புடன்,

**சொ.கலைவாணி சொக்கலிங்கம்.**



# காத்திருந்த கண்களே...

கீதங்களில் அவன் வசந்தம்
கலைகளிலே அவன் ஓவியம்
மாதங்களில் அவன் மார்கழி
மலர்களிலே அவன் மல்லிகை

''பயணிகள் கவனத்திற்கு! சென்னையிலிருந்து புறப்படும் நெல்லை எக்ஸ்பிரஸ் ட்ரெயின் நம்பர் ஆறு ஒன்று பூஜ்யம் ஆறு இன்னும் சற்று நேரத்தில் ஆறாவது பிளாட்பாரத்திலிருந்து புறப்படும்'' மூன்று மொழிகளிலும் ஒலிபரப்பான தகவலைக் கேட்டதும் சிவகுருநாதன் தனது மணிக்கட்டை திருப்பி நேரம் பார்த்தார். ''தோ! பாருடா! எப்படியும் காலைல ஆறு மணிக்கெல்லாம் நீ அங்கே இருக்கணும். அவங்க குல தெய்வம் கோவில்ல பூஜை இருக்குதாம். அசந்து தூங்கி நெல்லை வரைக்கும் போயிடாதே. மதுரையில இறங்கிடு. மதுவோட அப்பா கார் அனுப்புறதா சொல்லியிருக்கார். பார்த்து பத்திரமா போ. நானும் அம்மாவும் இன்னும் ரெண்டு நாள்ல வந்திடுவோம். பூஜை முடிஞ்சதும் நம்ம வீட்டுக்கு போயிடு. பிரெண்டு வீடு அது இதுன்னு எங்கேயும் சுத்தப்போயிடாதே. வீட்டோட இருக்கணும் புரியுதா?'' - ஏழாவது முறையாக இதே வார்த்தையை திரும்பத் திரும்பச் சொன்ன தந்தையை சலிப்போடு பார்த்து ''ம் ம்''- என்றான் ரகுநாதன்.

''என்னடா! ரொம்ப சலிப்பா தலையாட்டுற. இதே மாதிரி அங்கேயும் போயி உம்முனு இருக்காதே. கலகலன்னு சிரிச்சுப் பேசு. அது கிராமம்டா. ஜனங்க முகத்தை வெச்சே கண்டுபிடிச்சிடுவாங்க.

பாத்து பதமா பேசி பழகு. மது எங்கேயும் வெளிய கூப்பிட்டா போயிட்டு வா. அது சென்னையிலே பொறந்து வளர்ந்த பொண்ணு. பத்து நாள் எப்படித்தான் நம்ம ஊர்ல தங்கப்போகுதோ. அதனால திருச்செந்தூர், குற்றாலம், கன்னியாகுமரின்னு எங்காவது போய் சுத்திட்டு வாங்க. என்ன? பணத்தைப்பத்தி கவலைப்படாதே. தண்ணீராச் செலவு

செ. கலைவாணி சொக்கலிங்கம்



பண்ணு. அவ கோடீஸ்வரிடா. அவ மனசு கோணாம நடந்துக்க'' அடுக்கிக் கொண்டே போனவரை மனைவி ரஞ்சிதம் தடுத்தாள்.

''ஏங்க! அவன் என்ன புகுந்த வீட்டுக்கா போறான். இவ்வளவு அட்வைஸ் பண்றீங்க. பொறந்து வளர்ந்த ஊருக்குத்தானே போறான். அங்க தான் நம்ம பொண்ணு இருக்காளே. எல்லாம் அவ பார்த்துப்பா. நாம தான் ரெண்டு நாள்ல போயிடுவோமே. பின்ன என்ன?''

''அப்படியில்ல ரஞ்சிதம். கோபாலகிருஷ்ணனைப் பத்தி உனக்கு தெரியாது. அவன் பொண்ணு சொல்றது தான் அவனுக்கு வேதவாக்கு. அவ சொன்னது தான் சட்டம். இல்லேன்னா நம்ம கூட சம்மந்தம் வெச்சுக்குவானா என்ன?''

''ஏன்? ஏன்? நாம மட்டும் என்ன அவருக்கு கொறைஞ்சா போயிட்டோம்'' - சீறினாள் ரஞ்சிதம்.

''இல்ல இருந்தாலும் பணமும், பணமும் சேர்ந்தாத்தானே மதிப்பு. எல்லாம் நம்ம பிள்ளைக்கு தானே வரும். அப்போ நம்ம பிள்ளை ரெண்டு மடங்கு பணக்காரனாகிடுவானே அதான்'' நயந்த குரலில் குழைந்தவரை வெறுப்பாய் நோக்கினான் ரகுநாதன். 'கடவுளே! இந்த ட்ரெயின் சீக்கிரமா கிளம்பக்கூடாதா.?'

பெற்றவர்களுக்குள் இன்னும் வார்த்தைகள் முடியாமல் நீளவே தனது செல்போனை உயிர்ப்பித்து பாடல்களை ஆன் செய்து காதிற்குள் ஹெட்போனை சொருகினான். இனிமையான பாடல் கண்களை மூடி சீட்டில் சாய்ந்து ரசிக்க ஆரம்பித்தான்.

''பாரு நாம பேசிட்டு இருக்கோம். அவன் என்ன பண்றான்னு அவன் மூகத்துல கொஞ்சமாவது கல்யாணக்களை இருக்குதான்னு பாரேன். மது என்கிட்ட ஒரே கம்பிளெய்ண்ட். இன்னிக்கு மார்னிங் எல்லோரும் பிளைட்ல போறதால கூடவே இவனையும் அழைச்சிருக்காங்க. போனா என்ன? எனக்கு ட்ரெயின் தான் வசதி. நான் ட்ரெயின்லயே வந்து ஜாய்ன் பண்ணிக்கிறேன் என்றானாம். என்கிட்ட அழாத குறையா சொல்றா. அவளுக்கும் ஆசையா இருக்காதா தன்னோட வருங்கால புருஷனோட ட்ராவல் பண்ணணும்னு. இவன் என்னதான் நினைச்சிட்டு இருக்கான். இவனைக் கேட்காமலா நாம எல்லாம் செய்யுறோம்''

''ஷ்! மெல்ல பேசுங்க. இத்தனை வருஷம் கழிச்சு அவன் சம்மதிச்சதே பெரிய விஷயம். அவனை சம்மதிக்க வைக்க நாம் பட்ட பாடு எனக்குல்ல தெரியும். நீங்க வேற அதை இதைப்பேசி அவனை டார்ச்சர் பண்ணாதீங்க. எல்லாம் நல்லபடி நடக்கும். நம்ம மது அவனை மாத்திடுவா. அதுக்குத்தானே இவனை சீக்கிரமா நமக்கு முன்னே அனுப்புறோம். நாம போகும் போது அவங்க ரெண்டு பேரும் நகமும், சதையுமா ஒட்டியிருப்பாங்க பாருங்க''

''எனக்கு என்னமோ கல்யாணத்தை ஊர்ல வைக்க ஒரு துளி கூட விருப்பமே இல்லை''- சலித்தார் சிவகுருநாதன்.

''ஏன் இதை உங்க சம்மந்திகிட்டே சொல்ல வேண்டியது தானே'' நொடித்தாள் ரஞ்சிதம்.

''எங்கே கேட்கிறான். ஒரே பொண்ணு கல்யாணத்தை நம்ம ஊரே பார்த்து அசந்து போற மாதிரி பண்ணணும்னு கனவு கண்டுட்டு இருக்

காணாம். கண்டிப்பா ஊருல தான் வெச்சே ஆகணும்னு சொல்லிட்டான். அட! ட்ரெயின் கிளம்புதே'' என்றவாறே மகனருகே வந்தார்.

ட்ரெயின் அசைந்ததும் கண் விழித்த ரகு ஜன்னல் வழியே கையசைத்தான். ''வர்றேம்மா பைப்பா''

''பத்திரம். அப்பா சொன்னதை மறந்துடாதே. போனதும் போன் பண்ணு. சம்பந்தி வீட்டுக்கார...'' அதற்கு மேல் அவர் கத்தியது எதுவும் காதில் விழவில்லை. ஒரு பெரிய விடுதலை உணர்வுடன் இனம் புரியா உணர்வுகள். சந்தோஷமா துக்கமா? எதிர்பார்ப்பா ஆர்வமா என பிரித்தறியாத உணர்வு தன்னை ஆட்டிப்படைப்பதை உணர்ந்தான். இது என்ன விநோதம். ஊருக்கு போய்த்தான் ஆக வேண்டுமா? பேசாமல் தாம்பரம் ஸ்டேஷனில் இறங்கி விடலாமா? இந்த எண்ணமே அபத்தமாகப்பட்டது. படிக்கும் காலங்களில் வார இறுதி நாள்களுக்காக வார முதல் நாளே ஏங்குவதுண்டு. பயணங்களில் ஒருபோதும் சோர்வாகக் கண்களை மூடிக் கொண்டதில்லை. பார்வைக்கு கிடைக்கும் காட்சிகளை அது எதுவாக இருந்தாலும் ரசித்த காலங்கள் எங்கே போயிற்று? காதிற்குள் சலசலத்த இரைச்சல்கள் கூட இன்று தன் கண்களை திறக்க மறுக்கின்றதே ''ஏங்க! நீங்க எங்கே போகணும். திருச்சியா திருச்சி தான்ங்க சொந்த ஊரா. எனக்கும் திருச்சி தான்'' இயல்பாக தங்களது ரெயில் சிநேகத்தை தொடர்ந்தார்கள் எதிர் சீட்டிலிருந்தவர்கள்.

''டிக்கெட் ப்ளீஸ்'' - தனக்கு வெகு சமீபமாய் கேட்ட குரலால் கலைந்தான் ரகு. டிக்கெட் பரிசோதகர் நின்று கொண்டிருந்தார். செல்லை ஆப் செய்தவாறு தன் பேண்ட் பாக்கெட்டில் கையை நுழைத்து டிக்கெட்டை எடுத்து நீட்டினான். அவர் அதை சரி பார்த்து மார்க் பண்ணி அவனிடமே கொடுத்தார்.

வெளியே பார்வையை வீசினான். மாலை மங்கிக் கொண்டிருந்தது. சூரியன் ஓய்வெடுக்க வேகமாக சென்று கொண்டிருந்தான். சாலையின் வாகன நெரிசல்கள் ஒன்றையொன்று முந்திக் கொண்டிருந்தது. எல்லோருக்குமே அவசரம். எங்கும் அவசரம். எதிலும் அவசரம். இந்த அவசரம் எத்தனை பேரை மரணத்திடம் கொண்டு சேர்த்துவிடுகிறது. தெரிந்தும் ஏனிந்த அவசரம்? இந்த அவசரம் தானே என்னையும் நடைபிணமாக்கியது. ஏன் கோதை? ஏன்? உனக்கேன் அத்தனை அவசரம்? ஊரை விட்டுச் சென்றவன் திரும்பவே மாட்டான் என உன்னிடம் யார் சொன்னது? எப்படி என்னை மறந்து அவசரமாக இன்னொருவனை நீ மணந்தாய்? எப்படி முடிந்தது உன்னால்? எப்படி? எப்படி? மனம் நம்ப மறுத்தது.

'உடம்பு பலம் பெற 'சிட்டுக்குருவி லேகியம்' சாப்பிட்டியே! இப்போ எப்படி இருக்கு?'

'அதை ஏன் கேக்குறே! சிட்டுக்குருவிக்கு எவ்வளவு பலம் இருக்குமோ அவ்வளவு பலம் தான் இருக்கு!'

-என்.குணசீலன்,
பட்டுக்கோட்டை.



தாயின் குரல் ஓங்கி ஒலித்தது. ''நீ ஏன் இப்படி கல்யாணமே வேண்டாம்னு சொல்றேன்னு எனக்குத் தெரியும். தாயறியாத சூலா? நீ அந்த பரத்தையைத் தானே நினைச்சிட்டு இருக்கே. அவளுக்கு போனவாரமே கல்யாணம் முடிஞ்சாச்சு. ஜாம் ஜாமுன்னு இருக்கா. முகமெல்லாம் அவ்ளோ பூரிப்பு. ஏண்டா கட்டுனா அவளைத்தான் கட்டுவேன்னியே. நான் இல்லன்னா அவ செத்துப்போயிடுவான்னியே. பாரு நீ இப்படி வந்ததும் அவ அப்படி போயிட்டா. அவளைப்போயி நினைச்சுக்கிட்டு இருக்கியே''

அம்மா சொன்னதை அப்படியே நம்பும் அளவிற்கு முட்டாள் இல்லை. தாயிற்கும், தந்தைக்கும் தெரியாமல் ஊருக்கே சென்று பார்த்தான். பெரிய பூட்டு தான் அவனை எதிர்கொண்டது. ராசாத்தியாவது கண்ணில் படுவாள் தானு கேள்வி கேட்க வேண்டும் என இரண்டு நாள்கள் தவம் கிடந்தது தான் மிச்சம். ஒருவரும் கண்ணில் படவேயில்லை. நண்பர்களிடம் விசாரிக்கலாம் என்றால் ஒருவரும் ஊரில் இல்லை. கடைசியாக சென்னைக்கு புறப்பட்ட போது எதிரில் வந்த ரமணியைப் பிடித்துக் கொண்டான்.

வெகு நேர தவிப்பிற்குப் பின் ரமணி சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு 'என்னவெல்லாமோ நடந்து போச்சுடா ரகு. இப்படி ஆகும்னு யாருமே எதிர்பார்க்கல்ல. நீயும் ஊருக்கு போனவன் ஏண்டா இத்தனை மாசமா வரவேயில்லை. பாவம்டா கோதை. அது''மேலே பேசாமல் கப்பென வாயை மூடிக் கொண்டான். ''ஏண்டா மாப்பிள்ளை! ஊருக்கு கிளம்பிட்டு இந்த வெட்டிப்பயகிட்ட என்ன பேச்சு. கிளம்பு கிளம்பு.''ராகவன் மாமாவின் அதட்டலில் ரமணி பின்வாங்கினான். ''ஏண்டா! நல்லவளோ கெட்டவளோ இப்ப அவ கல்யாணம் பண்ணி போயிட்டா. அவளைப்பத்தி விசாரிக்கிறது உனக்கே அசிங்கமா இல்லையா. ஏற்கனவே உங்க அம்மா மனம் நொந்து ஊரை விட்டு மெட்ராசுக்கு வந்தா. நீ இப்படி அலையறது தெரிஞ்சா அவமானத்தில உயிரையே விட்டுடுவா. இனிமேலாவது பொறுப்பா இருப்பா. நம்ம குடும்பம் எப்படி வாழ்ந்த ஊரு. உங்கப்பா இந்த ஊரையே கட்டி ஆண்டவர். இப்ப பாரு ஊரே வேண்டாம்னு பட்டணத்து பக்கம் வந்துட்டார். போப்பா. மிச்சம் இருக்கிற கவுரவத்தையாவது காப்பாத்து'' என முதுகில் தட்டியவாறு அனுப்பி வைத்தார்.

அன்று வந்தது தான். முழுதாய் ஒன்பது ஆண்டுகள். ஊரை மறந்தே விட்டான். அல்லது மறக்கடிக்கப்பட்டான். வெறியோடு உழைத்தான். வெறி, உயிராய் நினைத்தவள் தன்னை ஏமாற்றியதால் ஏற்பட்ட வெறி. ஆத்திரம், கோபம் அனைத்தும் ஒன்றாய் சேர்ந்து உழைத்தது இன்று பெரிய தொழிலதிபர். பிஸினஸ்மேன். எத்தனை உழைத்தாலும் மனதை விட்டு மறையாத கண்களை விட்டு விலகாத

உருவமாய் உறைந்து போய் நின்றாள் கோதை.

எத்தனை முயன்றும் அவனை மறக்காமல் தன் மகன் இறுகிப் போனதை உணர்ந்த ரஞ்சிதம் தினமும் கோதைக்கு சாபம் தான். அவ வெளங்குவாளா? அவ குடும்பம் உருப்படுமா. சிரிப்பும் கும்மாள முமா துள்ளி திரிஞ்ச எம்புள்ளைய இப்படி இரும்பா மாத்திட்டு அவ பிள்ளை குட்டின்னு அமோகமா இருக்காளே. என் வயித்தெரிச்சல் அவளை வாழ விடுமா. எம் பிள்ளை முகத்து சிரிப்பைப் பார்த்து எத்தனை வருஷமாச்சு. அடிப்பாவி. நீ நல்லா இருக்கமாட்டே. நல்லாவே இருக்கமாட்டே''

ரகுவிற்கு கறுகறுவென கோபம் ஏறும். ''எம்மா இப்படி ஒரு பொம்பளையா இருந்திட்டே ஒரு பொண்ணை சபிக்கிற. அவளாவது சந்தோஷமா இருக்கட்டுமே''

''எம்புள்ளை நல்லா இல்லையே. நீ கல்யாணம் பண்ணி புள்ளை குட்டினு இருந்தா நான் ஏண்டா மத்தவளப் பத்தி வயிறு எரியுறேன். நாங்களும் ஏழெட்டு வருஷமா உன்னை கெஞ்சுறோம். நீ கிணத்துல போட்ட கல்லாட்டம் இருக்கியே. அவ மட்டும் அங்க ஏகபோகமா வாழுறா. நல்லா இருப்பாளாடா அவ'' மீண்டும் சபிக்கத் தொடங்குவாள்.

நாளாக நாளாக அம்மாவின் கூச்சல் அதிகரித்தது. ''நான் என்ன ஏழெட்டா பெத்து போட்டேன். ஆணொன்னு பெண்ணொன்னு ரெண்டத்தானே பெத்தேன். பொண்ணு வயித்திலதான் வாரிசை பார்க்க முடியல்ல. பையன் வாரிசையும் பார்க்காமலே நான் போயி சேர்ந்திடுவேன் போலிருக்கே. ஆண்டவா அவளைக் கேட்கமாட்டியா. சண்டாளி. எம் புள்ளையை நடைபொணமாக்கிட்டு போயிட்டாளே''- என தினம் தினம் ஏதாவது கூச்சல். கத்தல் வீட்டையே வெறுத்தான் ரகு.



'சாம்பார்லே என்ன 'செண்ட்' வாசம் வருது?'

'நீங்கதானே நான் வைக்கும் சாம்பாரிலே வாசமே இல்லேன்னீங்க, அதுதான் கொஞ்சம் 'செண்ட்' ஊற்றினேன்!'

- என்.குணசீலன், பட்டுக்கோட்டை.

இன்னொரு பெண்ணுடன் திருமணம் என்பதே வேம்பாக கசந்தது. ஆனால் இந்த அம்மா சபித்தே என் கோதையின் வாழ்வை அழித்துவிடுவாள் போலிருக்கிறதே. வேண்டாம். இனியும் அவளை சபிக்க விட வேண்டாம். வாழ்வோ தாழ்வோ அது என்னோடு போகட்டும். என் கோதை பூப்போன்றவள், அதிர்ந்து பேச விரும்பாதவள். வெகுளி. பயந்தவள். யார் என்ன பயமுறுத்தி அவளை மணக்கச்



செய்தனரோ. அதட்டினாலே அழுதுவிடுவாள். எப்படியோ சந்தோஷமாக வாழ்கிறாள் என்ற செய்தியே போதும். தன்னால் ஏன் அவன் சாபம் பெற்றுக் கொள்ள வேண்டும். வெகு நாட்களாக யோசித்து அன்னையிடம் மெதுவாகச் சொன்னான். ''அம்மா உன் விருப்பம் போல் கல்யாணம் செய்துக்கறேன். இனியும் உன்னை நோகடிக்க விரும்பல்ல. நீயே ஏதாவது ஒரு பெண்ணைப் பார்த்துச் சொல்'' என்ற போது இதயமே பிளந்தது போல் வலித்தது.

*இன்னொரு கைகளிலே யார்*
*யார் நானா- எனை*
*மறந்தாயா ஏன் ஏன் என்னுயிரே*
*சொன்னது நீ தானா!*

**2**

அதன் பின் எல்லாம் வெகுவேகமாக நடந்தேறியது. ஊர் கூடி உறவினர்கள் மத்தியில் விமரிசையாக நிச்சயதார்த்தம் நடைபெறும் வரை மணப்பெண் யாரென்றே தெரியாது. தெரிந்து கொள்ளவும் விரும்பவில்லை. யாருக்கோ திருமணம் என்பது போல் தான் இருந்தான். நிச்சயம் முடிந்த பின் மணப்பெண்ணின் தந்தை மகளின் திருமணம் தம் சொந்த ஊரில் தான் கோலாகலமாக நடக்க வேண்டும் என்ற பின் தான் ரகு கவனித்தான். அட கோபாலகிருஷ்ணன். அப்படியானால் திருமணம் நம் ஊரிலா நடக்கும். பெற்றோர்களின் முகம் பேயறைந்தாற் போலிருந்தது. ஓ! ஊரில் என்றால் கோதையை பார்க்க நேரிடும். பார்த்தால் தன் மனம் மாறிவிடும் என்று தவிக்கிறார்களோ?

தாயின் மீது பரிதாபம் தான் தோன்றியது. தாயை தனியே அழைத்து ''கவலைப்படாதேம்மா! உன் மனசு போல் நடந்துக்கறேன்'' என்றதும் தான் ரஞ்சிதம் சீராக மூச்சை விட்டாள் எனலாம். இருப்பினும் உதறலாகத்தான் இருந்தாள். வீட்டோட இரு. வேறெங்கும் போகாதே. அல்லது மதுவை அழைச்சிட்டு வெளியூர் போயிட்டுவா என முன்னூறு தரம் சொன்னாள்.

ஊருக்கு அனுப்ப மனமில்லை தான். ஆனால் மதுமிதாவும் விடுவதாக இல்லை. ''ஆன்ட்டி! இங்கயே இருந்தா அவர் சதா பிஸினஸ் மூடிலயே இருக்காரு. சிரிச்சுப்பேசக் கூட அவருக்கு டைம் இல்ல. இப்ப எங்கூட ஊருக்கு அனுப்பினா அவரை எந்த டென்ஷனும் இல்லாம சந்தோஷமா பார்த்துப்பேன். ப்ளீஸ் ஆன்ட்டி! நாங்களும் கொஞ்சம் 'லவ்' பண்ணுன மாதிரியும் இருக்கும்'' கன்னத்தைப் பிடித்து கொஞ்சிய போது மறுக்கவும் முடியாமல் போயிற்று. மனதிற்குள் கணக்கு போட்டாள்.

இவனும் அந்தப் பைத்தியக்காரியையே நினைத்துக் கொண்டிருக்கிறான். கண்ணுக்கு அழகான பெண் ஒட்டி உறவாடும் போது பழையது நினைவில் நிற்குமா என்ன? தவிரவும் மது இவனை விட்டு எங்கும் நகரப்போவது இல்லை. உடன் அனுப்பினால் என்ன? ஒரு முடிவை ரஞ்சிதம் எடுத்து விட்டால் அதற்கு அப்பீலே கிடையாது. அது கணவனாகட்டும் இல்லை மகனாகட்டும் மறுபேச்சு பேச அனுமதிக்கவே மாட்டாள். நின்ற

நிலையிலேயே நின்று சாதித்தும் விடுவாள். அந்த சாதனையால் தான் இதோ இந்த பயணம். இதில் எதற்கும் தன்னிடம் சம்மதமோ அபிப்ராயமோ கேட்கப்படவும் இல்லை. ரகு அதை விரும்பவும் இல்லை.

நிச்சயதார்த்தத்திற்கு முன்தினம் தான் அம்மா போட்டோவை நீட்டினாள். ''டேய்! இதான் பொண்ணு. நம்ம கணேஷ் கல்யாணத்திற்கு ஊருக்கு போனேன்ல. அப்பதான் இந்த சம்மந்தம் கேட்டு வந்தது. ரொம்ப பெரிய இடம். நம்ம ஊருதான். பொண்ணு கூட உன்னை ஏதோ மீட்டிங்க்ல பார்த்திருக்குதாம். அதிலயிருந்து இந்த மாப்பிள்ளை தான் வேணும்னு ஒத்தைக்கால்ல நிக்கிதாம். உம்மேல அவ்ளோ ஆசை'' என அடுக்கிக் கொண்டவளின் வார்த்தைகளில் ஒன்று மட்டுமே அவன் காதில் நின்று ஒலித்தது.

''கணேஷ் கல்யாணத்தின் போது வந்த சம்பந்தம்'' ஓஹோ. ஏற்கனவே பேசி முடித்துவிட்டுத்தான் தன் சம்மதம் பெறுவதற்காகவே அம்மா இத்தனை ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறாள். எது எப்படியோ! இனி மேல் கோதையை கரித்துக் கொட்ட மாட்டாள் என்ற ஆசுவாசத்துடன்

'' எல்லாம் உன் இஷ்டம்மா'' என்று சொன்னதோடு சரி.

திடீரென குழந்தை வீறிட்டு அழும் ஓசையில் சட்டென கண் விழித்தான். கைக்குழந்தையோடு அந்தப்பெண் போராடிக் கொண்டிருந்தாள். அது பசியில் வீறிட்டது. தாய்க்கோ அத்தனை ஆண்களின் நடுவில் குழந்தைக்கு பாலூட்ட கூச்சம். பதட்டம் சட்டென இருக்கையில் இருந்து எழுந்தான். ''இந்த ஜன்னலோரம் உட்கார்ந்து கொள்ளுங்கள்'' என்றவன் தன் பேகைத் திறந்து பெரிய சால்வையை எடுத்து அவளிடம் கொடுத்தான். ''இதைப்போர்த்திக் கொண்டு பசியாத்துங்க'' என்றவாறு நகர்ந்து சென்றான். ஓரிருவர் சாப்பிட்டுக் கொண்டிருக்க, பலர் குளிருக்கு இதமாய் போர்வையை போர்த்திக் கொண்டு உறக்கத்திற்கு தயாராயினர்.

அமைதியாக நடந்து சென்று வாசல் கதவை திறந்தான். குபீரென காற்று மோதி அவனை செல்லமாய் சீண்டியது. குளிர்ந்த காற்றை அதன் சிலிர்ப்பை கண் மூடி ரசித்தான். சட்டென அத்தனை பாரமும் நீங்கி இயற்கையோடு ஒன்றிவிட்டாற்போலிருந்தது. கரும்பொம்மைகளாய் கடந்து போன மரங்களைப் பார்த்தான். சிலுசிலுத்த ஓடையைப் பார்த்தான். மனம் மீண்டும் கோதையைத் தேடிச் சென்றது.

கோதை வேறுயாருமல்ல. ரஞ்சிதத்தின் உடன்பிறந்த அண்ணன் ராஜகோபாலின் மகள். தனக்கு ஆறு, ஏழு வயதிருக்கும் போது ஊரே தன் வீட்டின் முன் கூடியிருக்க, ராஜகோபால் மாமா தலையைக் கவிழ்ந்து இருந்தார். அருகே கண்களில் நீர் சொரிய கையில் குழந்தையுடன் அந்தப்பெண் அழுது கொண்டிருந்தாள். என்ன ஏது என்று புரியும் வயது தனக்கில்லை என்றாலும் அம்மா பேசியது இன்னும் நினைவில் மசமசப்பாக நிற்கிறது.

''உனக்கு எவ்வளவு தைரியம் இருந்தா இந்த பிச்சைக்காரியை கூட்டிட்டு வந்திருப்ப. அதுவும் கையில குழந்தையோட பார்த்தீங்களாப்பா உங்க மகனை. என்ன காரியம் செய்துட்டு வந்திருக்கான். இவனை நம்பி நான் எங்க மாமியார் வீட்ல வாக்கு கொடுத்திட்டேனே. எங்க அண்ணன் என் நாத்தனாருக்குத்தான்னு. இனிமே எப்படி அவங்க முகத்தில முழிக்கிறது காறி துப்பமாட்டாங்களா?



என்டா உம்புத்தி இப்படி போச்சு. நம்ம அந்தஸ்து என்ன? நம்ம குடும்ப மானத்தையே சந்தி சிரிக்க வைச்சிட்டியே. போச்சு. எல்லாம் போச்சு. நாளைக்கு எல்லாரும் வருவாங்களே பவுன் உருக்கன்னு. நான் என்ன செய்வேன். அடியே சதிகாரி. கல்லுளிமங்களாட்டம் இருந்து என் அண்ணனை வளைச்சுப் போட்டுட்டியே. நீ நல்லா இருப்பியா. பெரிய பணக்காரன் சொத்து பத்து நிறைய வரும்னு தானே எங்கண்ணனை மயக்கினே. ஒரு பைசா உனக்கு சேர விடமாட்டேன். எங்கப்பாவை என்ன ஏமாளின்னு நினைச்சியா அப்பா! வக்கீலை கூப்பிடுங்கப்பா. உயில் எழுதுங்க. நம்ம சொத்துல ஒரு பைசா கூட இவனுக்கு தரக்கூடாது'' அம்மா அந்த நேரத்திலும் காரியத்தில் கண்ணாகத்தான் இருந்தாள்.

மாமா தாத்தாவின் காலில் விழுந்து கதறியது இன்னும் நினைவிருக்கிறது. ''அப்பா என்னை நம்பி வந்துட்டா. அவளை என்னால விட முடியாதுப்பா. தங்கச்சி கல்யாணம் முடிஞ்சப்புறம் சொல்லலாம்னு இருந்தேம்பா. அஞ்சு வருஷமா அவளை விரும்புனேம்பா. நீங்க சம்மதிக்க மாட்டீங்களோன்னு பயந்து தாம்பா பத்திரகாளியம்மா கோவில்ல வைச்சு தாலி கட்டிட்டேன். இப்போ இவ்வளவு அவசரமா கல்யாண ஏற்பாடு ஆனதும் பயந்துபோய் கூட்டிட்டு வந்திட்டேப்பா. வசுமதி ரொம்ப நல்லவப்பா. எங்களை ஏத்துக்கங்கப்பா'' காலை கட்டிக் கொண்ட மகனை ஏறிட்டு பார்க்காமல் வேறு புறமாய் முகத்தை திருப்பிக் கொண்டார் தாத்தா. அவரது கண்கள் கூட கலங்கினாற்போல் தோன்றியது.

வசுமதி அத்தை ஒரு படி மேலே போய் நேரடியாக பாட்டி முன்பு போய் பாட்டியின் காலடியில் குழந்தையை கிடத்தி தானும் மண்டியிட்டு விழுந்தாள். ''அத்தை! நான் சொத்து சுகத்தை எதிர்பார்த்து உங்க மகனை விரும்பல அத்தை. உங்க மகனை மட்டும் தான் விரும்பறேன். இதோ உங்க பேத்தி. இவளுக்கு உங்க பேரைத்தான் வைச்சிருக்கேன். நீங்க ஏத்துக்கிட்டா நாங்க இங்க இருக்கோம். இல்லேன்னா எங்காவது கண்காணா தேசத்துக்குப் போயிடுறோம். நான் பணத்துக்காக வந்தவ இல்லை அத்தை. என்னை நம்புங்க.'' காலை பற்றி கதறியவளை பாட்டி கை நடுங்க தூக்கிவிட்டாள். ''பச்சை உடம்புக்காரி. இப்படி கதறாதம்மா. முதல்ல கண்ணீரைத் துடை'' என்றவாறு தரையில் கிடந்த தன் பேத்தியை வாரியணைத்தாள்.

''அடி! என் ராசாத்தி. பூங்கோதையா உம் பேரு. எங்காத்தா எனக்கு வைச்ச பேரை உங்காத்தா உனக்கு வைச்சாளா அடடா! என் வீட்டு குலவிளக்கு கழுத்து வெறுங்கழுத்தா கிடக்கே''- என்ற பாட்டி சட்டென தன் கழுத்தில் கிடந்த மூணு கொத்து சங்கிலியை கழற்றி குழந்தைக்கு போட்டாள்.

அவ்வளவு தான். பேயாட்டம் ஆடிவிட்டாள் அம்மா. ''எம்மா! உனக்கு என்ன புத்திபிசகிப்போச்சா. அந்த பிச்சைக்காரியோட பிள்ளைக்கு இருபது பவுன் சங்கிலியைத் தூக்கிப்போட்டியே. அப்பாவே சும்மாயிருக்கும் போது நீ எப்படி அவளை சேர்க்கலாம். என் புகுந்த வீட்டைப் பத்தி கொஞ்சமாவது நினைச்சியா. அந்த தரித்திரம் பிடிச்சவளை அனுப்பும்மா''

பாட்டி அதற்கு ஏதேதோ சமாதானம் சொன்னாள். ஆனால் ரகு வேறு

எதையும் கவனிக்கவில்லை. தாயின் கையை விலக்கிவிட்டு பாட்டிக்கு பின்னால் சென்று தோளில் கிடந்த அந்த பிஞ்சுப் பூங்கோதையை ஆர்வமாய் பார்த்தான். கொழு கொழு கன்னமும் தலை கொள்ளாத கருகரு கேசமும் கருந்திராட்சை விழிகளும் மஞ்சள் கிழங்காய் பொங்கிய அழகும் இன்னமும் கூட ரகுவின் மன ஆழத்தில் பசுமையாய் நிற்கிறது. பொக்கை வாய் காட்டிய சிரிப்பு இன்னும் கண்ணை விட்டு மறையவில்லை. உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால் அப்போதே பூங்கோதையை தன் மனதிற்குள் பூட்டிவைத்துக் கொண்டான் என்று தான் சொல்ல வேண்டும்.

ஒருவாறாக சமாதானம் செய்து வரிசையாய் இருந்த நான்கு வீடுகளில் ஒன்றில் மாமாவையும், அத்தையையும் குடியேற வைத்தனர். அம்மா தான் தீயாய் கனன்று கொண்டேயிருந்தாள். தன் மகளின் திருமணம் கைக்கூடி வந்து நின்று போனதில் அப்பாவின் அம்மாவிற்கும் மிகுந்த வருத்தம். எல்லோரும் குடும்பமாக வந்து சண்டை போட்டதில் கடைசியாக மகளையும் மருமகனையும் தன்னோடு வைத்துக் கொள்வதாக கூறி அவர்களை விரட்டியடித்தார் தாத்தா. சூட்டோடு அனைத்து சொத்துக்களையும் மகள் பேரிலேயே மாற்றியும் விட்டார். அதன் பிறகு தான் அமைதியானாள் ரஞ்சிதம்.

இதன் நடுவே மாமாவிற்கு அடுத்ததாய் ஒரு பெண் குழந்தை பிறக்க பாட்டி தான் மன்றாடினாள். ''தோ பாருங்க! உங்க மக பேச்சைக் கேட்டு எல்லாச் சொத்தையும் அவளுக்குக் கொடுத்தீங்களே. நான் ஏதாவது மறுத்தேனா. நீங்களும் இதை மறுக்கக்கூடாது. அவ ஏழையோ பாழையோ குணத்துல தங்கமாகத்தான் இருக்கா. ரெண்டு பெண் குழந்தைங்களாவும் ஆச்சு. பேசாம இப்ப அவன் இருக்கிற வீட்டையும் கிழக்கால இருக்கிற தென்னந்தோப்பையும் கொடிக்காலையும் மேற்கால இருக்கிற புளியந்தோப்பையும் அவன் பேரில மாத்திடுங்க. அவனும் புள்ளைங்களுக்கு சேர்க்கணுமில்ல''

தனது பள்ளிப்படிப்பு முடியும் தருவாய் அது. வார விடுமுறை நாட்களில் ஊருக்கு வந்தால் போகவே மனம் வராது. பாவாடை சட்டையில் வலம் வரும் பூங்கோதையை பார்க்க சலிப்பதே இல்லை. வளர்ந்த பையன் என்பதால் தன் முன்னிலையிலேயே பேச்சு தொடர்ந்தது. பாட்டி சொன்னதில் நியாயம் இருந்ததால் தாத்தா யோசனையாய் மகளைப் பார்த்தார்.

ரஞ்சிதம் பதறிப்போனாள். ''எம்மா! சொத்து எம்பேர்ல இருந்தா என்ன? அண்ணன் பேரில் இருந்தா என்ன? எல்லாம் அவனுக்குத்தானே. அம்மா சொன்ன தோட்டமெல்லாம் இப்பவும் அண்ணன் கைக்குள்ள தானே இருக்கு. அதுல வர்ற வருமானம் எல்லாம் நமக்கா வருது. அவன் தானே சேர்க்கிறான். இதே மாதிரி அவனே பார்த்துக்கட்டும். நான் என்ன வேண்டாம்னா சொல்லப்போறேன். ஆனா சொத்தை மட்டும் இப்ப அவன் பேருக்கு மாத்த வேணாம்ப்பா. ஏன்னா சொத்து கைக்கு வந்ததும் அந்த மாயக்காரி எல்லாத்தையும் சுருட்டிட்டு ஓடிட்டான்னா? அதுக்குத் தான் சொல்றேன்''

பாட்டி, தாத்தா இருவருமே மகளின் பேச்சைக் கேட்டு முகம் சுழித்த



னர். அவர்களுக்கும் மனசாட்சி இருக்கிறதே இத்தனை வருடங்களில் வசதி தனக்காக ஒதுக்கப்பட்ட எதிர்வீட்டிலிருந்து இந்த பண்ணை வீட்டிற்குள் ஒரு முறை கூட நுழைந்ததே இல்லையே. பாட்டி தன் பட்டுப்புடவைகளை கொடுத்தபோதும் நாசுக்காக அதை மறுத்து விட்டாள். மகன் வாங்கித் தந்த எளிய புடவையும் நகையும் தான் அணிந்து கொண்டிருக்கிறாள். அதன் பிறகு தான் பாட்டி வெற்றிலைக் கொடிக்காலையும் மகனிடம் ஒப்படைத்தார். வருமானம் கொழிக்கும் தோட்டம் அது. அப்படியும் அத்தை அதிகம் அலங்கரித்துப் பார்த்ததில்லை. ஆனால் பூங்கோதை காதில் கழுத்திலும் புதிது புதிதாய் மின்னும். அதற்கடுத்ததாய் பிறந்த ராசாத்தி கூட பட்டும் பொன்னுமாய்த்தான் மின்னியது.

ஆனால் அம்மா தான் வயிறு எரிந்தாள். ''என்னமா பெத்திருக்கா பாரு. சந்தனத்தை கடைந்தெடுத்தாப்போல. இதுகளுக்கு இவ ஏன் சேர்க்கணும். அதான் இதுகளே எவனையாவது இழுத்திட்டு ஓடுமே. ஒட்டு மொத்த அழகையும் குத்தகைக்கு எடுத்த மாதிரில்ல இருக்குது ரெண்டும். எங்கண்ணன் மாதிரி எவனாச்சும் இளிச்சவாயன் கிடைக்காமலா போயிடுவான்'' என சாடைமாடையாக பேசியே கொன்றாள்.

## 3

*முன்னொரு பிறவி எடுத்து வந்தேன்*
*உன்னிடம் மனதை கொடுத்து வந்தேன்*
*பெண்ணொரு பிறவி எடுத்து வந்தேன்*
*பேசியபடியே கொடுக்க வந்தேன்!*

''ஏய்! யாருப்பா வாசல்ல நிக்கிறது'' ஓங்கி ஒலித்த குரலில் திரும்பினான். போலீஸ் கையில் தடியுடன் நின்றிருந்தார். ''ஸாரி ஸார். கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிக்கலாம்னு'' பணிவாய் கூறியவனிடம் ''காலம் கெட்டு கிடக்குது ஸார். திருட்டுப்பயம் வேற. கதவை லாக் பண்ணுங்க. போய் படுங்க. லேடீஸ் குழந்தைங்க எல்லாம் தூங்கறாங்க. கதவை திறந்து போடாதீங்க'' என்றார்.

''ஓ.கே. ஸார். ஸாரி ஸார்'' என்றவாறு கதவை பூட்டினான். காபி, டீ என தன்னை தாண்டிப் போனவரை நிறுத்தி ஒரு டீ வாங்கிக் கொண்டான். இரண்டு வாய் குடிப்பதற்குள் வாய் கசந்தது. கச ந்தது வாயா மனமா? சட்டென வாஷ்பேசினில் கொட்டிவிட்டு அட்டை கப்பை நசுக்கி ஜன்னல் வழியே வெளியே வீசினான்.

எதிரில் இருந்த மங்கிய கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தான். இந்த ஒன்பது வருடங்களில் அப்படி ஒன்றும் பெரிய மாற்றமில்லை. கொஞ்சம் கறுத்திருக்கிறேனோ. சென்னை வெயிலின் மாயம் அது. மற்றபடி அதே உயரம். அதே பருமன். ஆண்களில் அத்தனை சீக்கிரம் மாற்றங்கள் நிகழ்வதில்லையோ. இல்லை தினமும் பார்க்கும் உருவம் என்பதால் தெரியவில்லையா? பூங்கோதை எப்படி இருப்பாள்? இந்த ஒன்பது வருடங்களில் மூன்று குழந்தைகளுக்கேனும் தாயாகி இருப்பாளோ?

கொஞ்சம் சதைபோட்டு குழந்தைகளிடம் போராடி சற்று தளர்ந்திருப் பாளோ? இருக்காது. அம்மா சொல்வதைப் பார்த்தால் வசதியான இடத் தில் வாழ்வது போலத்தான் தெரிகிறது. திருமணமாகி குழந்தைகள் பெற் றெடுத்து பூரிப்பாய் இருப்பாள். அவளது சந்தனமேனி இன்னும் பொலி வாய் மின்னும். சந்தோஷமாக வாழட்டும். எனக்கு கிடைக்காத அமைதி சந்தோஷம் எல்லாம் அவளுக்காவது கிடைக்கும்.

தன்னை எச்சரித்து விட்டுப்போன போலீஸ் பெட்டியின் முனைவரை சென்று திரும்பி வருவது தெரிய இதற்கு மேலும் நின்றால் அது வீண் சந் தேகங்களுக்கு இடம் கொடுக்கும் என முடிவு செய்து தன் இருக்கைக்கு வந்தான். அந்தப்பெண் குழந்தைக்கு தூளி கட்டி ஆட்டியவாறு அமர்ந்தி ருந்தாள். குழந்தை அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது. லேசாய் எட் டிப்பார்த்தான். உதட்டை இறுக மூடிக் கொண்டு இரு பிஞ்சுக் கைகளை யும் தலைக்கு மேல் தூக்கியவாறே அசந்து தூங்கிக் கொண்டிருந்தது. கவ லைகளற்ற நிம்மதியான தூக்கம். எதிர்பார்ப்பும் ஏமாற்றமும் தோல்விக ளும் அற்ற தூக்கம். குழந்தையாகவே இருந்து விட்டால்...

"அண்ணே" "ம்" கலைந்து திரும்பினான். அந்த பெண் தான் நின்றி ருந்தாள். கையில் மடித்து வைத்திருந்த சால்வையை அவனிடம் கொடுத் தாள். "ரொம்ப தாங்க்ஸ் அண்ணே" "பரவாயில்ல. பரவாயில்ல. குழந் தைக்கு என்ன பேரு" "ஜெயஸ்ரீன்னு வைச்சிருக்கோம்."

"ஓ! நைஸ் நேம். "அண்ணே! இது உங்க சீட் தானே. எனக்கு மேலே உள்ள சீட். குழந்தையை வெச்சிகிட்டு மேலே போய் படுக்க முடியாது. அதனால" "நோ பிராப்ளம் நான் அப்பர்ல படுத்துக்கிறேன். இட்ஸ் ஓ.கே." என்றவாறு குனிந்து சீட்டுக்கடியில் இருந்த தனது பேகை எடுத்து மேலே உள்ள பெர்த்தில் போட்டுவிட்டு செருப்பை கழற்றிவிட்டு மேலே ஏறி தலைக்கு பேக்கை வைத்து நீட்டி படுத்துக் கொண்டான். படுத்த பிறகு தான் உடம்பின் அலுப்பு தெரிந்தது. அதையும் மீறி பழைய ஞாப கங்கள் நெஞ்சை கீறி வெளியே வந்தன. அப்படியானால் இத்தனை ஆண் டுகளாகியும் இந்த நினைவுகள் எனக்குள் புதைந்து போகவில்லையா? புதைந்து போனதாய் நான் தான் நினைத்துக் கொண்டிருந்தேனா? கட வுளே! என் மனம் ரணமாய் வலிக்கிறதே. இந்த வலியுடன் எப்படி இன் னொரு பெண்ணுடன் என்னால் வாழ முடியும்.

'தூங்கி எழுந்து வர்ரப்பவே மருமகள் கோபமாக வருகிறாள்...'
'நீ எப்படிடி கண்டு பிடிச்சே?'
'காலண்டரில் நாலு தேதியை ஒண்ணாக் கிழிக்கி றாளே!'

-எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி.





என் முடியாது? நீ இல்லையென்றால் செத்து விடுவேன். என்றவள் பிள்ளை குட்டியோடு வாழவில்லையா? மனசாட்சி இடித்தது. இல்லை அவ ளுக்கு என்ன சூழ்நிலையோ. நான் வருவேன் என்று காத்திருந்து தவண்டி ருப்பாள். யார் என்ன சொல்லி மிரட்டி பணிய வைத்தனரோ? அம்மா சொன்னது போல் முழு மனதோடு சம்மதித்திருக்க மாட்டாள் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. அவனுக்கு தெரியாதா கோதை யைப் பற்றி?

"ஏய் நில்லுடி" வழி மறித்த ரகுவைப் பார்த்து மிரண்டு தன் தங்கையை இறுகப்பற்றிக் கொண்டாள் கோதை. மற்றொரு கையில் இருந்த தூக்கு வாளி நடுங்கியது. பீறிட்டு வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு விரைப்பாய் கேட்டான்.

"ஏய்! என்டி என்னை கண்டா இப்படி ஓடுற. நான் என்ன பேயா பிசாசா ம்" அதட்டியவனை நிமிர்ந்தும் பாராமல் தன் தங்கையின் பின் ஒண்டிக்கொண்டாள். "ஏய்! காப்பாடி. ஓடு வீட்டுக்கு. நான் உங்க அக்கா வோட பேசணும்" ராசாத்திக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

"ந்தா! நான் ஒண்ணும் காப்பாடி இல்லை. நல்லா வளர்ந்துட்டேன். பதிமூணு வயசு ஆகுதுல்லா"

"சரிங்க பாட்டி! நீங்க முன்னால போங்க. நான் அக்காகிட்ட பேச ணும்" "ஊஹூம்"-அவசரமாய் மறுத்தாள் கோதை.

"இதோ பாருடி! சும்மா சும்மா உன் பின்னாடி என்னால அலைய முடி யாது. வாரத்தில ரெண்டு நாள் தான் ஊர்ல இருக்கேன். படிப்பு படிப்புன்னு அம்மா வெளியூருக்கு துரத்திடுது. ஊருக்கு வர்றதே உனக்குன்னு தெரி யாதா? என்னைக் கண்டாலே ஓடுறே. இல்லே வீட்டுக்குள்ளே பதுங்கி டுற. என்னதான் நினைச்சிட்டிருக்கே. பாட்டி சாகும் போது எப்படியா வது பூங்கோதையை கட்டிக்கன்னு சொன்னதுனால தான் பார்க்கிறேன். இல்லேன்னா சரிதான் போடின்னு போயிட்டே இருப்பேன்."

விசும்பல் கேட்டது. சட்டென பேச்சை நிறுத்தினான். முகத்தை மூடி யவாறே விசும்பினாள் கோதை. கையில் தூக்கோடு ரகுவிடம் சைகை காண்பித்துவிட்டு நகர்ந்தாள் ராசாத்தி. ரகு கைகளைக் கட்டிக் கொண்டு அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். விக்கி விக்கி அழுதாள். அதற்கு மேலும் தாளாது மெல்ல அவளருகில் வந்து முகத்தை மூடியிருந்த கைகளை விலக்கினான். தீயை மிதித்தாற் போல் துள்ளி விலகினாள் கோதை.

"ஏய்! ஏய்! மெதுவா. என்டி என்னைப் பார்த்து பயந்து சாகறே. என் மேல ஆசை இல்லாமலா இத்தினி கண்ணீர் வருது. ம். சொல்லு என் னைப் பிடிக்கலியா? பிடிக்கலன்னா சொல்லிடு. இனிமே லீவுக்கு ஊருக்கு வரமாட்டேன். சொல்லு நான் வரணுமா வேண்டாமா?"-பதி லில்லை சற்று நேரம் பொறுத்திருந்தான்.

கோபமாய் கிளம்ப, "என்னைப் பார்க்காம உன்னால இருக்க முடி யுமா?" விசும்பலூடே பதில் வந்தது. நிம்மதி பெருமூச்சு விட்டான்.

"அப்பா! பேசிட்டியா! ம் முடியாது தான். உன்னைப் பார்க்காம இருக்க முடியாததால தானே சனி ஞாயிறுன்னா விழுந்தடிச்சு ஓடி வர் றேன். அதிலயே என் மனசு புரியலியா உனக்கு"-பாவமாய் கேட்டான்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டே நிமிர்ந்து பார்த்தாள். ஒரு வினாடிதான். சட்டென தலையை தாழ்த்திக் கொண்டாள். எத்தனை நாள் பார்க்க ஏங்கிய முகம். ஆனால் நேரில் பார்க்க முடியவில்லையே பதறினாள்.

''ஐயோ! ராசாத்தி'' கையமர்த்தினான்.

''இரு.இரு. அவ எங்கேயும் போகல்ல. தோட்டத்திற்கு வெளிய தான் நிக்கிறா. யாராவது வந்தா குரல் கொடுப்பா.''

''இல்ல நான் போகணும் நேரமாச்சு.'' ''ஏண்டி பறக்கிற. என்கிட்ட பேச உனக்கு ஆசையில்லையா. எனக்கு எப்பவும் உன் முகத்தை பார்த்திட்டே உன் கூடவே இருக்கணும் போல் இருக்கே கோதை. இனிமே எனக்கு படிப்பு அதிகமாகும். அதனால நினைச்ச நேரமெல்லாம் வரமுடியாது.''

விலுக்கென மீண்டும் கண்கள் கலங்கின. ''ஆனா உனக்காக எப்பல்லாம் நேரம் கிடைக்குதோ அப்பல்லாம் வந்துடுவேன். நான் வந்தது தெரிஞ்சதும் இதே இடத்துக்கு இந்த நேரம் வந்திடணும் சரியா. அப்பத்தான் உனக்கும் பயம் தெளியும். நல்லாபுரிஞ்சுக்க கோதை. நான் வர்றது உனக்காகத்தான் உன் முகத்தை பார்க்கத்தான் என்ன புரியுதா?''

''ம்''-தலையாட்டினாள். ''சரி, அடுத்தவாரம் நான் வர்றப்ப உனக்கு என்ன வாங்கிட்டு வரட்டும்?'' இயல்பாக பேச்சைத் தொடர்ந்தான்.

''எதுவும் வேணாம் அத்தான். நீ வந்தாலே போதும்''

''இரு. இரு. என்ன சொன்னே'' புரியாமல் விழித்தாள். ''எதுவும் வேணாமுன்னு'' ''இல்ல! அதுக்கு அப்புறம் எதுவோ சொன்னியே''- ''நீ வந்தாலே போதும்னு''... ''ம்ப்ச். இல்லடி! அதுக்கு முன்னால என்னை என்னவோ சொன்னியே... சொல்லு சொல்லு''-கண்களில் குறும்பும் ஆர்வமும் கொப்பளிக்க அவன் கேட்ட போது தான் கோதை உணர்ந்தாள்.

''ஐயோ''-கையை உதறிக் கொண்டே ஓடத்தயாரானவளை கப்பென கையைப்பற்றி நிறுத்தினான். ''இன்னிக்கு உன்னை விடுவதாக இல்லை. சொல்லு ஒரே ஒரு வாட்டி சொல்லுடி. உன்வாயால அந்த வார்த்தையைக் கேட்கணும் போல இருக்கு. பிளீஸ் என் செல்லம் இல்ல நீ சொல்லுடி.''

கோதையை வெட்கம் பிடுங்கித் தின்றது. தனது கையைப் பற்றியிருந்த அவனது வலியகரம் அவளை என்னவோ செய்தது. உடல் முழுவதும் வெடவெடத்தது. மின்சாரம் தாக்கியது போல் சிலீரென்ற பனிக்கட்டிகளை மொத்தமாய் கொட்டியதுபோல். யாரும் பார்த்து விட்டால் என்பது போன்ற அச்சம் ஒருபுறம். ''ம். முதல்ல கையை விடு. பயம்மா இருக்கு.''

''அதெல்லாம் முடியாது. சொல்லு விடுறேன்.''-அவன் பிடிவாதமாய் நிற்கவும், தயங்கி பின் மெல்ல வாய்திறந்தாள்.

''அ..த்..தான்''

உடல் முழுவதும் சிலிர்த்தது ரகுவிற்கு. ஒருகணம் கண்களை மூடி அதை ரசித்தான். ''இன்னொரு முறை சொல்லுடி''- கண்களை மூடியவாறே கேட்ட அவனை அணுஅணுவாய் ரசித்தாள். இவன் என்னவன். இந்த பேரழகனின் மனதில் நான் தான் இருக்கிறேன் என்ற கர்வம் வந்தது. மெல்ல அவனருகில் நெருங்கி அவன் காதருகே சற்று எம்.பி,



''அத்தான்.. அத்தான்.. அத்தான்.. அத்தா.....ன்'' என கிசுகிசுத்தாள். அவள் மீது மல்லிகை மணமும் சந்தனமணமும் கமழ்ந்தது. உதடுகளின் சரம் காதை உரச உடல் நரம்புகள் அத்தனையும் விடைக்க சட்டென கண் திறந்தான். தன் கைகளை உருவிக் கொண்டு ஜல்ஜல் என்று கொலுசோடு சேர்ந்து சிரித்தவாறே ஓடி மறைந்தாள்.

அதன் பின் அவளைப் பார்க்கும் நாளெல்லாம் திருநாள் தான் அவனுக்கு. பாட்டியின் பின்னே தாத்தாவும் மறைந்து விட ரஞ்சிதம் மாமா வீட்டில் அவளை யாரும் காணவிடுவதில்லை. லீவிற்கு ரகு வந்தால் கூட ''நீ இப்படி வாரந்தோறும் வந்தால் எப்படி படிப்பது? மாதம் ஒரு முறை வந்தால் போதாதா''- என புலம்ப ஆரம்பித்தாள்.

ஆனால் அவற்றை காதில் வாங்குவதாக இல்லை ரகு. ராசாத்தியின் துணையோடு இவர்களின் சந்திப்பு தொடர்ந்தது. இந்த சமயத்தில் தான் இறுதித் தேர்வு வர இரண்டு மாதங்களாக ஊருக்கு வர முடியாமற் போயிற்று. தேர்வுகள் அனைத்தும் முடிந்து லீவில் வீடு வந்தவன் கோதையைப் பார்த்து அதிர்ந்துதான் போனான். இளைத்து வாடி வதங்கியிருந்தாள். கோலம் போட வெளியே வரவில்லை. ஜன்னல் வழியே பார்த்தது தான்.

சரி வழக்கமாக சந்திக்கும் புளியந்தோப்பில் மணிக்கணக்காக காத்திருந்தான். நேரம் தான் சென்று கொண்டு இருந்ததே தவிர அவள் வரவே இல்லை. தவித்து தான் போனான். இந்த ராசாத்தி கூட கண்ணில் படவில்லையே. யாரிடம் கேட்பது? என்னவென்று விசாரிப்பது. நேர்எதிர்வீடாய் போயிற்றே. அம்மாவின் கண்ணைத் தப்பி அவள் வீட்டிற்கு போகவும் முடியாமல் பித்து பிடித்தது போலானான்.

## 4

***இங்கு நீயொரு பாதி நானொரு பாதி***
***இதில் யார் பிரிந்தாலும் வேதனை பாதி***
***காலங்கள் மாறும் காட்சிகள் மாறும்***
***காதலின் முன்னே நீயும் நானும் வேறல்ல...***

மாடியில் உள்ள தன் அறையில் குறுக்கும் நெடுக்குமாய் ரகு நடந்து கொண்டிருந்தான். பால்கனியில் சென்று பார்த்தான். கோதையின் அறை ஜன்னல் இறுக சாத்தியிருந்தது. என்னதான் ஆயிற்று இவளுக்கு? ''டேய் ரகு! சீக்கிரம் சாப்பிட வா. எனக்கு வேலை இருக்கு''- கீழேயிருந்து ரஞ்சிதம் குரல் கொடுத்தாள்.

''எனக்கு பசிக்கல்ல. சாப்பாடு வேண்டாம்''- சற்று பலமாகவே குரல் கொடுத்தான். அப்படியாவது ஜன்னலை திறந்து விடமாட்டாளா? ஊஹீம். ஏமாற்றம்தான் மிஞ்சியது. ''டேய் ராகவன் மாமா பொண்ணுக்கு வளைகாப்புடா. அம்மா போகணும். வர மத்தியானத்துக்கு மேல ஆகும்டா. நீ சாப்பிட்டா தான் கிளம்புவேனில்ல''

உற்சாகம் ஊற்றெடுக்க சட்டையை மாட்டிக் கொண்டு மடமடவென கீழே இறங்கினான். ''சாப்பாட்டை டைனிங் டேபிளில் வெச்சிட்டு

போம்மா! நான் சாப்பிட்டுக்கிறேன்''- என சாப்பிட அமர்ந்தான். ரஞ்சி தம் புடவை மாற்றி நகைகளை அணிந்து காரில் ஏறும் வரை பொறுமை யாக கொரித்துக் கொண்டிருந்தான்.

கார் தெருமுனையை தாண்டியதும் ஓடிச்சென்று கைகழுவினான். வேலைக்கார பெண்ணை அழைத்து ''நான் முக்கியமான வேலையா வெளியே போறேன். அப்பாவோ, யாரோ போன் பண்ணினா அட் டெண்ட் பண்ணு''- என்றவாறே வெளியே வந்தான். நடமாட்டம் இல் லாமல் வெறிச்சோடி இருந்த தெருவைப் பார்த்தான்.

நேராக நடந்து சென்றான். கதவில் கைவைத்து ''அத்தை அத்தே'' என குரல் கொடுக்க, கதவை திறந்த பூங்கோதை மயங்கி விழாத குறை தான். ஆதாரமாக கதவைப் பற்றிக் கொண்டாள்.

''நீங்க.. இங்க...''தடுமாறினாள். ''உள்ளேகூப்பிடுடி.. நகர்ந்து போ. வாப்பா ரகு. உள்ளே வா''-இயல்பாய் வரவேற்ற தாயை ஆச்சரியமாய் பார்த்தாள் கோதை. ''என்னடி அப்படி பார்க்கிற. ரகு எப்பவுமே என்னை வெறுத்ததில்லை. சின்ன வயசில இருந்தே. நாங்க வெளியில பார்த்தா பேசிக்குவோம். வாப்பா. உட்கார். என்னப்பா ஏதாவது முக்கியமான விஷ யமா?. வீடு வரைக்கும் வந்திருக்க. அம்மா வீட்ல இல்ல?'' -வசுமதி சாதா ரணமாய் கேட்க பதில் சொல்ல முடியாமல் திணறியவனின் கண்கள் ஓரி டத்தில் நிலைத்து ஆச்சரியப்பட்டு பின் மலர்ந்தது.

அங்கே உலக்கையின் அந்தப்புரமாய் மூலையில் வெட்கப்பட்டு கொண்டு அமர்ந்திருந்தாள் ராசாத்தி. ''ஐயோ! அத்தை நான் வரக்கூ டாதோ. நான் இதை யோசிக்கவேயில்லை. லீவில வந்தேன். வந்து பத்து நாளாச்சு. இரண்டு வாலுமே கண்ணில் படல்ல. அதான் என்னன்னு''- வாய்தான் பேசியதே தவிர கண்கள் அறைக்குள் சென்று மறைந்த கோதை யைத் தேடி ஏங்கியது.

''அது ஒண்ணுமில்லப்ப. ராசாத்தி உட்கார்ந்துட்டா. பெரிசு தான் ஒரு பல்லியை பார்த்தாக் கூட அலறுமே. அவளுக்கா தோணினா தங்கைய கூட்டிட்டு அப்பாவுக்கு சாப்பாடு எடுத்துட்டு போவா. இல்லன்னா வீடே கதின்னு கிடப்பா. இப்போ ராசாத்தியால வெளியே போக முடியாதா? அதான் இடிஞ்சு போயி கட்டிலிலேயே முடங்கி கிடக்கிறா. எதுவும் பேச வும் மாட்டா. எதுவும் சொன்னாத்தானேப்பா நமக்கு தெரியும். இவளை நினைச்சாத்தான் எனக்கு பயம்மா இருக்கு. கல்யாண வயசாகுது பாரு. எலும்பும் தோலுமா நிக்கிறா. உடம்புக்கு எதுவும் பண்றதான்னா பதிலும் இல்லை. உடனே அழுகைதான் வருது. அதான் இன்னிக்கு சாயங்காலம் அய்யனார் கோவிலுக்கு கூட்டிப் போய் தண்ணியெறியலாம்னு இருக் கேன்''- பேசிக் கொண்டே காபிகலந்து கொண்டு வந்தாள். ''இந்தாப்பா இதைக் குடி. மாட்டுக்கு கொஞ்சம் வைக்கோல் அள்ளிப் போட்டுட்டு வர்றேன்.''-என்றவாறு பின் கட்டிற்குசென்றாள். காபி டம்ளரை வைத்த வன் வேகமாக எழுந்து பூங்கோதையின் அறையை நோக்கி சென்றான். அவன் வருவதை உணர்ந்ததும் பட்டென கதவை மூடினாள்.

ரகுவிற்கு முகத்தில் அறைந்தாற் போலிருந்தது. விர்ரென கோபம் எழுந்தது. ''இதோ. பாருடி. உம் மனசுல என்ன நினைச்சிட்டு இருக்க?. நான் ஒருத்தன் பத்துநாளா பைத்தியக்காரன் மாதிரி சுத்திட்டு வர்றேன். நீ



எதைப் பத்தியும் கவலைப்படாமே வீட்டுக்குள்ளயே கிடக்கிற. வீடு தேடி வந்தா கதவைப் பூட்டுற. இதை விட மோசமா யாரையும் அவமானப்ப டுத்த முடியாது. நல்லா கேட்டுக்கோ இன்னும் ஒன் அவர் டைம் தர்றேன். அதுக்குள்ளநீ தோட்டத்துக்கு வர்ற இல்ல. இதுதான் நான் உங்கிட்ட பேசற கடைசி பேச்சா இருக்கும். உடனே கிளம்பி ஊருக்குப் போயிடுவேன். சரியா ஒரு மணி நேரம் தான் உனக்கு டைம்'' -கடுமையாய் மொழிந்து விட்டு புறப்பட்டவன் ''அத்தான்''-என்ற அழைப்பில் நின்றான்.

திரும்பினான். கதவு திறக்கப்படவில்லை. அப்படியென்றால் அழைத்தது?'' நான் தான் அத்தான் கூப்பிட்டேன்''-ராசாத்தியின் குரல். சட்டென கோபத்தை குறைத்து ''என்னம்மா? ''-என்றவாறு அவளருகே சென்றான்.

''அத்தான்! நீங்க கோபப்படாமப் போங்க. நான் அக்காவ அனுப்பு றேன். அக்கா ஏன் இப்படி பண்றான்னு தெரியல்ல. ஆனா எப்பவும் உங் களைத் தான் நினைச்சி நினைச்சி அழுதிட்டே இருக்கா. நீங்க ஏன் இவ்ளோ நாள் வரல்ல''.

''பரீட்சைடா. அதான் பரீட்சை முடிஞ்சு மொத்தமா லீவுக்கே வந்தி டலாம்னு'' ''சரித்தான். அம்மா வர்ற மாதிரி இருக்கு. நீங்க போங்க. அக்கா வருவா''.

''என்னப்பா கிளம்பிட்ட.''- என்றவாறு வந்த வசுமதியிடம் தனது சட்டைப் பையிலிருந்து ஒரு சிறிய நகைப் பெட்டியைக் கொடுத்தான். ''அத்தே! கல் ஜிமிக்கி அம்மாவோட சார்பா நான் தர்றேன். இந்த காப்ப டிக்கு என்னோட சின்ன பரிசு''- என புன்னகையோடு கூறி விட்டு மீண் டும் ஒருமுறை சாத்தியிருந்த கதவை பார்த்து விட்டு கிளம்பினான்.

எத்தனை முறை தான் கேட்பது? கேட்டு கேட்டு சலித்து விட்டான் ரகு. கோதையின் வாயிலிருந்து ஒரு வார்த்தை கூட வரவில்லை. அழுது முகம் வீங்கி கண்கள் ரத்தமென சிவந்திருந்தன.

''என்னடி ஆச்சு உனக்கு? முதல்ல அழுறத நிறுத்து. என்ன நடந்த துன்னு சொல்லமாட்டே.. சரிநான் இப்ப என்ன பண்ணனும். அதையா வது சொல்லு''-விசும்பல் நின்றது.

''ஏன் அத்தான் உனக்கு நான் வேண்டாமா''- குழப்பமாய் பார்த்தாள். ''என்னடி சொல்றே. நீ வேணும்னுதானே லோலோன்னு அலையுறேன்.''

'சாப்பாடு வேணும்னு தலைவரி டம் 'உண்டி கொடுத்தார் உயிர் கொடுத்தார்'னு சொன்னேன். தலை வர் உடனே...!'

'சாப்பாடு போட்டாரா?'

'உண்டி'யைக் கொடுத்து அனுப் பிட்டார்!'

-எம். அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி.



''பொய்! நீ பொய் சொல்றே.'' மீண்டும் அழ ஆரம்பிக்க, ''அப்படியே ஓங்கி ஒன்னு போட்டாத்தான் சரிப்படுவே. முதல்ல அழறத நிறுத்து. அழுதா போயிடுவேன். இருக்கவா? போகட்டுமா?''

''எனக்குத் தெரியும் நீ என்னை விட்டு போயிடுவேன்னு. இல்லேன்னா எனக்கு நீயே மாப்பிள்ளை பார்த்து அனுப்புவியா''-அழுகை நின்று கோபம் கொப்பளித்தது

ரகு கலவரமானான். ''ஏய்! என்னடி சொல்றே! நான் உனக்கு மாப்பிள்ளை பார்த்தேனா? எந்த முட்டாப்பய அப்படிச் சொன்னான். யாருடி அவன்?''

''அவன் அப்படித்தான் சொன்னான். அதான் பக்கத்து ஊரு மாடசாமி இல்ல, அவன் மகனாம். டவுன்ல தான் ஏதோ வேலை செய்யிறானாம். நாலஞ்சு பேரோடு வந்து பொண்ணு பார்த்துட்டு போனான். கட்டுனா என்னைத்தான் கட்டுவானாம்'' - சொல்லும்போதே குரல் கம்மியது கோதைக்கு.

விஷயம் விபரீதம் என்று புரிந்தது. ''மாமா என்ன சொன்னார்?''- என்றான் சுருக்கமாக.

''அப்பாவிற்கென்ன? என் தங்கை மகன் நம்மேல் எவ்வளவு அக்கறை வைத்துள்ளான். அவன் பார்த்த மாப்பிள்ளையை விசாரிக்கவே வேண்டாமே? என் தங்கை தான் என்னை ஒதுக்கி விட்டாள். இவனாவது மாமனை மறக்காமல் வெறுக்காமல் இருக்கிறானே என்று தலைகால் புரியாமல் இருக்கிறார்.

''நீ என்ன சொன்னாய்?''- கேட்டவளை கூர்ந்து பார்த்தான்.

''அத்தான்! நீ யாரை வேண்டுமானாலும் கட்டிக் கொள். நான் தடுக்கமாட்டேன். ஆனால் எனக்கு தயவு செய்து யாரையும் இப்படி அனுப்பாதே. சாகும் வரை உன் நினைவோடு வாழ்ந்திடுவேன். ஆனா இன்னொருத்தனுக்கு மனைவியா வாழ்வேன்னு கனவு கூட காணாதே. நீ இல்லேன்னு ஆனப்புறம் எனக்கு என்ன வாழ்க்கை? வேண்டாம். யாருக்கும் பாரமா இடைஞ்சலா இல்லாம நான் செத்துப் போயிடுறேன்.''-குரலில் உறுதி இருந்தது. உண்மையாகவே பயந்து போனான் ரகு.

''இதோபாருடி. அசடாட்டம் பேசாதே. நீ இப்போ யாருக்கு பாரம்? யாருக்கு இடைஞ்சல்? முதல்ல அதைச் சொல்லு''

''எனக்கு எல்லாம் தெரியும் அத்தான். என்ன இருந்தாலும் நான் பட்டிக்காடு. படிக்காதவ. வசதியும் கிடையாது. உனக்கு நான் எந்த விதத்திலும் பொருத்தம் கிடையாதுதான். நீ தேர்ந்தெடுத்தவ தான் உனக்கு சரியான ஜோடி. நான் போயிடறேன் அத்தான்''- விலகி நடந்தவளை இழுத்து நிறுத்தினான்.

''ஐயோ! எனக்கு தலையே சுத்துது. என்னைச் சுத்தி என்ன நடக்குதுன்னே எனக்கு புரியல்ல. நான் யாரைத் தேர்ந்தெடுத்தேன். என்ன பைத்தியக்காரத்தனமான பேச்சு இது. யார் உன்னை இப்படி குழப்பியது. பாருடி. என்னைப் பத்தி உனக்கு தெரியாதா?

ஏன்டி என்னைக் கொல்றே'' ஒரு நொடி அவனையே பார்த்தாள்.

''அத்தான்! எனக்கு ஒரே ஒரு ஆசை. கேட்டா தப்பா நினைச்சுக்கமாட்டியே''.



''கேளுடா! உன்னைப் போயி தப்பா நினைப்பேனா?''

''எனக்கு... எனக்கு.. ஒரே ஒரு முறை உன்னை இறுகக் கட்டிக்கணும் போல இருக்கு. கட்டிக்கவா'' ஏதோ புரியாத பாஷையை கேட்டது போல் மலைத்துநின்றவனை நெருங்கி அணைத்துக் கொண்டாள். உடும்புப்பிடி. ஒரு கணம் மூச்சு விடவும் மறந்தான். என்ன ஏது என்று புரியும் முன் விலகினாள்.

''இது போதும் அத்தான் எனக்கு! உன் கூட நூறு வருஷம் வாழ்ந்த நிம்மதி வந்திடுச்சி. இனிமே நான் எதுக்கும் அழமாட்டேன். கலங்கமாட்டேன். இது போதும் எனக்கு நான் போறேன்.'' -அவன் சுய நினைவிற்குள் வருமுன் அவனை விட்டு விலகி நடந்தாள். மாலை மயங்கிக் கொண்டிருந்தது ரகுவின் மனதைப் போலவே.

## 5

*பறவை பறந்து செல்ல விடுவேனா*
*அந்த பரம்பொருள் வந்தாலும் தருவேனா*
*உன்னை அழைத்துச் செல்ல எண்ணும்*
*தலைவனிடம்*
*என்னையே நான்தர மறுப்பேனா!*

தன் விரல் கூட தொட அனுமதிக்காதவள் இன்று தன்னை இறுக்கி அணைத்த விதம் ரகுவை தூங்கவிடவில்லை. புரண்டு புரண்டு படுத்தான். பசிதாகம் எதுவும் இல்லை. அந்த ஒரு கண இன்பம் உடல் முழுவதும் இனித்தது. அவளது மெத்தென்ற பூவுடல் இம்சித்தது. ஊஹூம் இனியும் தாங்காது. படித்த வரை போதும். மேலே மேலே படிக்கிறேன் பேர்வழி என்று வெளியூர் செல்வது சரியல்ல. ஏற்கனவே பூங்கோதை வெகுவாய் குழம்பியிருக்கிறாள். யாரவன்? என் பெயரைச் சொல்லிக் கொண்டு பெண்கேட்டு வந்தவன்? என்ன துணிச்சல்? விடியட்டும். வர்றேன்டா உன்னை துவைத்துப்போட... அம்மாவின் காதிலும் போட்டு வைக்க வேண்டும்.

பாட்டி இருந்தால் விசயம் சுலபமாக முடிந்து போயிருக்கும். அம்மாவின் ஆட்டம் செல்லாத ஒரே இடம் பாட்டிதான். தன் இறுதிநாளில் பாட்டி சொன்னது நினைவுக்கு வந்தது. ''தம்பி ரகுநாதா! பாட்டி சீக்கிரம் போயிடுவேன்ப்பா. நான் போனப்புறம் உங்கம்மா மாமன் குடும்பத்தை இங்க இருக்கவிட மாட்டா. சொத்து பூரா உன் அம்மாமேல தான் இருக்கு. உன்மாமன் பாவம்ப்பா. வாயில்லாபூச்சி. அதே மாதிரி பெண்டாட்டியும் அமைஞ்சிட்டா, தோபாருப்பா! மாமன் குடும்பத்தை தவிக்கவிட்டுடாதே. என்பேத்தி பூங்கோதையை நீ கல்யாணம் பண்ணிடு. சொத்தும் போகாது. சொந்தமும் கைவிட்டு போகாது. பாட்டி சொல்றேன்னு நினைக்காதேப்பா. பூங்கோதை அபூர்வமான தங்கம். அதை குப்பையில வீசிடாதீங்க. என்பேத்தியை உன் மனைவியாக்கிடு. நீ நல்லா வாழ்வ''-இதை அம்மாவும் கேட்டிருக்க வேண்டும். அதனால் தான்

பாட்டி இறந்த பின் தன்னை வெளியூர் அனுப்புவதிலேயே குறியாக இருந்தான்.

இனி தாயின் விருப்பத்திற்கு வளையக் கூடாது. முதலில் தந்தையிடம் சொல்லி தாயின் காதிற்கு செய்தி அனுப்ப வேண்டும். மறுத்தால் சென்னையிலிருந்து அக்காளை வரவழைக்க வேண்டும். அக்கா சொன்னால் அம்மா நிச்சயம் கேட்பாள். அக்கா மீது அம்மாவிற்கு தனி பிரியம். அதுவும் திருமணமாகி நான்காண்டு ஆகியும் குழந்தை பிறக்காததால் பரிவும் பாசமும் அதிகம்.

பலவித எண்ணங்களோடு விழிமூட மறந்தவனின் காதில் நடுநிசியை இழித்துக் கொண்டு எழுந்த பெருங்குரல் ஓலம் பேரிடியாய் கேட்டது. சட்டென எழுந்தான் யார்? யாரித்தனை பெரிதாய் அலறியது. வேகமாய் எழுந்து அறைவிளக்கைப் போட்டான். பால்கனியில் நின்று கீழே பார்க்க பூங்கோதையின் வீடு தான் போர்க்களமாய் தோன்றியது.

நான்கு நான்கு படிகளாய் தாவி இறங்கி வாசலுக்கு ஓடியவனை வாசற்படியில் சாய்ந்துநின்ற ரஞ்சிதம் குறுக்கே கை நீட்டி தடுத்தாள்.

''எங்கேடா போற இந்த அர்த்த ராத்திரியில''-குரல் இறுகிப் போய் வந்தது.

''அம்மா! மொதல்ல கையை எடு. மாமா வீட்ல என்னவோ சத்தம். நான் என்னன்னு பார்த்திட்டு வந்திடுறேன்''- அவனது பதற்றம் அவளை அசைக்கவில்லை.

''யாருடா உனக்கு மாமா! அவன் என்னிக்கு என் நாத்தனாரை விட்டு விட்டு அந்த பிச்சைக்காரியை கூட்டிட்டு வந்தானோ அப்பவே அவன் செத்துட்டான். இனிமே மாமா மச்சான்னு சொல்லிட்டு திரியாதே போடா உள்ளே''

''ஐயோ அம்மா! அதெல்லாம் பேசற நேரமா இது? முதல்ல வழியை விடு''- கையை பிடித்தவனை உள்ளே தள்ளினாள். ''என் பேச்சை கேட்காம அங்கே போனே நீ திரும்பி வரும் வரைக்கும் நான் உயிரோட இருக்க மாட்டேன்''.

''அடிப்பாவி மகளே! ஏண்டி இப்படி பண்ணினே. இதுக்கா நான் பெத்து வளர்த்தேன். எங்களை விட்டு போக உனக்கு எப்படியம்மா மனசு வந்தது''- வசுமதி வயிற்றிலறைந்து கொண்டு அழுதது கேட்டும் புயலாய் மாறினான் ரகு. தாயை உதறித் தள்ளிவிட்டு சூறாவளியாய் உள்ளே நுழைந்தான்.

ரகுவைப் பார்த்ததும் வசுமதியின் அலறல் பெரிதானது. ''தம்பி இந்தப் பொண்ணை பாரப்பா. இவ இப்படி பண்ணுவான்னு நான் நினைக்கலியே.'' அதிர்ந்து போனவனாய் அத்தையின் மடியைப் பார்த்தான். உடல் முழுவதும் தெப்பமாய் நனைந்து குளிரில் வெட வெடக்க கண்கள் மூடிக் கிடந்தாள் கோதை. மாமாவும் ராசாத்தியும் உள்ளங்காலிலும் கைகளிலும் தைலம் தேய்த்து விட்டபடி கண்ணீர் விட, ''பாவி மக! எங்கிட்ட எதையுமே சொல்லாம நாங்க கண் அசந்த நேரமாப் பார்த்து கிணத்துல குதிச்சிட்டாப்பா''- கதறிய அத்தையை காண முடியாமல் கோதையையே வெறித்தான்.

''இது போதும் அத்தான் எனக்கு. உங்கூட நூறு வருஷம் வாழ்ந்த திம்



மதி வந்திடுச்சி. இனிமே நான் அழமாட்டேன். எதுக்கும் கலங்கமாட்டேன். நான் போறேன் அத்தான்'' - முன் தினம் மாலைப் பொழுதில் அவள் பேசியது காதில் ஒலிக்க,

வெறிவந்தவனாய் பாய்ந்து சென்று வசுமதியிடமிருந்து கோதையைப் பற்றி எடுத்து தன் மார்போடு அணைத்துக் கொண்டு கதறினான்.

''ஏய்! எழுந்திருடி. என்னை விட்டுட்டு நீ மட்டும் போயிடுவியா? விட்டுடுவேனா? எழுந்திருடி- நான் உன் கூட வாழணும்டி. உன்னை சாக விடமாட்டேன். எழுந்திருடி எழுந்திரு.''- பட்பட்டென கன்னத்தில் அறைந்தான். குலுக்கினான். அவள் தலையை தன் மார்போடு அழுத்தினான். கண்ணீர் ஆறாய் பெருக அவள் காதிற்குள் ''கோதை எழுந்திருடி நான் உன் அத்தான் வந்திருக்கேன். கண்முழிச்சிப்பாரு. முழுச்சிடு. முழிச்சிடும்மா. நீ இல்லாம என்னால வாழ முடியாதுடி முழிச்சிடு. என்னைப் பார். பிளீஸ் எழுந்திரு.''-வாய் மூடாமல் பேசிக் கொண்டே இருந்தான்.

ராசாத்தி பெருங்குரலில் அலற மாமாவும் அத்தையும் விக்கித்துப் போய் நின்றனர். யாரையும் கவனியாமல் பேசிக் கொண்டே இருந்தான் ரகு. சில நிமிடங்களில் கோதையிடம் அசைவு தெரிந்தது. கண்களை பிரிக்க முடியாமல் முனகினாள். சட்டென குனிந்து இருவிழிகளிலும் மாறி மாறி சூடாய் முத்தமிட்டான். நெற்றி, கன்னம் முகம் முழுவதுமாய் அவன் இதழ்கள் சூடாய் பரவியதில் கோதை கண்களை மலர்த்தினாள். இளைத்தாள். வெகு அருகில் அவள் ஆசை அத்தானின் முகம். அதுவும் கண்களில் கண்ணீர் பெருக்கோடு. ''அத்தா..ன்''- ஒரு கேவலோடு அவனை இறுக்கிக் கொண்டாள். குமுறி குமுறி அழுதாள். அவளது கண்ணீர் அவனது நெஞ்சைச்சுட்டது. ''ஏண்டி! ஏண்டி இப்படி பண்ணினே? என்னை விட்டு போக உனக்கு எப்படிடி மனசு வந்தது? சொல்லுடி. ஏண்டி இந்த முடிவுக்கு வந்தே?''-கோபமாய் உலுக்கினான்.

''சொல்றேன் அத்தான். எல்லாத்தையும் சொல்லிடுறேன். இப்ப விட்டா அப்புறம் சொல்லவே முடியாது. சொல்லிடுறேன்''-கதறியவாறே சொல்ல ஆரம்பித்தாள்.

ரஞ்சிதத்திற்கு எப்பவுமே அண்ணன் குடும்பம் வேம்பு தான். தன் புகுந்த வீட்டாரே தன்னை ஒதுக்க காரணமானவள் என்ற கோபம் மட்டும் அல்ல. பால்போல் மாசுமருவில்லாத வசுமதியின் அழகும் அடக்க

'உன் மனைவி புது பாத்திரங்கள் வாங்கினா நீ ஏன்டா இப்படி பயப்படுறே?'

'அவ ஆயுத குவியல் செய்தா பயமா இருக்காதா!'

-பி.பாலாஜி கணேஷ்,
கோவிலாம்பூண்டி.



மும் எப்போதும் அவளுக்கு தீயை மூட்டிக் கொண்டே தான் இருந்தது. மருமகளை தன் தாயார் வாயாரப் புகழ்ந்தால் அன்று முழுவதும் பாத்திரங்கள் பறக்கும். தான் கருப்பாய் குண்டாய் இருப்பதை எண்ணி அந்த வெறுப்பை மற்ற எல்லோரிடமும் காட்டுவாள்.

சிவகுருநாதன் எப்போதுமே தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பவர். அதனால் இவளிடம் இருந்து தப்பவே நாள் முழுவதும் தோட்டத்திலேயேயும் ரைஸ்மில் வேலையிலும் தன்னை மூழ்கடித்துக் கொள்வார். ரகுவையும் பள்ளிப்படிப்பு முடித்த கையோடு ஹாஸ்டலில் சேர்த்தாயிற்று. தாத்தாவிற்கும், பாட்டிக்கும் நடை தளர்ந்து செவி மங்கிப் போயிற்று. இது தன் ஆங்காரத்தை தீர்க்க வழியாய் கிடைக்க, எந்தெந்த சமயம் கிடைத்தாலும் வறுத்து எடுத்து விடுவாள். இதனாலயே வெளிவாசல் வருவதையே மறுத்துவிட்டாள் வசுமதி. இந்நிலையில் பூங்கோதை பெரியவளாகிவிட வயதும் பூரிப்பும் மினுமினுப்பும் கூடிவிட எரியும் நெருப்பில் நெய் விட்டது போலாயிற்று ரஞ்சிதத்திற்கு. அதிகாலை கோலம் போட வாசலுக்கு வரும் பூங்கோதைக்கு அர்ச்சனை ஆரம்பமாகி விடும். "ஹீம்! ஆத்தா எந்த வழியோ மகளும் அந்த வழிதானே?. அவ எதைக் காட்டி எங்கண்ணனை மயக்கினாளோ. ஆனா இவ கோலம் போட்டே மயக்கிடுவா போலிருக்கே'' என்பது தொடங்கி நீண்டு கொண்டே போகும்.

''நேரெதிர் வாசல் என்பதால் தப்பவும் முடியாது. இடி முழக்கமாய் ஒலிக்கும் தங்கையின் குரல் கேட்கும் அப்பாவால் பதில் பேச முடியாது. பேசினால் ஊரே ரெண்டுபட்டு போய் விடும். ஆனால் அத்தை ஆர்ப்பாட்டத்திலும் சனி, ஞாயிறு மட்டும் அத்தை வாயை திறப்பதே இல்லை. அன்று மட்டும் தான் எங்கள் குடும்பமே நிம்மதியாக இருக்கும். மீண்டும் ரகு ஊர் சென்ற உடன் ஆரம்பமாகும்.

''இதையெல்லாம் உனக்காகத்தான் அத்தான் நான் தாங்கிட்டேன், ஒவ்வொரு முறை நீ ஊர்வரும் போதும் சொல்ல நினைப்பேன். ஆனா உன்னைப் பார்த்தாலே உங்க அம்மாவோட பேச்சுதான் நினைவு வரும். அதனால தான் ஓடிப்போயிடுவேன். உன்னைப் பார்க்காமலும் இருக்க முடியாது. நான் தவிக்கிற தவிப்பை பொறுக்காமத்தான் ராசாத்தி என் கூட வருவா'' நாம அப்பப்ப பேசிக்கிட்டோம். அதுஎப்படியோ உங்கம்மாவுக்கு தெரிஞ்சிடுச்சு. போன முறை நீ வந்துட்டு போன மறுநாள்...'' சொல்லும் போதே கோதையின் விழிகள் மிரண்டன. உடல் பயந்து நடுங்கியது.

''கொய்யாக்காய் பறிச்சிட்டு வர்றேன்! நீ போ'' என்று ராசாத்தி அப்பாவோடு தோட்டத்தில் நின்று விட சாப்பாட்டு கூடையோடு ரகுவின் நினைவாக புன்னகை முகமாய் கொடிக்காலை விட்டு விலகி மண்பாதையில் வந்து கொண்டிருந்த கோதை, எதிரே இடுப்பில் கைவைத்துக் கொண்டு காளி சொரூபமாய் முறைத்துக் கொண்டு நின்ற அத்தையைப் பார்த்ததும் வெலவெலத்துப் போனாள். தொண்டை காய்ந்து நாக்கு ஒட்டிக் கொண்டது.

''என்னடி! இதுதான் எம்மகனோட நீ கூத்தடிக்கிற இடமா''-முதல் கேள்வியிலேயே துடித்துப் போனாள் கோதை.



''உன் ஆத்தா சொல்லி அனுப்பினாளா. எல்லாச் சொத்தும் அவனுக்குத் தான். அவனை மயக்கி கைக்குள்ள போட்டாத்தான் விட்டுப் போன சொத்து கைக்கு வரும்னு சொல்லி உன்னை சிங்காரிச்சு அனுப்பினாளா? ஆத்தாளுக்கு பொண்ணு தப்பாம பிறந்திருக்கியே. உன் தளுக்கும், மினுக்கும் பார்த்தாலே தெரியுது.

உன் ஆத்தா என் அண்ணனை மடக்குனா. எம்பிள்ளையை மடக்க உன்னை அனுப்பினாளா?

இதோ பாருடி என் அண்ணன் வேணா ஏமாளியா இருக்கலாம். எம்புள்ளை சிங்கம்டி. அதிபுத்திசாலி. அவன் உன்னை மாதிரி பட்டிக்காட்டு படிக்காத பரதேசியை யா கட்டுவான். அவன் அழகுக்கும் படிப்புக்கும் ஏத்த பொண்ணை ஏற்கனவே பார்த்து வெச்சிட்டான்டி. கூட படிக்குற புள்ளையாம். போட்டோவெல்லாம் காட்டினான். நாங்களும் சம்மதிச்சிட்டோம். பரீட்சை முடிஞ்ச உடனே கல்யாணம் தான். இதுக்கு நடுவே நீ புகுந்து எம்மகனை உன்பக்கம் இழுக்கலாம்னு கனவு காணாதே. அப்படி ஏதாவது நடந்தா தெரிஞ்சது குடும்பத்தையே உருத்தெரியாம அழிச்சிடுவேன். ஆங்! அப்புறம் இன்னொரு விஷயம். நம்ம மாடசாமி மவன் டவுன்ல இருக்கானாம். நல்ல பையன் நம்ம பூங்கோதைக்கு பாருங்கம்மான்னு எங்கிட்ட சொல்லிட்டு போயிருக்கான். இன்னும் ரெண்டு நாள்ல பொண்ணு பார்க்க வருவாங்க. சம்மதம்னு சொல்லி தாலியை வாங்கிக்க. இல்லே நான் சொன்னது தான் நடக்கும். மொதல்ல பொட்டச்சியா லட்சணமா வீட்டோட இரு. இப்படி ஊர் மேயாதே. எங்க குடும்ப மானமும் இல்ல கெடுது என்ன? சொன்னதெல்லாம் புரிஞ்சுதா. போ'' என்று கொடிய கண்களை உருட்டி மிரட்டி விட்டு திரும்பியும் பாராமல் சென்றாள் ரஞ்சிதம்.

ஏற்கனவே பயந்த சுபாவம். யாராவது சத்தமாக பேசினாலே அரண்டு விடும் கோதை இடியை நேரிடையாக தாங்கியது போல் உடல் முழுக்க தளர்ந்து அப்படியே சாய்ந்தாள். ராஜகோபாலும், ராசாத்தியும் வந்து பார்க்கும் வரை எழுந்திருக்காத ஆழ்ந்த மயக்கம்.

இன்னும் தேம்பிக் கொண்டிருந்தாள் கோதை. ''நானும் முதல்ல நம்பல்ல அத்தான். அப்புறம் யோசிச்சா அத்த சொல்றது சரிதான். நான் உனக்கு எந்த விதத்தில பொருத்தம்? ஆனா நீ இல்லாம நான் எப்படி வாழ முடியும். ஏங்கித் துடிச்சே செத்துடமாட்டேனா? அதான் அப்பவே இந்த முடிவை எடுத்தேன். ஆனா கடைசியா உன்னை ஒரு தடவையாவது பார்த்திடனும்னு தான் நீ வரும் வரை காத்திருந்தேன். உன்னைப் பார்த்தேன். பேசினேன். கட்''-அந்த நிலையிலும் வெட்கம் வந்து நிறுத்தினாள்

''எம்மேல உனக்கு கோபம் இல்லையே அத்தான் அத்தையைப் பத்தி உங்கிட்டயே அப்படி சொல்லியிருக்கக்கூடாதுதான். ஆனா எதுவுமே சொல்லாமப் போயிட்டேன்னு நீ வருத்தப்படக்கூடாதுன்னு தான். ம்.. ம்...''-வலியால் துடித்தாள்.

அதுவரை இறுகிப் போயிருந்தவன் கலைந்தான். ''என்னடா! என்ன பண்ணுது''-பதறினான்.

''அத்தான்! தலை ரொம்ப வலிக்குது. எனக்கு கண்ணெல்லாம் சொருகுது. நான் போயிடுவேன். அத்தான் உன் மடியிலேயே சந்தோஷமா

போனி.''

''ஐயோ! எம்புள்ளை தலையைப் பாருங்க. எவ்ளோ ரத்தம். ஐயோ. இவ்வளவு நேரம் கவனிக்கலையே'' அத்தையின் அலறல் அறையே எழுப்பியது.

உணர்வுகள் மரத்துப்போனவன் அப்போது தான் கவனித்தான். அவனது பின்னந்தலையிலிருந்து ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. சுவற்றில் மோதியிருக்க வேண்டும். தனது வெள்ளை நிற பனியன் முழுவதும் நிறம் மாறிக் கொண்டிருந்தது.

''நோ... நோ.. மாரிமுத்து அண்ணே'' அவன் போட்ட கூச்சலில் டிரைவர் ஓடிவந்தார். ''என்ன செய்வீங்களோ தெரியாது இன்னும் பத்து நிமிஷத்துக்குள்ள நம்ம டாக்டர் இங்க இருக்கணும். போங்க சீக்கிரம்'' அந்த நடுத்தர வயது டிரைவர் அவசரம் புரிந்து துரிதமாய் செயல்பட்டார். போன வேகத்தில் டாக்டரோடு வந்தார். அதற்குள் கோதை முழு மயக்கத்திற்கு போய் விட்டாள். டாக்டர் மளமளவென தலைக்காயத்தைச் சுத்தப்படுத்தி பெரியகட்டாய் போட்டார். ஊசிகளை சொருகினார். கண் நிறைய நீரோடு அமைதியாக பார்த்துக்கொண்டிருந்தான் ரகு.

ரஞ்சிதம் தான் கூப்பாடு போட்டுக் கொண்டிருந்தாள்.

''இந்த அநியாயம் எங்காவது நடக்குமா? ஆத்தாளும் மகளும் சேர்ந்து என்னென்ன கூத்துபோடுறாளுகளோ. இந்த முட்டாப்பயலும் அவளுக நடிப்பை நம்பி பெத்தவ என்னை தூக்கியெறிஞ்சுட்டு போறானே. சண்டாளிகளா! நல்லா இருப்பீங்களாடி! முதல்ல என் அண்ணனை பிரிச்சா. இப்போ எம்புள்ளைய பிரிச்சிட்டாளே.... அவ நல்லா இருப்பாளா?''

''வாயை மூடும்மா'' கண்கள் சிவக்க தன் முன் கர்ஜித்தவனை பார்த்து முதன் முறையாய் அரண்டு போனாள் ரஞ்சிதம். ''இனி ஒரு வார்த்தை பேசினா உன் கண்ணு முன்னாலே நான் என்னையே எரிச்சுப்பேன்'' ஆடித்தான் போனாள். சிவகுருநாதன் பதறிப்போனார். ''என்னப்பா வார்த்தை இது?''

''நான் சொல்றது சத்தியம்ப்பா. இனி அம்மா ஒரு வார்த்தை பேசினாலும் நான் சொன்னதை செய்வேன்''

கப்பென வாயை மூடிக்கொண்டாள். ''பொம்பளையா நீ உன் வாயில என்னிக்காவது நல்ல வார்த்தை வந்திருக்கா. அவரு உன் அண்ணன் தானே. எதிரி மாதிரி பார்க்கிறயே இப்ப இந்த சின்ன உசுரு கூட விளையாடுறியே. போடி போடி உள்ளே!'' கணவனின் வார்த்தைக்கு முதன்முறையாய் மறுவார்த்தை பேசாமல் வாயிலிருந்து மூடிய கையை எடுக்காமலேயே உள்ளே சென்றாள்.



'நீ இதுவரை ஐந்து கணவன்மார்களை விவாகரத்து பண்ணியிருக்கிறாய் உன் பெயர் என்னம்மா?'

'பஞ்ச வர்ணம்!'

-சிவ இராமலிங்கம்,
ஆத்தூர்.



''நீங்களும் படுங்கப்பா. கோதை கண் விழிக்காம நான் அந்த வீட்டை விட்டு வரமாட்டேன்'' உறுதியாய் மொழிந்து விட்டு நகர்ந்தான். டாக்டர் மறுநாள் வந்து பார்ப்பதாகக்கூறி விட்டு போய்விட, ''அத்தை நான் கோதை கூட இருக்கேன். நீங்கள்ளாம் படுங்க.'' என அனைவரையும் வற்புறுத்தி படுக்க வைத்து விட்டு கோதையின் தலைமாட்டில் அமர்ந்து கொண்டான். தலையில் பெரிய கட்டோடு ஒருக்களித்து படுத்திருந்த கோதையை விழி எடுக்காமல் பார்த்தான். மருந்தின் உதவியால் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள் கோதை. உறக்கம் வராமல் அவள் கண்விழிக்கும் நிமிடத்திற்காக காத்திருந்தான்.

நெஞ்சம் மட்டும் அங்கிருக்க
நான் மட்டும் இங்கிருக்க
தாமரை அவளிருக்க - இங்கே
சூரியன் நானிருக்க - சாட்சி
சொல்லும் சந்திரனே - நீ
போய் தூது சொல்ல மாட்டாயோ!

6

''முன்னெல்லாம் ஒழுங்காத்தாம்மா இருந்தாரு. இந்த குடிப்பழக்கம் இப்பத்தான் எனக்கு தெரியும். குடிச்சு குடிச்சு குடல் வெந்து போச்சு. உடனே ஆஸ்பத்திரியில சேர்க்க சொல்றாங்க. இவரான்னா

''ஏற்கனவே கம்பெனி நஷ்டத்துல போயிட்டு இருக்கு. கடன் கொடுத்தவன். கிட்ட பதில் சொல்லி மாளலை. நீ என்னை ஆஸ்பத்திரியில போய் படுக்க சொல்றியே. கம்பெனியை எவன் பார்ப்பான், உங்கப்பன் பார்ப்பானா? இல்லை பொல்லாத படிப்பெல்லாம் படிக்க கிழிச்சிருக்கியே நீ பார்ப்பியா? போடி போய் வேற வேலை இருந்தா பாருன்னிட்டார்.

சொல்லச் சொல்ல கேட்காம நேத்து நிறைய குடிச்சிட்டார். கொஞ்ச நேரத்தில ரத்தம் ரத்தமா வாந்தியெடுத்தார். இன்னும் வாந்தி நிக்கலை. உடனே யாராவது வாங்கம்மா. எனக்கு ரொம்ப பயமாயிருக்கு. இங்கே யாரையும் எனக்கு தெரியாது. உடனே வாங்கம்மா. ''போனில் ஒருபாட்டம் அழுது தீர்த்த மகளிடம் ரஞ்சிதம் பதறி பரிவாய் பேசினாள்.

''என் தங்கமே அழாதே! இதோ இப்பவே கிளம்பறோம். அப்பாவும், தம்பியும் வருவாங்க. உடனே அம்மா தோட்ட வேலைக்கு ஆளைப் பார்த்து பொறுப்பா ஒப்படைச்சிட்டு வந்திடுவேன். நீ அழாதேம்மா. மாப்பிள்ளைக்கு ஒன்னும் ஆகாது. போனை வெச்சிடு. ''போனை வைத்தவள் மகனுக்கும், கணவனுக்கும் மளமளவென உத்தரவுகளை பிறப்பித்தவாறே துணிகளை எடுத்து வைத்து பெட்டியை ரெடி பண்ணினாள்.

''காரிலே போயிடுங்க. அங்க நம்ம பிள்ளை தனியா கலங்கிப் போயி நிக்கறா. மாப்பிள்ளையை ஆஸ்பத்திரியில சேருங்க. நான் இதையெல்

லாம் பொறுப்பா ஒப்படைச்சுட்டு வர்றேன். '' என்ற போது ரகு தயங்கினான்.

கோதை இப்போது தான் கொஞ்சம் தேறி வருகிறாள். தலைகாயம் ஆறிய உடன் திருமணத்தை முடித்து விடலாம் என அம்மாவே முன் வந்து சம்மதம் சொல்லி விட்டாள். இந்த சமயத்திலா இப்படி நேர வேண்டும். கோதையிடம் எப்படி சொல்ல? தயங்கியவனைப் பார்த்தாள்.

'' தம்பி! நீ போய் கோதை கிட்ட தெளிவாச் சொல்லிட்டு வா. ஒரு வாரம் பத்து நாள்ல வந்துடலாம். அதுக்குள்ள அவளும் சரியாயிடுவா. உடனே கல்யாணத்தை வெச்சிடலாம்னு தைரியமா இருக்கச் சொல்லிட்டு வா. ''

'' சரிம்மா '' என்ற தலையாட்டலோடு விரைந்தான். அன்னிக்கு போட்ட போட்டில் அம்மா தலைகீழாக மாறிவிட்டாள். '' கறிவேப்பிலை கொத்து மாதிரி ஒத்த வாரிசை பெத்து வெச்சிருக்கேன். அப்படி ஒரு வார்த்தை சொல்லிப்புட்டியே ராசா. நான் கோதையை விரும்புகிறேன். கட்டி வைன்னா வெச்சிட்டுப் போறேன். அதை விட்டுட்டு இப்படியெல்லாம் பேசாதப்பா. ஏதோ கொஞ்சம் கடுமையா பேசியிருப்பேன். அதுக்காக என்னை ராட்சசின்னா நினைச்ச? என்ன இருந்தாலும் என் அண்ணன் பொண்ணு தானே அவ. அவளே மருமகளா வந்தா சந்தோஷம் தான்'' என்று சொன்னதோடு அல்லாமல் வெற்றிலை பாக்கும் மாற்றி விட்டாள். பூங்கோதையை தாங்கோ தாங்கென்று தான் தாங்குகிறாள். பாவம் அம்மா மனதில் ஒன்றும் வைத்துக் கொள்ளவில்லை. நாம் தான் தப்பாக புரிந்து கொண்டேமோ? ஓட்டமும் நடையுமாக அத்தை வீட்டிற்குள் நுழைந்தான்.

ராசாத்தி கோதைக்கு சாதம் பிசைந்து ஊட்டிக்கொண்டிருந்தாள்.

'' வாங்கத்தான் உட்காருங்க. '' என்றவாறு எழுந்தாள். கோதையின் அருகே அமர்ந்து '' டேய்! ஒரு அவசர வேலைடா '' என்று தந்தி வேகத்தில் அனைத்தையும் சொல்லி முடித்தான். அதற்குள் அத்தையும் வந்து விட, '' அடடா! உடனே கிளம்புப்பா. அங்கே ரதி தவிச்சிட்டு இருப்பா. கோதையை நாங்க பார்த்துக்கிறோம். '' என்றாள்.


'' நீ என்ன சொல்றே கோதை? '' தயக்கமாய் கேட்டான்.

'' ஐயோ இது என்ன கேள்வி? உடனே கிளம்புங்க. இப்ப அண்ணி தான் நமக்கு முக்கியம். என்றாள். சிரித்த முகத்தோடு. நிம்மதியாய் எழுந்தான். தலைக்காயத்தை லேசாய் தடவினான். '' பத்திரம்! நான் போயிட்டு சீக்கிரம் வந்துடறேன். வேளா வேளைக்கு சாப்பிடு என்ன? ராசாத்தி அக்காவை பத்திரமா பார்த்துக்க. வரட்டுமா? '' புறப்பட்டவன் நின்று திரும்பினான்.

'' என்னத்தான்? '' கேள்வியாய் பார்த்தாள் கோதை. நெருங்கி அவளது முகத்தை கையால் தாங்கி நெற்றியில் முத்தமிட்டான். கண்களால் அவளது முகத்தை வேண்டிய மட்டும் பார்த்துக் கொண்டான். இருவரின் கண்களுமே கலங்கிக்கொண்டிருந்தன. '' என்னவோ தெரியல்ல ஒரு மாதிரி சங்கடமா இருக்கு '' கம்மிய குரலில் கூறினான்.

'' ரகு! கார் ரெடிப்பா வர்றியா? '' ரஞ்சிதம் வெளியிலிருந்து குரல் கொடுத்தாள். '' இதோம்மா -சரிடா போகட்டுமா? ''





"போயிட்டு வாங்கத்தான்" இருதுளிகள் தெறித்தன.

துடைத்து விட்டான். "ஹாஸ்பிடல்ல முன்ன பின்ன ஆனாலும் ஆயிடும். அது தெரியாம பயந்து விடாதே. அத்தான் மேல உனக்கு நம்பிக்கை இருக்குல்ல?"

"நிறைய இருக்குத்தான். காத்திட்டு இருப்பேன். எத்தனை நாள் எத்தனை மாதம் எத்தனை வருடம் ஆனாலும் காத்திட்டு இருப்பேன்." அவனது கையை கண்ணில் ஒற்றிக்கொண்டாள். ஏதோ யோசனை வந்தவனாக தன் கழுத்தில் இருந்த மெல்லிய செயினை கழற்றி அவள் கழுத்தில் தாலியாய் நினைத்து மாட்டி விட்டான். "இப்போதைக்கு என் நினைவா இது இருக்கட்டும். ஒரே மாதம் தான். அப்புறம் பதினைஞ்சு பவுன்ல தங்கத் தாலி போடுவேன் சரியா?" வெட்கமாய் சிரித்த சிரிப்பு இதோ இன்னும் கண்ணிலேயே இருக்கிறது.

தள்ளாடியவாறே எழுந்து கூடவே வந்து தெருமுனைவரை கார் மறையும் வரை கையசைத்துக் கொண்டேயிருந்தாளே. அன்றே மொத்தமாக டாட்டா காட்டி விட்டாளோ? நினைக்க நினைக்க நெஞ்சம் கசந்தது. அந்த பால் முகம் தன்னை ஏமாற்றி விட்டதா? தனக்காக சாவின் விளிம்பு வரை சென்றவள் எப்படி இன்னொருவனை மணக்க சம்மதித்தாள்?

இந்த அத்தை, மாமா, ராசாத்தி இவர்களில் ஒருவர் கூடவா தன்னை நம்பவில்லை? எத்தனை முறை போன் செய்தேன்? எத்தனை கடிதங்கள் போட்டேன்? ஏன் என்னிடம் போனில் யாரும் பேசவில்லை?

"வீடு பூட்டியிருக்குதுப்பா. எல்லாரும் எங்கேயோ பொறப்பட்டு போறாங்க" என்று தானே பதில் வந்தது. பிறகு அத்தானும் நோய் முற்றி மருத்துவமனையிலேயே இறந்து விட ஒரு மாதமாய் மருத்துவமனை சர்ட்டிபிகேட் பீஸ், கருமாதி, பதினாறு என முட்டி மோதி ஒருவாறாக நிமிர்ந்த போது தான் அம்மா அந்த இடியை தன் தலையில் இறக்கினாள்.

"நாம மோசம் போயிட்டோம்பா. அந்த சிறுக்கி உன்னை விட்டுட்டு வேற இன்னொருத்தனை கட்டிக்கிட்டாய்யா. நான் எவ்வளவோ கெஞ்சிக்கூத்தாடினேன். எம்மருமகன் சாவோட போராட்டிட்டு இருக்காரு. இந்த நேரத்தில எம்புள்ளைக்கு இங்க வரமுடியாதே. அவன் வர்ற வரைக்கும் பொறுமையா இருங்கன்னு சொல்லிப்பார்த்தேன். இது ஏதோ பெரிய இடமாம். நீ வந்தா பிரச்சனை பண்ணி கல்யாணத்தை நிறுத்திடுவேன்னு உடனே கல்யாணம் பண்ணி அனுப்பி வெச்சிட்டாங்கய்யா.

நான் என்ன பண்ணுவேன்? உடனே உனக்கு போன் பண்ணலாம்னு பார்த்தா நம்மூருல ஒரே மழை. போன் ஒருவாரமா வேலை செய்யலை. உடனே பொறப்பட்டு வந்தேன். ஆனா அதுக்குள்ள அத்தான் உசுரு போயிருச்சே. அதாம்பா சொல்ல முடியலை. என்னை மன்னிச்சுடுய்யா. தாலியை அறுத்துட்டு நிக்கிற புள்ளையைப் பார்த்து அழுவேனா, இல்ல வாழ்க்கையை தொலைச்சுட்டு நிக்கிற புள்ளையை பார்த்து அழுவேனா?" அம்மா வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுதாள்.

இதயத்தை யாரோ பிளப்பதைப் போல் இருந்தது. கோதை அப்படி செய்வாளா? என்ன பெரிய இடம்? என்னை விடவா? இல்லை இருக்காது. மறுப்பாய் தலையசைத்தான். "நான் சொல்றதுல உனக்கு நம்பிக்கை இல்லைன்னா நீ இப்பவே கிளம்பிப்போ. விசாரிச்சிட்டு வந்து



என்னை நம்பு." அம்மா அழுது கொண்டே சொன்னாள்.

சுவரோரமாய் வெள்ளைப் புடவையில் பாழும் நெற்றியோடு சுருண்டு கிடந்த ரதியைப் பார்த்தான். அதற்குள் பூவையும் பொட்டையும் இழந்து இதோ மூலையில் கிடக்கிறாளே. எந்த நேரம் எந்த கடன்காரன் வந்து என்ன பேச்சு பேசுவானோ என்று பயந்து போய்க்கிடக்கிறாளே. வரும் கடன்காரர்களுக்கு பதில் சொல்லி அனுப்பவேனும் நான் இங்கிருக்க வேண்டுமே. இவளை இந்த நிலையில் போட்டு விட்டு போகும் அளவுக்கு சாமர்த்தியமானவனா நான்? பிறகு போய்க் கொள்ளலாம் என்றிருந்தவனை அப்பாதான் சமாதானம் பண்ணி அனுப்பி வைத்தார். ஆவலோடு சென்றவன் ஏமாற்றமாய்த் தானே திரும்பினேன். வீட்டை பூட்டி விட்டு வேறு ஊருக்கே போய் விட்டதாக அம்மா சொன்னது முற்றிலும் உண்மை என்றறிந்த போது மொத்தமாய் உடைந்து போனான்.



"மன்னர் ஏன் குதிரையில் 'திரும்பி' உட்கார்ந்து சவாரி செய்கிறார்?"

"இதே மாதிரி போர்க்களத்தில் வந்தாலும் யாரும் புறமுதுகிட்டு 'ஓடி' வருவதாகக் கூற மாட்டார்களே!"

-எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி

அறைக்குள் அடைந்து கிடந்தவனை கடன்காரர்கள் விடவில்லை. கடனைத் தருகிறாயா? போலீசிற்கு போகவா? என்று மிரட்டினர். ரதி பயந்து போய் அழுதாள். குடும்பமாய் பேசி முடிவெடுத்தனர். "இனிமே நாம ஊருக்குப் போய் வாழ முடியாது. நம்ம புள்ளை ஒவ்வொரு நாளும் அவனை மறக்க முடியாம வெம்பியே செத்துப்போயிடுவான். அவன் இங்கே ரதியோட இருக்கட்டும். நாம போயி வீட்டையும், முக்கியமான தோட்டங்களையும் வைச்சிக்கிட்டு மிச்ச சொத்தையெல்லாம் வித்திட்டு வந்து கடனையெல்லாம் அடைச்சிடுவோம். மிச்சகாசிலே நீங்களும், புள்ளையுமா ஏதாவது தொழில் பண்ணுங்க. எதும் விசேசம் கல்யாணம் காட்சின்னா ஊருக்கு போயிட்டு வந்திரலாம். நமக்கு இனிமே இதான் ஊரு. என்ன சொல்றீங்க?" அம்மாவின் பேச்சுக்கு யாருமே மறுப்பு கூறவில்லை.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான வேதனை. அதனால் யாருமே பேசவில்லை. அதையே சம்மதமாக எடுத்த அம்மா கடன்காரர்களிடம் சொல்லிவிட்டு ஊருக்கு சென்று ஒரே மாதத்தில் எல்லாம் முடித்து விட்டு பெட்டி நிறைய பணத்தோடு வந்தான். கடன் மொத்தமும் அடைத்து விட்டு அத்தானின் தொழிலையே நடத்தி விடுவதாக தீர்மானித்து தன் திறமை உழைப்பு அனைத்தையும் அதிலேயே கொட்டி கம்பெனியை நம்பர் ஒன்னாக நிமிர்த்திய போது மூன்று ஆண்டுகள் ஓடிவி

ருந்தன. அம்மா மெதுவாக திருமண பேச்சை எடுக்கும் போதெல்லாம் உறுதியாக மறுத்துவிடுவான். ''பெரிய இடம் என்று தானே என்னை விட்டு போனாள் கோதை. இனி எனது குறிக்கோள் பணம் சம்பாதிப்பது மட்டும். வேறெதுவும் என்னிடம் பேசாதே '' என்று கூறிவிட்டான்.

கணவனை இழந்த ரதியோ '' எனக்கு பட்டணமே வேண்டாம்மா, நான் நம்ம ஊருக்கு போயி இருக்கிற நிலபுலன்களை பார்த்துக்கிறேன். வீடும் பூட்டித்தானே கிடக்கு. '' என்று ஊருக்கு போய்விட்டாலும் ரகு மட்டும் போக விரும்பவில்லை. மனதிற்குள் கோதையின் நினைவுகளை புதைத்து சமாதியும் எழுப்பிவிட்டான். கோவில் திருவிழாவா, திருமணமா எதற்கும் என்னை அழைக்காதே. நீ போயிட்டு வா என்பதோடு சரி. அப்படி போய்வந்து தான் அத்தனை ஆர்ப்பாட்டம் செய்து தனது ஒன்பது வருட வைராக்கியத்தை உடைத்து கல்யாணத்திற்கு சம்மதிக்க வைத்துவிட்டாள்.

கோதைக்காகவே இந்த திருமணம் என சம்மதித்த போதும் மனம் ஏனோ அலைபாய்ந்து கொண்டே இருந்தது. தவறு செய்து விட்டோமோ. பிடிவாதமாய் மறுத்து பேசியிருக்க வேண்டுமோ? பாவம் மது. என்னை விரும்பி மணப்பேன் என்கிறாள். என்னால் அவளுடன் ஒட்டி உறவாட முடியுமா? ஊருக்குப் போகும் முன்பே கோதையின் நினைவு இப்படி ஆட்டிப்படைக்கிறதே. ஊரைப் பார்த்தால் அவளை பார்த்த இடம் எல்லாம் தீயாய் சுடுமே, தேளாய் கொட்டுமே, எப்படி தாங்கிக்கொள்ளப் போகிறேன். எப்படி இன்னொருத்திக்கு இடம் தருவது? என்னால் எப்படி முடியும்? மனம் தாறுமாறாய் தடுமாறியதில் தூக்கம் எட்டாத தூரத்திற்கு சென்று விட தலை விண்விண்ணென்று தெறிக்க ஆரம்பித்தது. உடல் நெருப்பாய் தகிக்க ஆரம்பித்தது.

## விழிகள் என்னோடு சண்டை போடுதே

## 7

**எதிரே வந்தால் என்ன? - தினமும்**
**கண்ணோரம் தீபம் வைக்கிறேன்**
**வெளிச்சம் தந்தால் என்ன?**
**மணி சரி பார்த்து வரும் வழி பார்த்து**
**இரு விழிகள் தேய்கிறேன்!**

உச்சி வெயில் மண்டையை பிளந்தது. சூரியன் தன் கோபத்தை எல்லாம் சேர்த்து வைத்து ஒட்டுமொத்தமாய் சுட்டெரித்துக் கொண்டிருந்தது. வயல்காட்டில் சலசலவென ஓடிக்கொண்டிருந்த நீரின் ஓசையோடு வேலை செய்யும் பெண்களின் கலகலப்புமாய் சேர்ந்து ரம்மியமாய் இருந்தது. தோட்டத்தின் உள்ளே இருந்த மாமரத்தில் இரண்டு தூளிகள் கட்டப்பட்டிருக்க உள்ளே இளம் ரோஜாக்கள் இரண்டு காற்றின் சிலுசிலுப்பில் தன்னை மறந்து உறங்கிக்கொண்டிருக்க அவர்களின் தாய் கருமமே கண்ணாய் களையெடுத்துக் கொண்டிருந்தாள்.

சாப்பாடு நேரம் நெருங்க அனைவரும் வேகமாக உழைத்துக்கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருத்தியாய் ராசாத்தியும் களைபிடுங்கிக் கொண்டிருந்தாள்.



தூக்கி செருகிய சேலையும், எண்ணெய் இட்டு வாரிச் சுருட்டிய கொண்டையுமாய் கழுத்தில் வெறும் கருகுமணியோடு இருந்த போதும் ஆளை அசத்தும் அழகோடு தான் இருந்தாள். உடல் முழுக்க வியர்வை ஆறாய் வழிந்தோட கைதான் வேலை செய்ததே தவிர கண்கள் நொடிக்கொரு தரம் தோட்டத்தை தாண்டி புளியந்தோப்பிற்குள் சென்று மீண்டும் வந்தது. காடாய் அடர்ந்திருந்த புளியமரங்கள் கூட இன்று தன் இலைகளை உதிர்த்து கூடாகத்தான் காட்சியளித்தது. மரங்களின் நடுவே அவள் நின்றிருந்தாள்.

சுற்றுப்புற ஓசை எதுவும் அவள் காதில் விழவில்லை. அவளது கவனத்தை திசை திருப்பவில்லை. ஆடாமல் அசையாமல் வருடக்கணக்காய் தவம் செய்யும் முனி போல சிற்பி செதுக்கி வைத்து விட்டு போன சிலை போல மரங்களின் ஊடே தானும் ஒரு மரமாய் அவள் நின்று கொண்டிருந்தாள்.


மரத்தில் இரு பறவைகள் படபடவென தங்கள் இறக்கைகளை உதறிக்கொள்ள அது கூட அவளை அசைக்கவில்லை. கண்கள் மட்டும் இரு வண்டுகளாய் அசையாவிட்டால் அவள் உயிருள்ள ஒரு பெண் என யாரும் நம்ப முடியாது. அப்படியே உறைந்து போய் நின்று கொண்டிருந்தாள். உச்சியிலிருந்து வியர்வை ஆறாய் பெருகி ஓட கொதிமணலில் கால் வெந்து கொண்டிருக்க பசியிலும் தாகத்திலும் தொண்டையும் உதடுகளும் உலர்ந்து போயிருக்க விழிகள் மட்டும் பாதையையே கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தது. எதிரில் எந்த உருவம் வந்தாலும் ஆர்வமாய் நோக்கி பின் ஏமாற்றமாய் சோர்ந்து போயின. மீண்டும் வழி மீது விழி வைத்துக்காத்திருக்கத் தொடங்கின.

ராசாத்தி மளமளவென பம்பு செட் நீரில் கை கால்களை கழுவிக் கொண்டிருந்தாள். அக்கா பசி தாளமாட்டாளே. இன்று நேரமாகிவிட்டதே. வேகமாக தூக்கு பாத்திரத்தை எடுத்துக்கொண்டு ஓடினாள். பாதம் சூட்டால் நொந்தது. இப்போதெல்லாம் பழகி விட்டது. வெயிலை பொருட்படுத்தாது தோட்டத்தை விட்டு வெளியேறி புளியந்தோப்பிற்குள் சென்றாள். காலில் கல்லும் முள்ளும் குத்தி பதம் பார்த்தது. பிடுங்கியெறிந்து விட்டு ஓடினாள். '' அக்கா! நான் சாப்பாடு கொண்டு வந்திருக்

'நீங்க சைவமா? அசைவமா?'

'நான் சைவம் தான். பக்கத்து வீட்டு கோழி எங்க வீட்டுல வந்து முட்டை போட்டா நான் அசைவம்'

-பி.பாலாஜி கணேஷ்.
கோவிலாம்பூண்டி



கேன்.'' பதிலும் இல்லை. அசைவும் இல்லை. '' அக்கா'' என்றழைத்தவாறே தோளைத்தொட பதறித்துள்ளித் திரும்பினாள் கோதை. கை, கால்கள் நடுங்க ''நீயா! நான் அத்தானோன்னு நினைச்சேன்'' என்றாள்.

'' வாக்கா சாப்பிடலாம். '' குழைந்த குரலில் அழைத்தவளிடம் அவசரமாய் மறுத்தாள் '' இல்ல அத்தான் வர்ற நேரம். நான் இல்லைன்னா அதுக்கு கோபம் வந்துடும். நீ போய் சாப்பிடு. நான் அத்தானை பார்த்திட்டு வந்துடறேன். '' கண்கள் ராசாத்தியைத் தாண்டி பாதையையே வெறித்துக் கொண்டிருந்தன.

'' இல்லக்கா அத்தாதான் சொல்லி அனுப்பிச்சு. நீ போய் கோதையை சாப்பிட வை. அவ சாப்பிட்ட பிறகு நான் வர்றேன்னு சொல்லிச்சு. அதான் வந்தேன். நீதான் போவமாட்டேங்கிறியே. நான் போகட்டுமா? '' திரும்பினாள்.

'' அய்யோ! போகாதே நான் சாப்பிடுறேன். அப்பத்தான் அத்தான் வரும். சரி சாப்பாடு தா '' குழந்தையாய் கையேந்தியவளை நெஞ்சு நொறுங்கப் பார்த்தாள் ராசாத்தி. '' இங்கே ரொம்ப வெயிலா இருக்கு. வா தோட்டத்துல உட்கார்ந்து சாப்பிடலாம். '' கைபற்றி அழைத்தாள்.

'' ஊஹூம் அத்தான் இங்க தான் வரும். '' அசையாமல் நின்றாள்.

'' நாம சாப்பிடுறதுக்குள்ள அத்தான் வந்தா உனக்காக காத்திருக்கும், நீ வா '' என கோதையை கைப்பற்றி அழைத்து வந்தாள்.

மரத்தடி நிழலில் அவளை உட்கார வைத்து விட்டு தூக்குவாளியை திறந்து அதன் மூடியில் கொஞ்சம் தண்ணீர் பிடித்துக் கொண்டு வந்தாள். கோதையின் பிஞ்சுக் கைகளைச் சுத்தமாய்க் கழுவிவிட்டாள். சாதத்தில் சாம்பாரை ஊற்றி கோதையிடம் நீட்டினாள். மளமளவென உருட்டி வேகமாக சாப்பிட ஆரம்பித்தாள். பசியா அவசரமா என புரிந்து கொள்ள முடியவில்லை ராசாத்தியால். கண்கள் கார்மேகமாய் மாறி நீரை சொரிந்தது. எப்படி இருந்தவள்? இப்போது எப்படி மாறிவிட்டாள்? கோதையின் சந்தன நிறம் மங்கி கறுத்துப்போயிருந்தாள். கதை பேசிடும் கண்களின் கீழ் திரண்டமாய் கருவளையம். சிரிப்பு என்பதையே மறந்து விட்டிருந்த உதடுகள் சாப்பிடும் நேரம் தவிர பிரிவதே இல்லை. கைகால்கள் குச்சிகளாய் மாறியிருந்தன. அடர்ந்த கரும் கூந்தல் கூட நிறைய கொட்டிப்போயிருந்தன. ராசாத்திதான் வலுக்கட்டாயமாக அதில் எண்ணெய் தேய்த்து இறுகப் பின்னலிட்டு மடித்து ரிப்பன் போட்டு கட்டிவிட்டிருந்தாள். வெண்பஞ்சுப் பாதங்கள் வெயிலில் நின்றே நிறம்மாறி பாத வெடிப்புகளோடு தெரிந்தது.

மினுமினுப்பாய் நகப்பூச்சோடு ஜல் ஜல் என சப்திக்கும் கொலுசோடு துள்ளித்திரிந்த பாதங்களைப் பார்க்கும் போதே விம்மி வெடித்து விடுவாள் ராசாத்தி. எப்படி துள்ளித்திரிந்தவள்? அதுவும் அத்தானைச் சுற்றுவந்தால் போதும் வீட்டுக்குள்ளேயே நூறுமுறை சுற்றி வந்துவிடுவாள். இப்போது விடிந்ததுமுதல் பொழுது சாயும் வரை ஒரே இடத்தில் நிற்கும் பாதம் சோர்ந்து கிடந்தது. வாஞ்சையாய் கோதையின் பாதத்தை நீவினாள். அவளிடம் எந்த சலனமும் இல்லை. சாப்பிட்டு ஓடுவதிலேயே குறியாக நின்றாள். தாய் மனதோடு அவள் சாப்பிடுவதையே பார்த்துக் கொண்டிருந்தாள் ராசாத்தி.

'' ஊருல யாரு கண்ணு பட்டுதோ பெரிய இடத்துப் புள்ளைங்க இப்



படி அநாதையா நிக்குதுங்க. இதுங்க வசதிக்கும் அழகுக்கும் எப்பவோ கண்ணாலம் கட்டி குழந்தை குட்டிகளோட வாழ்ந்திருக்கணும். யாரு செஞ்ச பாவமோ காடு கழனி வேலை செஞ்சு கஞ்சி குடிக்குது. இதுகளுக்கு எப்ப விடியுமோ '' பட்டம்மா பாட்டி புலம்பியது கேட்டது.

தனக்குள் சிரித்துக்கொண்டாள் ராசாத்தி. விடிவா தங்களுக்கா? அந்தக்கொடுப்பினை இருக்கிறதா என்ன? வாழும் நாள் வரை கோதையை பத்திரமாக அடைகாத்துக்கொள்ள வேண்டும். உண்பதற்கும், உடுப்பதற்கும் உன்னைப்பிடி, என்னைப்பிடி என்ற கதையாய் போகிறது. இந்த அழகில் கல்யாணமாம். பிள்ளை குட்டிகளாம். தேவையற்ற பேச்சுதானே இது? பட்டம்மாவிற்கும் வேற வேலையே கிடையாதோ? அவளைச் சொல்லியும் குற்றமில்லை. வசதி இருந்தவரை கூடவே இருந்து வேலை செய்து வந்த பட்டம்மாவிற்கு வசதி ஒருகுறையும் வைத்ததில்லை. எந்த பலகாரம் செய்தாலும் பட்டம்மாவிற்கும் சேர்த்து தான் செய்வாள். மீந்து போனதை கொடுக்கலாம் என ஒருநாளும் நினைக்கமாட்டாள். பழைய சாதம் கூட போட மாட்டாள். தாங்கள் சாப்பிடுவதையே அவளையும் சாப்பிட வைப்பாள். அந்த நன்றி விசுவாசம் அவளுக்கு. இந்தக் காலத்தில் யார் நன்றி உணர்ந்து செயல்படுகிறார்கள்.

ஆனால் பட்டம்மா இல்லாமலும் சமாளித்திருக்க முடியாதுதான். வீடு வாசல் இழந்து தெருவில் நின்றபோதாகட்டும் பெற்றவர்களின் இறுதிச்சடங்கிற்காய் தவித்த போதாகட்டும் பட்டம்மாதான் ஆட்களை புரட்டிக்கொண்டு வந்து கை கொடுத்தாள். இல்லையென்றால் பெண் பிள்ளைகளாய் இருந்து கொண்டு அதுவும் புத்தி பிசகியிருந்த கோதையையும் வைத்துக்கொண்டு என்ன செய்திருக்க முடியும்?

பக்கபலமாய் நின்று அனைத்து வேலைகளையும் இழுத்துப்போட்டு செய்து நல்லடக்கம் செய்து பதினாறாம் நாள் காரியங்கள் வரை அனைத்தையும் கூடவே இருந்து கவனித்துக் கொண்டாள். தானு தெரு தாண்டியிருந்த தன் வீட்டிற்கு அருகிலேயே நல்ல வீடாய் பார்த்து குடியமர்த்தினாள். தன்னுடனேயே வேலைக்கு அழைத்துச் சென்று வேலைகளை பழகிக் கொடுத்து உழைத்து சம்பாதித்து சாப்பாட்டுக்காக அடுத்தவரிடம் கையேந்தாமல் காத்து நின்றாள். இந்த ஒன்பது வருடங்களாய் தங்களுக்கு இன்னொரு நிழலாய் காவலும் புரிகின்றாள். மனிதர்களில் இப்படியும் சிலர் இருப்பதால் தான் உலகம் சுமூகமாய் சுழல்கிறது. இல்லையென்றால் என்றோ அழிந்திருக்கக்கூடும்.

'' எனக்கு போதும். நான் போயி அத்தானை பார்த்திட்டு வர்றேன். '' என்றவாறு எழுந்த கோதையின் கையையும் வாயையும் கழுவி துடைத்தாள். '' அக்கா நான் வேலை முடிஞ்சு வர்ற வரைக்கும் அங்கேயே நிக்கனும் சரியா '' '' ம் '' சமர்த்தாய் தலை அசைத்துவிட்டு அந்த இடத்தை விட்டு சென்றாள் கோதை.

வழக்கம் போல் பசி மறைந்து போய் விட பாத்திரத்தை மூடினாள்.

'' ஏந்தாயி! இப்படி நித்தமும் சாப்பிடாமக்கிடந்தா எப்படி தாயி? நீ செய்யிற வேலைக்காவது சாப்பிடணுமே. சாப்பிடு தாயி! '' பட்டம்மா வாஞ்சையாய் கூறினாள்.

'' என் பசி தாகம் எல்லாம் மறைந்து போயி வருஷக்கணக்காச்சு பட்

டம்மா. உடம்புல தெம்பு இருக்கிற வரைக்கும் உழைக்கணும். அப்புறம் அப்புறம் '' சட்டென கண்களில் நீர் கோர்த்துக்கொண்டது.

'' மனம் சோர்ந்து போயிடாதே தாயி! அந்தப் பச்சை மண்ணுக்காணும் நீ வாழணுமேம்மா ''

'' அதான் அந்த ஒரு காரணம் தான். இன்னும் இந்த பூமியில எங்களை வாழவெச்சிருக்கு. இல்லே எங்க அம்மா அப்பாகூடவே நாங்களும்... ''

''ராசாத்தி'' என்ற அழைப்பில் சட்டென தன்னை சுதாரித்துக் கொண்டு திரும்பினாள் சரவணன் நின்று கொண்டிருந்தான். அவசரமாக விழிகளில் துளிர்த்திருந்த நீரை சுண்டியெறிந்தவாறே எழுந்தாள். சரவணன் கண்கள் ராசாத்தியின் கலங்கி இருந்த கண்களை ஆராய்ந்தன. அந்த கண்ணீர் அவன் மனதை சுட்டது.

## 8

**உன் கண்களின் ஈரம் - எதற்காகவோ**
**ஈரம் விழிநீரை நான் மாற்றுவேன்**
**உனக்காகவே வாழுவேன்**
**சுமைதாங்கியாய் தாங்குவேன்**

''ராசாத்தி'' - சரவணன் மென்மையான அழைப்பில் நடந்து கொண்டிருந்தவள் நின்றாள். திரும்பியும் பாராமல் '' என்ன '' என்றவளின் முன்பாய் வந்து நின்றான். '' ஏன் ராசாத்தி! எம் முகத்தை பார்த்துக் கூட பேசமாட்டியா. அத்தனை வெறுப்பா என் மேல் உனக்கு? ''

''வெறுப்பு உங்க மேல மட்டுமில்ல. உங்க இனத்தின் மீதே '' தலை நிமிராமல் பதிலளித்தாள்.

'' ஏன் ஒருத்தன் தப்பு செய்தா ஒட்டுமொத்த ஆண்களுமே அப்படித்தான்னு நினைச்சுடுறதா. அப்படிப் பார்த்தா எத்தனையோ பேர் தாடியும் தண்ணியுமா அலையுறாங்களே. அவங்களை ஏமாத்தினது பெண்கள் தானே? அதனால எல்லாப் பொண்ணுங்களும் தப்பானவங்கன்னு நாங்க சொல்றோமா? ''

உஷ்ணமாய் நிமிர்ந்தாள் '' இந்த மாதிரி வெட்டிப் பேச்சு பேசத்தான் பாட்டி கூப்பிட்டதா சொல்லி கூட்டிட்டு வந்தீங்களா? அதெப்படி பொய் உங்க கூடப் பிறந்ததா? எப்படி மொத்த ஆண்பிள்ளைகளும் ஒரே மாதிரி இருக்கீங்க? '' வெறுப்பை உமிழ்ந்தாள்.

'' ஐயோ சத்யமா பாட்டி தான் உன்னை கூட்டிக்கிட்டு வரச்சொன்னாங்க. அதுவும் பாலாகிட்டதான் சொன்னாங்க. நான் தான் உங்கிட்ட கொஞ்ச நேரம் பேசலாமேன்னு பாலாவுக்கு வேற வேலை கொடுத்து அனுப்பிட்டு உன்னை கூப்பிட வந்தேன். ''

'' எனக்கு உங்க கூட பேச எதுவும் இல்லை '' வேகவேகமாக நடக்க முயன்றவளுடன் இணைந்தே வந்தான் சரவணன். ''

'' ஆனா எனக்கு உன் கூட நிறைய பேசணும் ராசாத்தி. நாலு வருசமா சேர்த்து வச்சிருக்கிற ஆசை மொத்தமும் உன் கிட்டே பேசணும். பேசிக்



கிட்டே இருக்கணும். காலம் பூரா உன் முகத்தை பார்த்துக்கிட்டே வாழணும் ராசாத்தி. உனக்காக எத்தனை வருஷம் வேண்டுமானாலும் காத்திருப்பேன். ஆனா நீ சொல்லணும். எனக்காக காத்திருங்கன்னு நீ சொன்னா ஆயுசு முழுவதும் உனக்காக காத்திருப்பேன். '' கண்களில் மிதக்கும் கனவோடு பேசியவனை நின்று திரும்பி பார்த்தாள். கண்களில் நெருப்பு இருந்தது. இரு கண்களும் நெருப்பு கங்குகளாய் மின்னியது. விட்டால் பார்வையாலேயே எரித்து விடுவதைப் போலிருந்தாள். ஒரு கணம் பயந்து தான் போனான் சரவணன். ஓரடி பின்வாங்கினான்.

'' இந்த மாதிரி பேசித்தான் ஒருத்தன் எங்க அக்காவை நடைபிணமா மாத்திட்டு போயிட்டான். அவன் பேசின பேச்சை நம்பித்தான் ஒரு வருஷம் இல்ல ரெண்டு வருஷம் இல்ல ஒன்பது வருஷமா காத்து மழை பார்க்காம தவமா காத்திட்டு இருக்கா. ஆனா அவன் காசும் பணமுமா பொண்டாட்டி புள்ளையோட குடும்பமும் குத்துமா வாழ்ந்திட்டு இருக்கான். ஊருக்கு வந்தா எங்க அக்காவுக்கு பதில் சொல்லணுமேன்னு ஊர் பக்கமே வராம பதுங்கியிருக்கான் பேடிப் பய. அவனை நேசிச்ச பாவத்துக்காக எங்க அக்கா மட்டுமில்ல எங்க குடும்பமே சிதைஞ்சு சின்னா பின்னமாகிப்போயிடுச்சு. இதில மிஞ்சி இருக்கிறது நான் மட்டும் தான். அதுவும் என் அக்காவுக்காகத் தான் உசுரை பிடிச்சுவைச்சிட்டு திரியறேன். அது உன் கண்ணை உறுத்துதா? ஏன் இப்படி வேட்டை நாய் மாதிரி விரட்டுறே என்னை? ஓ! நீ அந்த ராட்சசி அனுப்பின ஆளா. சொல்லி அனுப்பினானா அவன்? என்னையும் சீரழிச்சு என் மொத்த குடும்பத்தையும் சமாதியாக்கச் சொல்லி உன்னை அனுப்பினானா? அதனால தான் நான் உன்னை எத்தனை வெறுத்தாலும் விடாமல் என்னையே சுத்தி வருகிறாயா? சொல் யார் நீ? அவனோட கையாளா நீ '' அவனது சட்டையை கொத்தாக பற்றினாள் ராசாத்தி.

சரவணன் இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை. திணறித்தான் போனான். மென்மையான ராசாத்திக்குள் இத்தனை வேகமா? எத்தனை ஆங்காரம் ஆவேசம். அவசரமாய் மறுத்தான் '' ஐயோ ராசாத்தி. நான் யாரோட ஆளும் இல்லை. நான் சரவணன். உன் சரவணன். நான் யார் சொல்லியும் உன்னை விரும்பவில்லை. உன்னோட அமைதியும் அடக்கமுமே உன் அக்கா மேல நீ வெச்சிருக்கிற பிரியத்தையும் அக்கறையை

'வாயக்கட்டி வயித்தக் கட்டி சம்பாதிச்சேன்!'
'அதுக்கென்ன இப்ப!'
'நேத்து வந்த திருடன் என் கையக் கட்டி காலக்கட்டி எடுத்துட்டுப் போயிட்டான்!'

-ப.கோபிபச்சமுத்து, கிருஷ்ணகிரி.



யும் பார்த்து தான் உன்னை நான் நேசிச்சேன். என்னை நம்பு. சத்யமா வேற எந்த நோக்கத்தோடயும் உன்னை விரும்பல்ல. தாய், தந்தையை இழந்து தவிக்கிற உங்களுக்கு ஒரு நல்ல துணையா பாதுகாவலனா இருக் கணும்னு தான் ஆசைப்பட்டேன். மத்தபடி நான் மோசமானவன் இல்லை. என்னை நம்பு ராசாத்தி. செத்துப்போன என் அம்மா மேல சத் தியமா இல்ல, இல்ல எம்மேல சத்தியமா நான் நல்லவன் ராசாத்தி'' தன் தலைமீது கை வைத்து சத்தியம் செய்தான்.

சில நொடிகளுக்கு பிறகே தன்னிலை உணர்ந்தாள் ராசாத்தி. பற்றியி ருந்த சரவணனின் சட்டையை சட்டென விட்டாள். சுற்றும் முற்றும் பார்த்து விட்டு விலகி நின்றாள். கண்களை மூடியவாறே பெருமூச்சொ ரிந்து தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டாள். சட்டென கண் திறந்தாள்.

''இதோ பாருங்க சரவணன்! உங்களை உங்க குடும்பத்தில உள்ளவர் களை நான் மதிக்கிறேன். ஏன்னா வீடு வாசல் இழந்து நாங்க தவிச்சப்ப உங்க பாட்டி தான் உங்க வீட்டுல தங்க அனுமதிச்சாங்க. வாடகைக்குத் தான் என்றாலும் எங்க அத்தைக்கு பயந்து வேறு யாருமே இடமளிக்காத போது உங்க பாட்டி தான் எங்களுக்கு அடைக்கலம் தந்தாங்க. அந்த நன்றி இன்னும் என் மனசுல இருக்கு. தயவு செய்து அதை கெடுத்திடாதீங்க. நான் உண்டு எங்க அக்கா உண்டுன்னு ஒதுங்கி வாழுறோம். எனக்கு எல் லாமே அவ தான். அவளுக்கு என்னை விட்டா யாருமே கிடையாது. நாங்க அநாதைங்க. அதுவும் உங்களை மாதிரி ஒரு ஆம்பளையால வஞ்சிக்கப் பட்டு எங்க குடும்பத்தையே இழந்தவங்க. அந்தக் காயமே பச்சைப் புண்ணா இருக்கு. தயவு செய்து அதை கீறி கிளறி விடாதீங்க. உங்களுக்கு புண்ணியமாப் போகும். உங்க வசதிக்கும், அழகுக்கும் படிப்புக்கும் எத் தனையோ பொண்ணுங்க கிடைக்கும். என்னை விட்டுருங்க. இன் னொரு கோதை உருவாக நீங்க காரணமாக வேண்டாம். இனியும் நீங்க என்னை தொந்தரவு பண்ணினா நாங்க இந்த ஊரை விட்டே போயிடு வோம்!''

அவசரமாக இடைமறித்தான் சரவணன் ''நோ, நோ ராசாத்தி! அந்தத் தப்பை மட்டும் செஞ்சிடாதீங்க. நான் இனிமே இப்படி நடந்துக்க மாட் டேன். தொந்தரவு பண்ண மாட்டேன். தயவு செய்து என்னை மன்னிச் சுடு. தூரத்தில இருந்து உன்னை பார்க்கிற பாக்கியமாவது எனக்கு கிடைக் கட்டுமே. நான் நான் போறேன்.'' விலகி நடந்தான்.

ஒரு நொடி ஒரே நொடி அவன் போவதையே பார்த்தாள். பின் விறுவி றுவென நடக்கத் தொடங்கினாள். பெரிய பங்களாவின் பக்கவாட்டு கதவை திறந்து உள்ளே போனாள். தும்பைப்பூ நிற உடையில் இருந்த அழ கம்மாள் அவளை பார்த்ததும் மலர்ந்தாள். ''வாடிம்மா உன்னைத் தான் தேடிட்டே இருந்தேன். சாப்பிட்டியா? ஆமா ஏன் முகமெல்லாம் வாடி இருக்கு?'' பரிவாய்க் கேட்டாள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்ல பாட்டி. இன்னிக்கு வெயில் ஜாஸ்தி அதான். ஏன் பாட்டி வரச்சொன்னீங்க. சீக்கிரம் சொல்லுங்க. அக்கா வர மாட்டேன்னுட்டா. அவ வராம எனக்கு உதறலாவே இருக்கு. பட்டம்மா பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லியதால் வந்தேன்''.

''அதுக்குத்தான் வீட்டோட இருந்து எனக்கு உதவியா இருன்னு



சொல்லேன். நீ முன்ன இருந்தாப்போல ஆச்சு. வேளா வேளைக்குச் சாப்பிட் டாப்போலவும் ஆச்சு. நீயானா இப்படி வேகாத வெயில்ல வேலை செய்து நாளுக்கு நாள் துரும்பாய் போறியேம்மா'' குரலில் உண்மையான வருத் தம் தொனித்தது.

''இல்ல பாட்டி! அங்கே புளியந்தோப்பே கதின்னு நிக்கறா. அவள் நினைப்புல இருக்கிற ஒரே இடம் அதுதான். அதான் அவ கண்ல படுற இடமா வேலைக்குப் போறேன். வீட்ல இருந்தா அவளை கவனிக்க முடி யாதே.''

''ஒரு பத்து நாளுக்கு அவளை எப்படியாவது வீட்ல பிடிச்சு வைம்மா. நீ இப்போ எனக்கு ரொம்ப அவசியம். பேத்தி கல்யாணம் நெருங்குதுல்ல. நேத்தே மதுரை வந்துட்டாங்களாம்.

இன்னிக்கு நம்ம குலதெய்வம் கோவில்ல பூஜைக்கு சொல்லியிருந் தோம். ஆனா மாப்பிள்ளைக்கு வர்ற வழியிலே நல்லா காய்ச்சலாம். அதான் திருநெல்வேலில இறங்கி நேரா ஆஸ்பத்திரிக்கு போயிட்டாங்களாம். இன் னும் கொஞ்ச நேரத்தில் வந்துடுவாங்க. இப்பதான் எம்மகள் போன் பண் ணினாள்.''

பொறுமையிழந்தவளாய், ''அதுக்குதான் என்ன பாட்டி செய்ய முடி யும்,'' என்றாள். கோதை என்ன செய்து கொண்டிருக்கிறாளோ என்ற தவிப்பு அவளுக்கு.

''நீதாம்மா கூட மாட கல்யாணம் வரைக்கும் எனக்கு ஒத்தாசையா இருக்கணும். எல்லாரையும் வீட்டுக்குள்ளே புழங்கவிட முடியாதில்லை. மதுக்கும் பேச்சு துணைக்கு ஆள் வேணுமே. உமாவும் அவ வயசுதான். ஆனா உமா வயித்துப்பிள்ளைக்காரி. அவளை அங்க இங்கன்னு அலைய வைக்க முடியாது பாரு. அதான் உன்னை கூப்பிடுறேன். அது மட்டுமில்ல மாப்பிள்ளையும் இன்னிக்கே வந்து பத்து நாள் இருந்து கல்யாணத்தை முடிச்சிட்டுத்தான் கிளம்புறார். சின்னஞ்சிறுசுக ஒன்னா ஊரைச் சுத்த புறப்படும். கூட ஒரு ஆள் இருந்தாத்தானே பாதுகாப்பு. கல்யாணத்துக்கு முன்னே எதும் தப்பு தண்டா நடந்துடக்கூடாதில்லை. என்ன நான் சொல் றது.''

''அதெல்லாம் சரி பாட்டி. இதுல நான் என்ன பண்ண முடியும். அது [illegible] நான் பார்த்தது கூட இல்லை. அந்த மாப்பிள்ளை கூட நானும் போனா நல்லவளா இருக்கும்? இதெல்லாம் சரியா வராது பாட்டி. கூட மாட உதவி வேணும்னா செய்யுறேன். ஆனா அவங்களோட எல்லாம் என் னால இருக்க முடியாது பாட்டி. என்னா கோதையை கவனிச்சிட்டே இருக் கணும். தவிரவும் வெளியாட்களோட பழகவும் எனக்கு பிடிக்காது. மன் னிச்சிடுங்க பாட்டி. நாங்க எங்களுக்கு உள்ள வீட்டுலேயே இருந்துக்கி றோம். உங்களுக்கு தேவையான வேலையை பின்வாசல் வழியே வந்து செய்துட்டு போறேன் சரியா'' என ஒரு வழியாய் பாட்டியை சமாளித்து விட்டு அடுக்களைக்குள் நுழைந்தாள்.

வாழைக்காயை வைத்துக் கொண்டு திருதிருவென விழித்துக் கொண் டிருந்தாள் வள்ளி. ''என்ன வள்ளி! வாழைக்காயை வெச்சிட்டு ஆராய்ச்சி பண்றியா'' கேலியாய் கேட்ட ராசாத்தியைக் கண்டதும் ஓடி வந்தாள். ''யம் மோவ்! நல்ல வேளைதான் நீங்க வந்தீக. சின்னம்மா பஜ்ஜி போட சொன்

னாங்களாம். பெரியம்மா என்னையை போயி செய்யச் சொல்லிட்டாக. நான் வடை செஞ்சுதான் பழக்கம். இதை என்ன செய்யன்னே தெரிய லம்மா. அதான் பயந்துபோய் நின்னுட்டு இருந்தேன்''

''ப்பூ! இவ்வளவு தானே? என்ன வள்ளி அம்பது பேர் மொத்தமா வந்தாலும் ஒரே மணியில் விருந்து படைச்சி அசத்திடுவே. இதுக்குப் போயி பயப்படுறியே. கொண்டா அந்த வாழைக்காயை. எடு கத்தியை,'' என்றவாறு சுறுசுறுப்பாக வேலையைத் தொடங்கினாள். சூடாக பஜ்ஜி, கெட்டிசட்னி, புதினா சட்னி என செய்து முடிக்கவும். வாசலில் கார் வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

மாப்பிள்ளை வீட்டார் வந்து விட்டார்களோ என அவசரமாய் கையைத் துடைத்துவிட்டு புறப்பட்டவளை பிடித்து நிறுத்தினாள் உமா.

'' என்ன பறக்கிற. நான் உங்கூட கொஞ்சம் பேசணும் வா. உன்னைக் கையிலயே பிடிக்க முடியல்ல வா.'' தன் அறைக்கு இழுத்துச் சென்றாள்.

''இல்ல உமா அக்கா! நான் போய் கோதையை கவனிக்கணும் உடனே போகணுமே அப்புறம் பேசலாமே'' தயக்கமாய் வாசலைப் பார்த்தாள்.

''அதெல்லாம் போகலாம் வா'' என்ற உமாவை விலக்கிவிட்டு போக வும் மனமில்லை. நிறைமாத கர்ப்பிணி. தன்னைப் போலவே தாயை இழந்தவள். தன்னுடைய நெருங்கிய தோழியும் கூட.

''உமா கொஞ்சம் சீக்கிரம் சொல்லு. உங்க வீட்டுக்கு விருந்தாளி எல் லாம் வர்றாங்க. அந்த நேரம் நான் இங்க இருந்தா நல்லா இருக்காது''

''ஏன் எங்களை அந்நியமாவே நினைக்கிற. நாங்க உன்னை அப்படி நினைக்கல. உன்னை என் அண்ணியாத்தான் நினைக்கிறேன்.''

''உமா'' என்ற பதட்டமான இருவருமே திடுக்கிட்டுத் திரும்பினர். சரவணன் வந்து கொண்டிருந்தான். ''உமா! அவங்களை போகவிடு. சும்மா ஏன் இம்சை பண்ணுற. ஒருத்தரோட விருப்பம் இல்லாம இந்த மாதிரி பேசாதே.''

என்னாச்சு இந்த அண்ணனுக்கு? சும்மா ஏன் இத்தனை கோபம்?

''அண்ணா வந்து...'' அதற்குள் ''நான் வர்றேன் உமா'' ராசாத்தி அறை யைவிட்டு வெளியேறினாள்.

''என்னண்ணா நீ சூப்பர் சான்ஸ் தெரியுமா? உன் மனசை சொல்ல

'என் மனைவி எப்பவும் எடுத் தெறிஞ்சிதான் பேசுவா!'

'அதான் பார்த்தாலே தெரி யுதே உடம்பு பூரா இவ்வளவு தழும்பு இருக்கே'

-பி.பாலாஜிகணேஷ்.
கோவிலாம்பூண்டி.





லாம்னா வந்து கெடுத்துட்டியே! இன்னும் பத்துநாள் நம்ம வீடு ரொம்ப பிஸியா இருக்கும். அவகிட்ட பேசவே முடியாது. போன்னா நீ'' அலுத் துக் கொண்டாள்.

''இல்லம்மா! நாங்க ஏற்கனவே பேசிட்டோம். நிறையவே பேசிட் டோம். இனிமே இதைப்பத்தி நீ ராசாத்திகிட்ட எதுவும் பேசாதே. போ போய் ரெஸ்ட் எடு. கண்டதையும் போட்டு மனசை குழப்பிக்காதே உன் உடம்புக்கு ஆகாது'' தலையை வருடி விட்டுச் சென்றவனை குழப்பமாய் பார்த்தாள் உமா.

# 9

***எனக்குள்ள வேதனை நிலவுக்கு தெரிந்திடும்***
***நிலவுக்கும் ஜோடி இல்லை!***
***எழுதிய கவிதைகள் உனை வந்து சேர்ந்திட***
***கவிதைக்கும் கால்கள் இல்லை!***
***சருகாய் அன்பே நான் காத்திருக்கிறேன்***
***எங்கே உன் காலடி....?***

''மாப்பிள்ளை! கொஞ்ச நேரத்துல நாங்க ரொம்பவே பயந்துட் டோம். நீங்க மதுரையில இறங்கல்லன்ன உடனே போன் பண்ணிப் பார்த் தோம். கிடைக்கவே இல்லை. சரின்னு திருநெல்வேலிக்கு உடனே கார்ல கிளம்பிட்டோம். ஆனா டிரெயின் நின்னு ரொம்ப நேரம் கழிச்சும் நீங்க இறங்கல்லன்னதும் ரொம்பவே பயந்துட்டோம். மது அழுதுட்டா. அப்பு றம் எல்லாருமே பெட்டி பெட்டியா தேடிப் பார்த்தோம். நீங்க காய்ச்சல்ல கண் திறக்க முடியாம கிடந்ததைப் பார்த்து பதறிட்டோம். உடனே ஹாஸ் பிடலுக்கு தூக்கிட்டு போயிட்டு...'' மோகன் சொல்லிக் கொண்டே வர மீனா அதட்டினாள்.

''எங்க! கொஞ்ச நேரம் சும்மா இருக்கமாட்டீங்களா. ஏற்கனவே மாப் பிள்ளை ரொம்ப சோர்வா இருக்காரு. நீங்க வேற நொய் நொய்ன்னு கிட்டு''

''ஆமாமா! ஸாரி மாப்பிள்ளை. ஏம்மா மது நீ என்ன வாயை திறக் கவே இல்லை. அதான் மாப்பிள்ளைக்கு சரியாச்சில்ல. ரெண்டு நாள் ரெஸ்ட் எடுத்தா போதும்னு டாக்டரே சொல்லிட்டாரே. இன்னும் ஏம்மா டல்லா இருக்கே''

''ஏன் போனை ஆப் பண்ணி வெச்சிருந்தீங்க'' ரகுவைப் பார்த்துக் கேட்டார். ரகு ஒரே நாளில் தளர்ந்திருந்தான்.

''ஓ! ஸாரி ட்ரெய்ன் கிளம்புற வரைக்கும் பாட்டு கேட்டுட்டு இருந் தேன். அப்புறம் பாட்டை ஆப்பண்ணினேன். எப்படியோ ஸ்விட்ச் ஆப் ஆகியிருக்கு. நான் கவனிக்கவே இல்ல. ஸாரி. என்னால உங்களுக்குத்தான் ரொம்ப சிரமம். இன்னிக்கு கோயில்ல பூஜைன்னு சொல்லியிருந்தீங் களே'' ரகுவின் குரலில் உண்மையான வருத்தம் இருந்தது.

கோபாலகிருஷ்ணன் அவசரமாய் மறுத்தார். ''அட என்ன மாப் பிள்ளை நீங்க. பூஜையை எப்பவேணா செய்யலாம். உங்க உடம்புதான்

முக்கியம். நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க ரெண்டு நாள் நல்லா ரெஸ்ட் எடுங்க. நல்லா குணமான பிறகு எல்லாம் பார்த்துக்கலாம். அது வரை நம்ம வீட்டுலயே நீங்க தங்கிக்கிங்க மாப்பிள்ளை"

"இல்ல மாமா. அக்காவையும் பார்த்து ரெண்டு நாளாச்சு எதிர்பார்த்திட்டே இருப்பா. நான் எங்க வீட்டுல இறங்கிடுறேனே"

"நோ. நோ. நான் ராசாத்திக்கு போன் பண்ணி விருந்துக்கு ஏற்பாடு பண்ணிட்டேன். தவிர நாம முதல்முறையா இப்பத்தான் ஊருக்கு வர்றோம். சேர்ந்து போகணும். முதல்ல நம்ம வீட்டுக்கு வாங்க. அப்புறம் உங்க வீட்டுக்கு போகலாம்" உறுதியான குரலில் மறுபிரதாக...

"சரி தான். இனி அப்பீலே கிடையாது" பேசாமல் ... கண்களை மூடி சீட்டில் சாய்ந்தான். கார் திசை கொண்டு புதூர் ... மத்தை தொட்டது. தென் மணமும் மண் வாசனையும் நாசியை தொடக் கண் விழித்தான். ஊருக்குள் நுழைந்து விட்டோம் என்ற எண்ணமே இதயத்துடிப்பை எகிறவைத்தது. சுற்றிலும் ரியர்வியூ வால் பார்த்தான். ஒன்பது வருடங்களில் ஊர் நிறையவே மாறியிருந்தது. தெருக்களில் அகலமான சிமெண்ட் சாலைகள் போடப்பட்டிருக்க ஓரங்களில் மரங்கள் உயர்ந்து நின்றன. புழுதியோட விளையாடிக் கொண்டிருக்கும் வாண்டுகள் இல்லை. தொலைக்காட்சியில் ஆழ்ந்திருக்கிறார்களோ? மற்றபடி எப்போதும் போல் அமைதியாக இருந்த ஊரை ரசிக்க ஆரம்பித்தான். இதோ தான் படித்த பள்ளி. அதோ நம் வீடு. சுற்றிப்பார்க்கும் முன் வாசலில் திரும்பி சற்றுதூரம் போய் நின்றது. அனைவரும் இறங்க இரு பெண்கள் வந்து ஆரத்தி சுற்றினர்.

ரகுவிற்கு படபடப்பு அதிகரித்தது. தலை சுற்றியது. விழப்போனவனை சரவணன் ஓடிவந்து தாங்கிக் கொண்டான். சட்டென அங்கே பரப்பான சூழல் அனைவருக்கும் ஒரு பயத்தை உண்டு பண்ணியது.

சிறிய ஓட்டு வீடு. இரண்டு அறைகளைக் கொண்டிருந்தது. நார்க்கட்டிலில் சோர்ந்து துவண்டிருந்த கோதையின் கால்களை மெதுவாக பிடித்து விட்டுக்கொண்டிருந்தாள், ராசாத்தி. "கால் ரொம்ப வலிக்குது அத்தான்," மெலிதாய் முனகினாள். விம்மினாள் ராசாத்தி.

"இந்த வலியிலும் உறக்கத்திலும் கூட அவனை மறக்க முடியவில்லையா உன்னால்? ஏன் இப்படி உன்னையே வருத்திக்கொண்டிருக்கிறாய் அக்கா? அவன் இத்தனை ஆண்டுகளில் உன் பெயரைக் கூட மறந்து போயிருப்பானே. நீயே எதிரில் வந்தாலும் உன்னைக் கண்டு கொள்ளமுடியாத அளவுக்கு உன் முகத்தை மறந்திருப்பானே. இந்த நேரம் எவளுடன் களித்துக் கொண்டிருப்பானோ? எப்போது மறப்பாய் அவனை? நீயும் நொந்து என் என்னையும் ரத்தக் கண்ணீர் வடிக்க வைக்கிறாய்? "கண்களில் நீர் ஆறாய் பெருகியது. இத்தனை வருடங்கள் அழுதும் இந்த கண்ணீர் மட்டும் வற்றவே இல்லையே. இந்த கண்ணீரில் சில துளி மட்டும் அக்கா சிந்தியிருந்தால் போதும் அவளது மனபாரம் தீர்ந்திருக்கும். தெளிவாகி இருப்பாள். ஏன் இப்படி போனாள்? கண் முன்னே தாயும் தந்தையும் பிணமாகிக் கிடந்தபோதும் கூட ஒரு துளி நீர் கூட சிந்தவில்லையே. அன்று இறுகியவள் தானே.

"பாருங்கம்மா! அவங்க ரொம்ப அதிர்ச்சியில இருக்காங்க. ஏற்க



னவே அவங்க பின்னந்தலையில அடிப்பட்டதுல சில நரம்புகள் சிதைஞ்சி போயிருக்கு. அந்த நேரமே அதை நீங்க ஹாஸ்பிடல்ல சேர்த்து கவனிச்சிருக்க வேண்டும். விட்டுட்டீங்க. அதனால தான் இப்ப ரொம்ப மோசமாயிப்போச்சு. இப்பவும் ஒண்ணும் கெட்டுப்போயிடல்ல. உங்களால முடியும்னா ஹாஸ்பிடல்ல சேர்த்திடுங்க. ஆனா உடனே குணமாகிவிடும்னு சொல்லமுடியாது. கொஞ்சம் கொஞ்சமாத்தான் குணம் ஆகும். நாளும் ஆகும். பணமும் செலவாகும். என்ன சொல்றீங்க" பக்கத்து ஊர் டாக்டர் சொன்னபோது ராசாத்தியால் அழத்தான் முடிந்தது. அவளது அழுகையே அவளது நிலையை உணர்த்தியிருக்க வேண்டும்.

"அழாதேம்மா. இப்போதைக்கு கொஞ்சம் மருந்து மாத்திரை தர்றேன். கொஞ்ச நாளைக்கு குடுங்க. மருந்து மாத்திரையை விட அவங்க நினைவுல பதிஞ்சி போயிருக்கிற அவங்க அத்தானை வரவழைங்க. அவரைப் பார்த்தா கண்டிப்பா மாறிடலாம். அவரோட சேர்ந்து கொஞ்சமா மாறி பழைய நிலைக்கு மாற வாய்ப்பு இருக்கு. என்னால வெளிகாயத்துக்கு மருந்து போட முடியும். மத்தத நீங்க தான் பார்த்துக்கணும்" என்று சில மாத்திரை மருந்துகளை தந்திருந்தார்.

என்னதான் மருந்து மாத்திரை சாப்பிட்டாலும் அத்தான் அத்தான் என ஒவ்வொரு இடமாக தேடி ஓடுபவளை ராசாத்தியால் சமாளிக்க முடியாமல் தான் யாரைப் பார்த்தால் தனக்கு வெறிபிடித்து விடும் என்று பார்க்காமல் தவிர்த்து வந்தாளோ அந்த அத்தை ஊருக்கு வந்திருப்பதை அறிந்து அவள் காலில் போய் விழுந்தாள்.

"அத்தே! கொஞ்சம் தயவு பண்ணுங்க அத்தை. அக்கா அத்தான் நினைவில பைத்தியம் மாதிரி அலையுறா. டாக்டர் அத்தான் வந்தால்தான் சரியாகும்னு சொல்லிட்டார். ஒரே ஒரு முறை அத்தானை ஊருக்கு வரச் சொல்லுங்க அத்தை. அக்கா சரியான உடனே அவளைக் கூட்டிட்டு வேற ஊருக்கு போயிடுறேன் அத்தை. உங்க கண்ணிலே படமாட்டோம் அத்தே. இரக்கம் காட்டுங்க அத்தை" என காலைப் பற்றிக் கொண்டு கதறியவளை உதறித் தள்ளினாள் ரஞ்சிதம்.

"ஏண்டி! ஊர்ல உள்ள பைத்தியமெல்லாம் தெளியவைக்கவா எம் புள்ளைய பெத்தேன். அவனுக்கென்ன தலையெழுத்தா? அவன் ராஜாடி. உனக்குத் தெரியுமா அவனுக்கு கல்யாணம் முடிஞ்சு பொண்டாட்டியோட தேன் நிலவுக்கு போயிருக்கான். திரும்பி வர ஒரு மாசமாகும். இப்பப் போயி ஊர்ல ஒரு பைத்தியக்காரி அலையுறா. உன்னை பார்க்கணுமாம். உடனே வான்னு சொன்னா நல்லாவா இருக்கும்! இல்ல எம்மருமகதான் என்னை என்ன நினைப்பா. அவ ஒண்ணும் உங்களை மாதிரி பிச்சைக்காரி இல்லடி. கோமஸ்வரி. போடி போய் உங்க அக்காள ஏதாவது ஆத்துலயோ குளத்திலயோ போய் விழச்சொல்லு. அவ இருந்து என்ன சாதிக்கப் போறா? அவ போயிட்டாளா நீயாவது எவனையாவது இழுத்துட்டு போய் நிம்மதியா வாழலாம்."

நெருப்பை அள்ளிவீசினாள் ரஞ்சிதம். "அத்தே இப்படியெல்லாம் பேசாதீங்க. என்ன இருந்தாலும் நாங்க உங்க அண்ணன் பொண்ணுங்க தானே."

"ம்ஹூம், அண்ணனே இல்லை. அப்புறம் என்னடி அண்ணன்

பொண்ணுங்க. நீங்க அந்த பிச்சைக்காரிக்கு பொறந்த பிச்சைக்காரிங்கடி'' இடியாய் இடித்தாள்.

ராசாத்திக்கு கோபம் கருநாகமாய் சீறியது. ''நிறுத்துடி! சும்மா பிச்சைக்காரின்னு வார்த்தைக்கு வார்த்தை பேசுறியே. யாருடி பிச்சைக்காரி நீயா நாங்களா? இதெல்லாம் எங்க அப்பாவுக்கு வரவேண்டிய சொத்து. தாத்தாகிட்ட நல்லா நடிச்சி அப்படியே சொத்தெல்லாம் அமுக்கிட்ட. இப்ப எங்களை பிச்சைக்காரின்றியா. இதோபார்! இப்ப.. இப்ப நான் இந்த சொத்துக்காக ஒரு கேஸ் போட்டாலும் போதும். நீ நடுத்தெருவுல தான் நிப்ப. அத முதல்ல ஞாபகம் வெச்சிக்க.'' ராசாத்தியின் மிரட்டலில் அரண்டுதான் போனாள். அதற்குள் அக்கம் பக்கத்தார் கூடிவிட வாயில அடித்துக் கொண்டாள் ரஞ்சிதம்.


''அய்யோ! அய்யோ! இந்த அநியாயத்தை பார்த்தீங்களா. பொட்டக் கழுதை என்ன பேசுது பார்த்தீங்களா? கேஸ் போடுவாளாம்ல. எங்க அண்ணன் போனப்பவே உங்களை இந்த ஊரைவிட்டே துரத்தியிருக்கணும். விட்டது எந்தப்புதான். எல்லாரும் நல்லா கேட்டுக்காங்க. எங்கண்ணன் ஏன் செத்தான்னு தெரியுமா. இதோ இந்த ஓடுகாலியும் அவ அக்காளுமா சேர்ந்து எங்கேயோ கெட்டு சீரழிஞ்சு போயிட்டாங்க. அந்த அவமானம் தாங்காமத்தான் செத்துப்போயிட்டான். கூடவே வந்தாளே ஒருத்தி அவளும் பத்தினியாட்டம் போய் சேர்ந்துட்டா. அப்படி போகுறதுக்கு முன்னால இந்த நாய்கிட்ட எப்படி சொத்தை அபகரிக்கணும்னு சொல்லி கொடுத்தாப்போல. அதான் இது வந்து குலைக்கிது.'' வாய்க்கு வந்தபடியெல்லாம் சேற்றை வாரியிறைத்தாள். பேச்சு முற்றி ராசாத்தி ரஞ்சிதத்தின் கழுத்தைப் பற்றி ஆவேசமாய் நெரிக்க மற்றவர்கள்விலக்கி விடாமல் போயிருந்தால் நிச்சயம் கொன்றே போட்டிருப்பாள். ஆத்திரமாவது அடங்கிபோயிருக்கும்.

ஆத்திரத்தோடு போய் அவமானமும் பட்டு வீடுவந்து சேர்ந்தபோது கோதை வீட்டில் இல்லை. அலறிபுடைத்துக் கொண்டு அத்தை சொன்ன ஆறு குளம் கிணறு எல்லாம் தேடிதான் பெற்றவர்களின் சமாதியைத் தேடிப்போன போதுதான் புளியந்தோப்பில் நின்று கொண்டிருந்தாள் கோதை. நிம்மதிமூச்சுடன் பெருகிய கண்ணீருடன் ஓடிச்சென்று கட்டியணைத்த போதுதான்.

''அத்தான் வரும். பார்த்திட்டு வர்றேன் நீ போ'' என்றாள் கோதை. தனக்கு தெரிந்து அத்தான் கோதையிடம் பேசிய முதல் இடம் இதுதான். அன்றிலிருநதது அந்த இடமே கோதையின் அசோகவனம் ஆயிற்று. நம்



'உங்களுக்கு திடீர் திடீர்னு கோபம் வருமாமே?'
'எந்த நாய் சொன்னது!'
-என்.குணசீலன்,
பட்டுக்கோட்டை.



ஊர். நம் மக்கள் என்ற நம்பிக்கையில இதோ இத்தனை காலம் ஓடிற்று.
இனி எத்தனை காலம் இப்படி போராட முடியும்.

இதில் சரவணன் வேறு ஒரு பக்கம் தன்னை நெருக்குகிறார். இது போதாதென உமாவிற்கும் விசயம் தெரிந்திருக்கிறது. நாளை பாட்டிக்கும் தெரியவரும். பிறகு பாட்டியும் ரஞ்சிதமாய் மாற மாட்டாள் என்பது என்ன நிச்சயம்? என்னதான் பாசமாய் பழகினாலும் தன்பிள்ளை திருமணம் என்று வரும்போது தேடுவார்கள்? தாய் தந்தையை துர்மரணத்திற்கு பலிகொடுத்துவிட்டு அநாதையாய் அதுவும் ஒரு மனநலமற்ற சகோதரியையும் உடன் வைத்திருப்பவளை ஏற்றுக் கொள்ள யாருக்கு மனம் வரும்? இது ஏன் சரவணனுக்கும் உமாவிற்கும் புரியவில்லை.

அவர்கள் மனம் பாலாய் இருக்கலாம். பெரியவர்கள் அதில் துளி விசத்தை கலந்தால் போயிற்றே. தவிரவும் தனியாய் தவித்த நேரத்தில் ஒண்டிக்கொள்ள குடிசை தந்தவர் அழகம்மா பாட்டி. அவருக்கு நான் பாதகம் செய்யக்கூடாது. வேண்டாம் இந்த ஊரே நமக்கு வேண்டாம். இந்த ஊரில் இருக்கும் வரை அக்கா மாறப்போவதில்லை. பட்டணத்திலேயே தங்கிவிட்ட அவனும் வரப்போவதில்லை. பின் எதற்காக நாம் இருக்க வேண்டும். யாருக்காக? பேசாமல் ஊரைவிட்டே போய் விட்டால் என்ன?

பெரிய வீட்டின் கலகலப்பு இங்கு வரை கேட்டது. விருந்தினர் அனைவரும் வந்தாயிற்றுபோல் தெரிகிறது. இனி அவர்கள் கல்யாண பரபரப்பில் இருப்பார்கள். நம்மை யாரும் தேடப்போவதில்லை. இது தான் நல்ல சமயம். பேசாமல் விடியு முன் கிளம்பிவிடுவது நல்லது. முடிவு செய்த உடன் புறப்பட ஆயத்தமானாள். கோதை உறங்கிக் கொண்டிருக்க, கொடியில் கிடந்த துணிமணிகளை அடுக்கி மூட்டை கட்ட ஆரம்பித்தாள் ராசாத்தி.



'நீங்க எப்படி படி படியா முன்னேறுனீங்க'
'அரிசி கடை வச்சி தாண்ங்க'
-பி.பாலாஜிகணேஷ்,
கோவிலாம்பூண்டி.

இத்தனை வருடங்களாய் காணத் துடித்த அத்தான் கூப்பிடு தூரத்தில் இருப்பதை அறியாத கோதை பகலெல்லாம் கால்கடுக்க நின்ற களைப்பில் கண் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள். கனவிலும் அத்தான் வந்திருக்கக் கூடுமோ? வறண்ட உதடுகள் புன்னகையோடு விரிந்தது. பார்த்துக் கொண்டிருந்த ராசாத்தி தாள முடியாமல் தலையில் பட்பட்டென்று அடித்துக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

அதே நேரம் பால்கனியில் நின்று



எதிர் திசையையே வெறித்துக் கொண்டிருந்தான் ரகு. அவனது கோதை வாழ்ந்த வீடு முழுவதும் தரைமட்டமாக்கப்பட்டு மாட்டு தொழுவமாய் மாற்றப்பட்டிருந்தது. விதவிதமாய் கறவைமாடுகள் கட்டப்பட்டு இருந்தன.

[illegible] நச்சரித்தில், "அவர்களெல்லாம் ஊரை விட்டு போனப்பு நம் வீடு பூட்டியே கிடந்ததாம். அம்மா சொத்து விக்க வந்தப்பதான் இதையும் இடிச்சிட்டு மாட்டுத்தொழுவம் கட்டிப்போட்டாங்களாம். நான் வரும்போதே இதையெல்லாம் நம்ம சாமிபுதான் பார்த்திட்டு இருந்தான். இப்பவும் அங்கே தான் இருக்கான். அதெல்லாம் இருக்கட்டும் தம்பி, நீ [illegible] நினைச்சிட்டாங்களாம். [illegible] பார்த்தேட்டான்.

"இல்லக்கா காய்ச்சல்ல ரொம்ப டயர்டா ஆயிட்டேன். இதில டிராவல் வேற பண்ணிட்டு வந்தேனா, அதான் கொஞ்சம் தளர்ச்சி ஆயிட்டேன். அதுக்குள்ள ஆளாளுக்கு பதறிட்டாங்க. சக்கா நான் போய் என் ரூம்ல படுத்துக்கிறேன்." என்றவாறு தனிமையை தேடி மேலே வந்தாலும் மனதில் அமைதி என்பது துளியும் இல்லாமல் போயிற்று.

"அதெப்படி என்னதான் பணக்கார இடம் என்றாலும் கோதையோடு அத்தையும் மாமாவும் எப்படி சென்றிருப்பார்கள். அதுவும் வாழாவெட்டியாக வந்த பெண் ராசாத்தியையும் அழைத்துக் கொண்டு. இல்லை. இதை நம்ப முடியாது. ஏதுவோ என்னிடம் மறைக்கப்படுகிறது. நாளை முதல் வேலையாக பழைய நண்பர்களை தேடிப்போக வேண்டும்."

அவனது முடிவு அவனுக்கே அபத்தமாகத்தான்பட்டது. இத்தனை வருடம் இந்தப்பக்கமே வராதவன் இனிமேல் எதை விசாரித்து என்ன உண்மையை அறிந்து என்ன பயன்?

**10**

நீரு நெலம் நாலுபக்கம்- நான்
திரும்பி பார்த்தாலும்- அந்தப்
பக்கம் இந்தப் பக்கம்
அத்தனையும் நீயாகும்- நெஞ்சுக்குள்ள
நீங்காம நீதான் வாழுற....

உமா திட்டித்தீர்த்துக் கொண்டிருந்தாள்.

"உனக்கு ஏன் இத்தனை வீம்பு ராசாத்தி. உலகம் ரொம்பக் கொடியது. பெண் பிள்ளையாய் நீங்கள் இருவரும் தனியே போய் எப்படி வாழ முடியும்? அதுவும் கோதையை இந்த நிலையில் வைத்துக் கொண்டு. உனக்கும் மறை கழன்று போயிடுச்சா? இல்லை நாங்கள் உன்னை புறக்கணித்துவிட்டோமா. ஏன் இந்த முடிவை எடுத்தாய் நீ. என் அண்ணன் உன்னை விரும்பியது அவர் விருப்பம். நீ மறுத்தது உன் விருப்பம். அதோடு முடிந்துபோன கதைக்கு இதுதான் நீ தேடிய தீர்வா. உன்னை

என் தோழியாய் பழகிய என்னிடம் கூட சொல்லிக்கொள்ளாமல்..ச்சே...''

கதவோரமாய் கைகட்டிக் கொண்டு நின்றிருந்த, சரவணன் வாய்திறந்தான். ''வேண்டாம் உமா! ராசாத்தியைத் திட்டாதே. பாவம் அவள். என் ராசாத்தி நேத்துதான் தெளிவா சொன்னேனே. இனிமே உன்னை தொந்தரவு பண்ணமாட்டேன்னு. அப்படியும் நீ போகணும்னு நினைச்சா நான் என்ன அத்தனை மோசமானவனா? இவ்வளவுதானா உனக்கு என் மீது நம்பிக்கை. நான் என்ன செய்தால் நம்புவாய். சொல். செய்கிறேன். ஆனால் தயவு செய்து தூரமாய் விலகிப்போக மட்டும் முடிவு செய்திடாதே. அதை என்னால் தாங்க...'' அதற்கு மேல் பேச முடியாமல் விலகினான்.

அண்ணனின் கண்கள் கலங்கியதைக் கண்டு கோபமாய் திரும்பிய உமா ராசாத்தியின் கண்களிலும் நீரைக் கண்டு பேச்சற்றுப் போனாள். இருவரின் முகங்களையும் மாறி மாறி பார்த்து மிரண்டு கொண்டிருந்த கோதையின் அருகில் வந்தாள் உமா.

''தேங்க்ஸ் கோதை. நீங்க மட்டும் சத்தம் போடாம உங்க தங்கை கூப்பிட்டதும் அமைதியாய் போயிருந்தால் நாங்கள் இங்கு வந்திருக்க முடியாது. என் அண்ணனும் தன்னால்தான் இப்படி நடந்துவிட்டது என்று மனம் குலைந்து போயிருப்பான். ரொம்ப தேங்க்ஸ் கோதை''

''நான் அத்தானை விட்டுட்டு எங்கேயும் வரமாட்டேன். நான் அத்தானை பார்க்க போகணும்'' என்று வாசல் அருகே சென்றவளை கைபற்றி நிறுத்தினாள் ராசாத்தி. கையை உதறினாள் கோதை ''சரி, சரி. ராசாத்தியை அடிச்சுடலாம். கோதை! இன்னிக்கு உங்க அத்தான் நம்ம வீட்டுக்கே வர்றாங்களாம். இனிமே கோதை வெயில்ல அலைய வேண்டாம். நான் வீட்ல வந்து பார்க்கிறேன்னு சொல்லிட்டாங்க. நாம நம்ம வீட்டுக்கு போலாமா'' உமா பரிவாய் கேட்கவும் பலமான தலையாட்டலோடு அவளது கையை பிடித்துக் கொண்டு புறப்பட்டாள் கோதை.

ராசாத்தி பதறினாள். ''உமா என்ன இது. ஏன் உங்க வீட்டுக்கு கூட்டிட்டு போறே. யாராவது ஏதாவது சொல்லப் போறாங்க.''

''யாரும் எதுவும் சொல்லமாட்டாங்கம்மா. எல்லோரும் நம்ம தோட்டத்துல உள்ள குலசாமிக்கு பொங்கல் வைக்க போயாச்சு. நான் போகக் கூடாதாம். அதனால நானும்பாட்டியும் தான் வீட்ல இருக்கோம். நானும் கோதையும் சாப்பிட்டு என் ரூம்லயே இருந்துக்கிறோம். நீயும் கதவை பூட்டிட்டு வா சாப்பிட. உன் வீம்பையெல்லாம் இதோ இந்த மூட்டை முடிச்சோட சேர்த்து கட்டிவை. கோதைமேல அக்கறை இருக்கு. சீக்கிரம் வா'' என அவளையும் கிளப்பிக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தபோது,

''அம்மாடி! ராசாத்தி உன்னைத்தான் எதிர்பார்த்திட்டு இருந்தேன். பாரு எல்லோரும் கோவிலுக்கு போற அவசரத்தில சாமிகிட்ட வெச்சி கும்பிட வேண்டிய கல்யாண புடவையையும் பத்திரிகையையும் விட்டுட்டு போயிட்டாங்க. கொஞ்சம் போய் கொடுத்திட்டு வந்திடுறியா. இந்த சரவணன் பயலையும் இன்னும் காணோம்'' பாட்டியின் குரலில் அவசரம் இருந்தது.

''நானா'' தயங்கி நின்றவளை உமா விரட்டினாள்.

''போயிட்டு வா ராசாத்தி. நான் கோதையை பார்த்துக் கொள்கிறேன்''



என்றதும் அரைமனதோடு தாம்பாளத் தட்டை வாங்கிக் கொண்டு கிளம்பினாள். பத்திரிகை பறந்துவிடாமல் இருக்க அதன் மேல் புடவையை அட்டை பெட்டியோடு வைத்திருந்தாள் பாட்டி.

பொண்ணுபேர் மதுமிதா. மாப்பிள்ளை பேர் என்னவாக இருக்கும். பார்க்கலாமா எழுந்த துளி ஆர்வத்தை அடக்கினாள். யாராக இருந்தால் என்ன? கொடுத்துவிட்டு சென்றவளை அவ்வளவு சீக்கிரமா அனுப்பிவிடவில்லை.

அந்த இடத்தை பெருக்கு. இதைத்துடை. வள்ளி வெல்லத்தை உடைக்கிறாய் நீ அடுப்பை கவனி என இடுப்பில் கையை வைத்துக் கொண்டு உத்தரவிட்டுக் கொண்டிருந்தாள் மது. அழகாய்த்தான் இருக்கிறாள். நெடுநெடுவென்ற வளர்த்தி. மிதமான நிறம். விலை உயர்ந்த பட்டும் நகையுமாய் மின்னத்தான் செய்கிறாள். ஆனால் மென்மையாக பேசவே தெரியாதோ? ஏனோ ரஞ்சிதத்தின் நினைவு தான் வந்தது. இவளைப் போல் ஒருத்தி அந்த அரக்கிக்கு மருமகளாகக் கிடைத்திருக்க வேண்டும். அதிர்ந்து கூட பேசாத கோதையை விட்டுவிட்டு வேறு எவளையோ கட்டிக் கொண்டானே அவனும் இப்படிப்பட்ட ஒருத்தடகையிடம் மாட்டிக் கொண்டு தினம் தினம் துடிக்க வேண்டும். அய்யோ! கோதைக்கு கொடுமை செய்துவிட்டேனே என ஒவ்வொரு நொடியும் அவன் நினைத்து புலம்ப வேண்டும்.

தீ கொழுந்து விட்டு எரிய அதற்கு இணையாக ராசாத்தியின் முகமும் ஜொலித்தது.

''ஏய்! உம் பேரென்ன. எத்தினி வாட்டி கூப்பிடுறது'' என்ற கூச்சலில் எழுந்து வந்தாள்.

''எம் பேர் ராசாத்தி.''

''சரி, வெச்சிக்க. இந்தா பிடி'' என்றவாறு சீவிய செவ்விளநீரை கையில் கொடுத்தாள். புரியாமல் பார்த்தவளிடம், ''மாப்பிள்ளை அதோ அந்த மாமரம் பக்கம் போனார். போய் கொடுத்துட்டு வா''

அவசரமாய் மறுத்தாள் ராசாத்தி. ''இதோ பார்! நான் கட்டியிருக்கிற

'போன வாரம் உங்ககிட்டே கைமாத்தா வாங்கிக்கிட்டுப் போன ஒரு கிளாஸ் சர்க்கரையைக் கொடுத்துட்டு ரெண்டு ரூபாய் வாங்கிட்டு வர சொன்னாங்க எங்க அம்மா?'

'எதுக்கு?'

'போனவாரத்தை விட இந்த வாரம் சர்க்கரை விலை அதிகமாயிடுச்சாமே..!'

மு.மதிவாணன், அரூர்.



பட்டுப்புடவை பதினேழாயிரம் ரூபாய். இதுல இளநீர் கறைபட்டா போதுமா? அதோட புடவை கட்டி எனக்குப் பழக்கமில்லை. நடந்தாலே இடறிவிழுது. நீதான் தூக்கிச் செருகியிருக்கியே. போய் குடுத்துட்டு அவளை சீக்கிரமாய் வரச்சொல் என்னதான் ரசனையோ இவருக்கு. சதா காடு தோட்டம்னு ரசிச்சிட்டு அலையறாரு.'' தன் அருகில் நின்று தன்னிடம் குழைவாய் ஒரு வார்த்தை பேசவில்லையே என்ற கடுப்பில் அவள் பொரிய, ராசாத்தி அமைதியாய் மாமரத்தை நோக்கி நடந்தாள்.

பார்ப்போமே அந்த மாப்பிள்ளையை. இந்த பிசாசைக் கட்டிக் கொண்டு என்ன பாடுபடப்போகிறாரோ? தான் எதிர்கொள்ளப்போகும் நபரைப் பற்றி பரிதாபப்பட்டுக் கொண்டே நெருங்கினாள்.

''கோதை'' ம் இந்த மாமர நிழல்ல அந்த மல்லிகைத் தோட்ட வாசத்துல நீ பக்கத்தில இருக்கும்போது எனக்கு எப்படியோ இருக்குது'' ரகுவின் மூச்சு சூடாய் காதில் மோத கோதை படபடப்போடு பார்த்தாள்.

''அத்தான் உங்க பேச்சே சரியில்ல. நான் போறேன்'' எழுந்தவளை கப்பென கைபற்றி உட்கார வைத்தான். ''ஏன்டி! நான் உன் அத்தான் தானே. எனக்கு அந்த உரிமை இல்லையா. இல்லை நம்பிக்கை இல்லியா'' கிசுகிசுப்பாய் காதோரம் பேசியதில் கோதையின் மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன. ஒரு கணம் தன்னை மறந்து அவன் அணைப்பில் மயங்கினாலும் உடனே அவனை உதறிவிட்டு எழுந்தாள்.

''இதோ பாருங்க அத்தான் நீ இப்படி எல்லாம் பண்ணினா இனிமே நீ கூப்பிடற இடத்துக்கு வரவே மாட்டேன். இனிமே இந்த இடமே வேண்டாம். ஆள் அரவமே இல்லை. அதான் உம்புத்திகூட மோசமா நினைக்குது. நான் போறேன். ராசாத்தியை கூட்டிட்டு வராதது என் தப்பு. நான் போறேன்.'' நடக்க ஆரம்பித்தாள் கோதை.

''ஏன்டி! எம்மேல உனக்கு நம்பிக்கை இல்லையா''

''ஐயோ அத்தான் உம்மேல ரொம்ப நம்பிக்கை இருக்கு. அதைவிட உனக்கு எல்லா உரிமையும் இருக்கு. ஆனா அதுக்குன்னு நேரம் வர வேண்டாமா. அத்தான் இந்த உடல் எம்மனசு உசுரு எல்லாமே உனக்குத்தான். உன்னைத் தவிர இன்னொருத்தனை அதை தொடவிடமாட்டேன். முதல்ல அத்தைகிட்ட சொல்லிநாளுகிட்டு அத்தான் அப்புறம்....'' என்றவள் வெட்கத்தோடு நிறுத்திவிட..

''ம் சொல்லு'' ''அப்புறம்...'' என குனிந்து புன்னகையோடு அவள் முகம் பார்த்து கேட்க ''ஐயோ! எனக்கு வெட்கமா இருக்கு'' என்றவாறு முகத்தை மூடிக்கொண்டே ஓடியது இதோ இந்த இடத்தில் தானே. அப்போது இருந்த வழியை இப்போது முள்போட்டு அடைத்திருந்தார்கள். கோதையின் நினைவை விட்டு வெளிவேற முடியாமல் தவித்தபோது தான் ராசாத்தி வந்து நின்றாள். அடேங்கப்பா மாப்பிள்ளையும் நல்ல உயரந்தான். நிற்கும் தோரணையிலேயே கம்பீரம் தெரிகிறதே. அந்த வேலியில் அப்படி என்ன தெரிகிறது என்று வெறித்துக் கொண்டிருக்கிறார். திரும்பினால்தானே இளநீரைக் கொடுக்க முடியும். சற்றுநேரம் நின்று பார்த்தாள். அவனிடம் அசைவே இல்லை.

மெதுவாக தொண்டையைச் செருமிக் கொண்டு, ''இளநீர் கொண்டு வந்திருக்கேன்'' என்றாள் மெல்லிய குரலில், ''யாரு! ''என்றவாறு திரும்



பியவன் முகம் கண்ணில் பட இளநீரை நழுவவிட்டாள் ராசாத்தி உச்சந்தலையில் பற்றிக் கொண்ட நெருப்பு உடல் முழுவதும் பற்றியது போல் எரிந்தது. எவனைக் கண்டால் கொலை செய்து விடுவோம் என்று அஞ்சினாளோ அவன் இதோ அவளெதிரில் ஆறடி உயரத்தில் அம்சமாய் நின்றான். முன்னைவிட கொஞ்சம் மாறியிருந்தாலும் மறக்கவே முடியாத முகமாயிற்றே.

எத்தனை நெஞ்சழுத்தம்? இதே ஊரில் அதுவும் மறுமணம் செய்து கொள்ள வந்திருப்பான்? அப்படியே எம்பி இவன் கழுத்தைப் பிடித்து இறுக்கிவிட்டால் என்ன? எழுந்த எண்ணத்தை செயல்பட ஓடி முன்வந்தாள்.

''அடடா! இளநீர் கொட்டிடுச்சே. பாருங்க புடவையெல்லாம் வீணாகிவிடுமே.'' என்ற அவனது குரலில் நின்றாள். பதிலின்றி போகவே அப்போதுதான் அவளை கூர்ந்து பார்த்தான்.

'யாரிவள்? தன் மீது ஏன் இத்தனை வெறுப்பு? பார்வையால் எரித்துவிடுவாளோ! அட இந்த மூக்கும் கண்ணும் எங்கோ பார்த்திருக்கிறேனே. எங்கே? எங்கே? ஒருவேளை.. அட அவள் ராசாத்தியோ?', அவனது முக பாவனையை வைத்து தன்னை அடையாளம் கண்டு கொண்டான் என்பதை உணர்ந்தவள் விடுவிடுவென நடக்கத் தொடங்கினாள்.

''ராசாத்தி! நீ எப்படி இங்கே. அதுவும் இந்தக் கோலத்தில் பெரிய மனுஷியாய் வளர்ந்துவிட்டாயா அதான் அடையாளம் தெரியல்ல. ஆமா என்ன இப்படி டிரெஸ் பண்ணியிருக்க காட்டு வேலைக்கு போற மாதிரி? ஏய் நான் பேசிட்டு இருக்கேன். நீ பாட்டுக்கு போறியே. நில்லும்மா ராசாத்தி. நான் உங்கிட்ட பேசணும்..'' வேகமாக நடந்து அவள் முன் நின்றான்.

''யார் நீ. நீ யார்ன்னே எனக்குத் தெரியல்ல. வழியவிடு. நான் இங்கே வேலை செய்யிற பொண்ணு. இந்த மாதிரி கண்டவனோடு நின்னு பேசினா மானமும் போயிடும். வேலையும் போயிடும்''

அதற்கு மேல் அங்கு நில்லாமல் யார் அழைத்தும் கேளாமல் போயே விட்டாள்.

''பாருங்கப்பா! இந்த வேலைக்கார நாயை. எத்தனை கூப்பிட்டும் திரும்பிக்கூட பாராமல் போகிறாள். இந்த பாட்டி ஏன் இப்படிப்பட்டவளை வேலைக்கு வச்சிருக்காங்க?'' படபடவென பொரிந்த மதுமிதாவிடம் குழைந்து கூறினான்.

''அம்மா! அது நம்ம வூட்ல வேலை செய்யிற பொண்ணு இல்லம்மா. வயல்காட்டுல வேலை செய்யுது. நம்ம வீட்டுக்கு பின்னால இருக்கிற நமக்கு சொந்தமான ஓட்டு வீட்ல குடியிருக்குது''

''பாருங்கப்பா. இவளை நம்பி எப்படி பாட்டி அம்பதாயிரம் சேலையை கொடுத்துவிட்டாங்க. வயசானதும் மூளை மழுங்கிப்போச்சு இந்தப் பாட்டிக்கு. அவ தூக்கிட்டு ஓடியிருந்தா''

''அம்மா! அது அப்படிப்பட்ட பொண்ணு இல்லம்மா ரொம்ப பெரிய இடத்துப் பொண்ணுதாம்மா. பெத்தவங்க போயிட்டதாலதான் இப்படி கஷ்டப்படுது''

''போதும். போதும் அவ புராணம்? நீ வேலையைப் பாரு. போய்

கல் அடிப்பிடிச்சிடப் போகுது. ஊர்க்கதையெல்லாம் பேசாதே, அதெல்லாம் எனக்கு பிடிக்காது''- கன்னென விழ வள்ளி வாயை மூடிக் கொண்டாள்.

அனைத்தையும் கேட்ட ரகு அதிர்ந்து போனான். 'என்ன அத்தையும் மாமாவும் இறந்து விட்டார்களா? இது என்ன கொடுமை. எந்த தகவலும் தனக்கு அம்மா தெரிவிக்கவில்லை. அப்படி என்ன நடந்தது? என்னதான் கசப்பு என்றாலும் சாவு செய்தி கூடவா தெரிவிக்க மாட்டார்கள்.

ஐயோ! தாயையும் தந்தையையும் இழந்து ராசாத்தி அநாதையாய் இங்கு வேலை செய்து கொண்டிருக்க கோதை எப்படி ஒப்புக் கொண்டாள். ஒரே தங்கை. அதுவும் வயது வந்த பெண்ணை இப்படி தனியாக விட்டு போகலாமா? தன்னுடன் அல்லவா அழைத்துச் சென்றிருக்க வேண்டும். ஏன்? ஒரு வேளை அவள் புகுந்த வீட்டில் உள்ளவர்கள் ஒத்துக் கொள்ளவில்லையா? அதற்காக அப்படியே விட்டுவிடுவதா. நான் இல்லை? அம்மா இல்லை. எங்களிடம் விட்டிருக்கலாமே?

இந்நிலையிலா உன்னைக் காண வேண்டும் ராசாத்தி? சின்னஞ்சிறு பெண்ணல்லவா நீ. உன்னைநல்ல இடத்தில் வாழவைக்க வேண்டாமா? ஏன் என்னைப் பார்த்து அப்படி வெறுத்து விலகிப்போனாய். உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால் நான்தானே கோபம் கொள்ள வேண்டும். ஏன் என்னிடம் பேசாமல் போனாய். நான் என்ன தவறு செய்தேன்.

அத்தையும் மாமாவும் எப்படி இறந்தார்கள். விபத்தா? கோதை எங்கிருக்கிறாள்? எப்படி இருக்கிறாய்? தலையே வெடித்து விடும் போலிருந்தது ரகுவிற்கு.

''எல்லாம் ரெடியாயிற்று. மீனாக்கா போய் அவரை கூட்டிட்டு வாங்க. எங்கேதான் போய்த்தொலைந்தார்?''என தன் பெரியப்பா மகளிடம் சீறிக் கொண்டிருந்த மதுமிதாவின் குரல் கேட்டு மரத்தடி நிழலிருந்து நகர்ந்து அவர்களுடன் வந்து நின்றான்.

பூஜை நடக்க ரகுவின் மனம் ராசாத்தியையே நினைத்துக் கொண்டிருந்தது.

தன்முன் காட்டப்பட்ட கற்பூர ஜோதியைக் கூட அவன் கவனிக்கவில்லை. மோகன்தான் கண்களில் ஒற்றிவிட்டான். மீனா மதுவை இழுத்துக் கொண்டு சற்று தள்ளிப் போனாள். ''பாரு மது. நீ பேசினது அவர்

'நடக்குமென்பார் நடக்காது' பாட்டைப் போட்டதால அடி பின்னிட்டாங்க!'

'எங்க போட்டே?'

'ஜோசியக்காரங்க மாநாட்டுல!'

-ப.கோபிபச்சமுத்து,
கிருஷ்ணகிரி.





காதில விழுந்திருக்கும் போல. பாரு மாப்பிள்ளை முகமே களையிழந்து போயிடுச்சு. இன்னும் ஒரு வாரத்தில் கல்யாணத்தை வெச்சிட்டு நீயும் இப்படியெல்லாம் அதிகமா எடுத்தெறிந்து பேசாதே''.

''ஆமாம்மா! நீ பேசுனது தப்பு. மாப்பிள்ளைக்கு உடம்பு வேற சரியில்லை. நீ கொஞ்சம் கரிசனையா நடந்துக்கணும்மா. கோபப்படக்கூடாதுடா. இப்பவே நீ இப்படி பேசினா அவருக்கு உம்மேல வெறுப்பு வந்துடும்மா. நீ படிச்சவ. பதவிசா நடந்துக்கடா''-தந்தையும் மீனாவுடன் இணைந்து அட்வைஸ் பண்ணியதில் மதுவின் மொத்தம் கோபமும் ரகுவின் மேல் திரும்பியது.

பொதுவாகவே அவளை யாரும் கண்டித்தாலோ அட்வைஸ் பண்ணினாலோ பிடிப்பதே இல்லை. தான் செய்வது எல்லாம் சரியே என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை அவளுக்கு. ஒரே பெண் என்பதால் தந்தையுடன் தொழிலில் கூடமாட உதவ என்று நுழைந்தவள் கம்பெனி பொறுப்பு முழுவதையும் தானே ஏற்றுக் கொண்டு வெற்றிகரமாகவும் அதை நடத்திச் சென்றாள்.

அந்த வகையில் நடந்த கம்பெனிகள் மீட்டிங் ஒன்றில் தான் அவள் முதன் முறையாய் ரகுவை சந்தித்து, அங்கு வந்திருந்த பெரிய நிர்வாகிகள் கூட அவனிடம் சில யோசனைகள் கேட்க அவனும் இயல்பாய் நிறையவே கூறினான். தொழில் சிக்கல் தொழிலாளர் பிரச்சனை என அவன் தெளிவாக சொன்ன யோசனைகள் மென்மையாய் புன்னகையோடு பேசிய விதமும், அவளை வெகுவாய் கவர்ந்தது. உடனேயே தந்தையிடம் சொல்லிவிட்டாள்.

'இவரையே மாப்பிள்ளையாகப் பாருங்கள் அப்பா' என்று. அப்பா எப்படி பேசினாரோ. ஒரே மாதத்தில் நிச்சயம் வரை கொண்டு வந்துவிட்டார்.

நிச்சயம் அன்று தன்னைப் பார்த்த தோழிகள் அனைவரின் கண்களிலும் பொறாமை வழிந்ததைப் பார்க்கையில் பெருமையாய் இருந்தது.

'ம், மதுமிதா. காத்திருந்தாலும் காத்திருந்தே. சரியான ஆளாய்தாண்டி பிடிச்சிருக்க. மாப்பிள்ளை ரொம்ப ஹேண்ட்ஸமா இருக்காருடி' ப்ரீதி வாய்விட்டே சொன்னாள். ஒரு கர்வ புன்னகையோடு ஏற்றுக் கொண்டாள்.

அப்போதெல்லாம் கலகலப்பாகத்தானே இருந்தார்.

ஊருக்கு வந்த பிறகுதான் முகத்தில் ஒரு துளியும் சிரிப்பு இல்லை. என்னதான் காய்ச்சல் என்றாலும் அகத்தின் அழகுதானே முகத்தில் தெரியும்? என்னை பிடிக்காமல் ஒத்துக் கொண்டாரோ? அதெப்படி என்னைக் கூட ஒருவனுக்கு பிடிக்காமல் போய்விடுமா? தன் அழகில் நிறையவே கர்வம் இருந்தது. பிறகேன் இப்படி ஒதுங்கி ஒதுங்கி போகிறார். ஊஹூம் இனி இவரைத் தனியே விடக்கூடாது.

ஒரு முடிவுடன் தந்தையிடமும், தமக்கையிடமும் பொதுவாய் தலை அசைத்து விட்ட ரகுவிடம் வந்து ஒட்டிக் கொண்டாள். கூச்சத்தின் விலகியவனை இழுத்து அவன் கை விரல்களோடு தன் விரல்களையும் கோர்த்துக் கொண்டாள். ரகுவிற்கு அவஸ்தையாய் இருந்தது.

கோதையைத் தவிர இன்னொரு பெண்ணை தீண்டியதில்லை. ஏன்

நெருங்கியதும் இல்லை. இனி இவள்தான் தன் மனைவி. எனினும் இவள் தீண்டினால் நெருப்பு சுட்டாற் போலிருக்கிறதே. எப்படி இவளுடன் வாழ் நாளைக் கழிப்பது?

இந்தத் திருமணம் தனக்கு வேண்டுமா? வேண்டாம் வேண்டாம் என மனம் ஓலமிட்டது. இதிலிருந்து எப்படி விடுபடுவது? இதயம் வலித்தது.

## 11

ஜென்ம ஜென்மங்கள் ஆனாலும் என்ன
ஜீவன் உன்னோடுதான் தேவி ஸ்ரீதேவி
பூவாரம் சூட தேவன் என்னோடுதான்
நீலவான் கூட நிறம் மாறிப்போகும்
நேசம் நிறம் மாறுமா! -கால
காலங்கள் போனாலும் கூட
காதல் தடம் மாறுமா!

'சரவணன்! உங்க கிட்ட கொஞ்சம் பேசணுமே' என்றவாறு தன் முன் நின்றவளை நம்ப முடியாமல் பார்த்தான். எங்கிட்டயா?'

'ஆமா! கொஞ்சம் அவசரம்,

'இ..இதோ ஒரே நிமிடம்' உர மூட்டைகளை இறக்கி வைத்த ஆட்களிடம் பணத்தை எண்ணி கொடுத்தனுப்பி விட்டு ராசாத்தியின் அருகில் வந்தான்.

'சொல்லு ராசாத்தி! என்ன விசயம்!' நடந்து வந்த ராசாத்தியின் கால்கள் வெடவெடவென நடுங்கியது. எதிர் பாராமல் சந்தித்தவனின் மீதிருந்த வெறுப்பால் கோபத்தால் உடல் இன்னும் தடதடத்தது. சரவணன் சற்றும் யோசிக்காமல் அவளை கை பிடித்துச் சென்று கிணற்று மேட்டில் அமர வைத்தான். தானும் சற்று தள்ளி அமர்ந்து கொண்டு, 'ம் சொல்லு ராசாத்தி. என்னாச்சு?' கேட்டான்.

'ச...ச... சரவணன்! நான் அவனைப் பார்த்தேன்.' உடலோடு குரலும் சேர்ந்து நடுங்கியது.

'யாரோ?' அதுதான். எங்க அக்காவை ஏமாற்றிவிட்டு ஓடிப்போனானே அவனைத்தான்'

'யாரு. யாரவன். எங்கே பார்த்தாய்?' பரபரத்தான்.

எச்சில் விழுங்கியவாறே!

'உங்க வீட்டு மாப்பிள்ளையாக வந்திருக்கிறானே. அவன்தான் என் அத்தை மகன். எங்க அக்காவை இந்த நிலைக்கு ஆளாக்கிவிட்டு வேற எவளையோ கட்டிக் கொண்டவன். அவன் எப்படி இங்கு வந்தான். என் அவன் முதல் மனைவி என்ன ஆனாள்?

மது ஏன் இவனுக்கு இரண்டாவது தாரமாவதற்கு சம்மதித்தாள்? அவன் நல்லவன் இல்லை சரவணன். நான் சொல்வதை நம்புங்கள்' படபடப்பாய் பேசியவளை பார்த்து கையமர்த்தினான் சரவணன்.

'என்ன சொல்றே ராசாத்தி. ரகு அண்ணனா இந்தக் காரியம் செய்தது? இருக்காதே. ரகுவைப் பற்றி எனக்கு தெரியுமே.'



'என்ன தெரியும் உங்களுக்கு? நீங்கள் வெளியூரில் படித்தவர். ஆனால் நாங்கள் தெருவில் வீட்டில் ஒன்றுக்குள் ஒன்றாய் வளர்ந்தவர்கள். எங்க அக்கா கழுத்தில் கிடக்கிறதே ஒரு செயின், அது இவன் தாலியாக நெனச்சு போட்டதுதான். இவன் இன்ஷியல்தான் அதில் டாலராய் தொங்குகிறது. எத்தனை வற்புறுத்தியும் அக்கா அதைக் கழற்றவேயில்லை. அது தான் தன்னோட தாலியா நினைச்சுட்டு இருக்கா.'

'ஸாரி! ராசாத்தி. எனக்கு உங்க குடும்பம் ரொம்பப் பழக்கம் இல்ல தான். ஆனா ரகுவை படிக்கும் காலத்தொட்டே தெரியும். அதிலும் உனக்கு மதுமிதாவைப் பற்றி தெரியாதே! அவள் நாங்கள் யாரும் சாப்பிட்ட தட்டில் கூட சாப்பிடமாட்டாள். டம்ளர் கூட அப்படித்தான். எதையுமே! தன் பொருளை அடுத்தவர் தொட விடமாட்டாள் அடுத்தவர் பொருளை வெச்சுக்கமாட்டா. அப்படி இருக்கும் போது அவ எப்படி இன்னொரு பெண்ணோடு வாழ்ந்தவனை ஏற்றுக் கொள்வாள் தெரியுமா! நடக்கவே நடக்காது. ரகுவுக்கு கல்யாணம் ஆனதா உன்னிடம் யார் சொன்னது?'

இந்த கேள்வி ராசாத்தியைக் குழப்பியது.

'அவங்க அம்மாதான்.'

'இல்ல. இதுல ஏதோ தப்பு நடந்திருக்கு. அது என்னன்னு தெரியாம நாம எதுவும் பேசிடக்கூடாது. நீ வீட்டுக்குப் போ. நான் பார்த்துக்கிறேன்' என்றவனை நம்ப முடியாமல் தயக்கமாய் நின்றாள்.

'அதான் சொல்றேனில்ல. நான் பார்த்துக்கிறேன்.

கவலைப்படாம போம்மா' என்றான் கனிவாக. அரை மனதோடே சென்றாள்.

ஏதோ குழப்பம் நடந்துள்ளது. முதலில் அதைக் கண்டு பிடிக்க வேண்டும். இதில் மூன்று பெண்களின் வாழ்வும் அடங்கியுள்ளதே. பேசாமல் ரகுவிடமே கேட்டுவிட்டால் என்ன? அதுதான் சரி. முடிவுடன் வீட்டை நோக்கி நடந்தான்.

வீட்டின் முற்றத்தில் மெதுவாக நடந்து கொண்டிருந்த உமா, இருண்ட முகத்துடன் வந்த ராசாத்தியைப் பார்த்ததும், 'ஏய் என்ன முகம் இப்படி இருக்கு? உங்க அக்காவை பத்தின பயமா? டென்ஷனே இல்லாம போ. போய்ப்பார். சாப்பிட்டுட்டு அமைதியா தூக்கம் போட்டாங்க. சரி தூங்கட்டுமென்னு நான் வாச் பண்ணிட்டே இருக்கேன்' என்றாள்.

'தூங்கிட்டாளா? சரி நான் போய் பாக்கட்டுமா'

'போய்ப்பாரு. நான் ஒரு கால்மணி நேரமாவது காலாற நடக்கணும். நீ போ' என்றவாறே, தன் நடையைத் தொடர்ந்தாள்.

நேராக உமாவின் அறைக்குள் சென்று கதவை சாத்தினாள். மெத்தைக் கட்டிலில் சுகமாய் உறங்கிக் கொண்டிருந்தாள் கோதை. பேன் காற்றில் சில முடிக்கற்றைகள் முகத்தில் விழுந்து புரண்டு கொண்டிருந்தது. மண்டியிட்டு கீழே அமர்ந்தாள்.

'அக்கா! அவன் வந்திருக்கிறான் அக்கா. உன்னைக் காண அல்ல, திருமணம் அதுவும் இரண்டாவது திருமணம் செய்து கொள்ள வந்திருக்கிறான். எவ்வளவு திமிர் தெரியுமா? அத்தனையும் பணத்திமிர். என்னைப் பார்த்து மிரளவில்லையே அவன். எத்தனை துணிச்சலாய் என்னிடம் வந்து பேசினான் தெரியுமா? இடம் தான் சரியில்லாமல் போயிற்று. இல்லை

யென்றால் நாக்கை புடுங்கிக் கொண்டு சாகும்படி நாலு வார்த்தையாவது கேட்டிருப்பேன். விறகுக் கட்டையால் என் ஆத்திரம் தீர அவன் மண்டையைப் பிளந்திருப்பேன். உன்னைப் போல் அவனையும் பைத்தியமாய் அலைய வைக்க வேண்டும். ஆனால் பேசமுடியவில்லையே. அவனை ஒன்றும் செய்ய முடியவில்லையே?

நான் என்ன செய்வேன்? என்ன செய்யப் போகிறேன்! இந்த நிலையில் நீ அவனைக் கண்டால் எப்படி உன்னால் தாங்க முடியும்? இன்னும் நான்கு நாட்களில் இன்னொரு பெண் கழுத்தில் தாலி கட்டப்போகும் புது மாப்பிள்ளை இவன். நீ அவனைப் பார்த்தால் பிரச்சனையாகிவிடுமே. இனி உன்னை வெளியே விடக்கூடாது. எழுந்திரு போகலாம். அக்கா எழுந்திரு.' தோளைப் பற்றி உலுக்கி எழுப்பினாள் ராசாத்தி.

'ஏய்! என்ன பண்றே நீ. தூங்குறவங்களை ஏன் எழுப்புற. உனக்கு வீட்ல வேலையிருந்தா நீ போ. அவங்க தூங்கட்டும். எழுந்தவுடனே நான் அழைச்சிட்டு வர்றேன். அவங்களை டிஸ்டர்ப் பண்ணாதே. நல்லா தூங்கட்டும். எழுந்தவுடனே நான் அழைச்சிட்டு வர்றேன். அவங்களை டிஸ்டர்ப் பண்ணாதே. நல்லா தூங்கட்டும். தூக்கம் ஒரு தவம் ராசாத்தி. தூங்கும் போதுதான் கவலை, பயம், துக்கம், சந்தோஷம், பசி எதுவும் தெரியாது. அதனாலதான் சொல்றேன். யாரையும் அசந்து தூங்கும் போது எழுப்பாதே' என்ற உமாவைப் பார்த்து சிரித்தாள்.

'நீ சொல்றது தப்பு உமா. அது தூங்குற இடத்தை பொறுத்து இருக்கு. இப்போ பஸ்ல போயிட்டு இருக்கோம்னு வை. நம்ப ஸ்டாப் வரும் போது யாராவது நம்மை எழுப்புறது தப்பா? பரீட்சை ஹால்ல ஒருத்தன் தூங்கினா அவனை எழுப்பாம விட்டா அவன் வாழ்க்கையே தூங்கிட்டு போயிடாதா?'

'சரிம்மா. சரி. இது பரீட்சை ஹால் இல்லை. பெட்ரூம் தான். உங்க அக்கா தூங்கட்டும். வா நாம வெளியே போய் பேசுவோம்'

'இல்ல உமா. வீட்ல எல்லாம் போட்டது போட்டபடி கிடக்கும். நான் போய் சமைக்கணும். இன்னிக்கு வேலைக்கும் போகல்ல. சரி வீட்டையாவது சுத்தப்படுத்தலாமே. நான் போகட்டுமா? அக்கா பத்திரம்,என்றவாறு புறப்பட்டு வீட்டுக்குச் செல்லாமல் நேராக புளியந்தோப்பை நோக்கிச் சென்றாள்.

வீட்டை விசாரித்து வந்தாலும் வந்துவிடுவான். கூடுமானவரை அவனை பார்ப்பதை தவிர்க்க வேண்டும். புதைந்து போன வேதனைகள் புதைந்து போனதாகவே இருக்கட்டும். அதை ஏன் கிளறி நம்மை நாமே காயப்படுத்திக் கொள்ள வேண்டும்?

மெதுவாக வந்து ஒரு பெரிய மரத்தடியில் அமர்ந்தாள். காற்று குளுமையாய் இருந்தது. மலை மேகங்கள் சூழ்ந்து சுற்றுப்புறம் கொஞ்சம் இருட்டியது போலிருந்தது. இரவெல்லாம் விழித்திருப்பதில் கண்கள் தீயாய் எரிந்த மரத்தின் மீது சாய்ந்து கண்களை மூடினாள். எத்தனையோ முறை இங்கு வந்து அக்காவோடு அவன் பேச காவலாக நின்றிருக்கிறோமே.

எட்ட நின்றுதான் பேசுவாள் அக்கா. அதிலும் கண் பார்வை விட்டு தனியாக எங்கும் போகவும் மாட்டாள். அத்தனை பயம் அவளுக்கு. ஒரு



கட்டெறும்பை பார்த்தாலும் கத்துவாள். நான் தான் வந்து அடிக்க வேண்டும். புளியமரத்தில் எறும்புக்கா பஞ்சம்? அத்தான்தான் எப்போதும் திட்டுவான். முதல்ல, இந்த காப்பாடியை வீட்ல விட்டுட்டு வா. உனக்கு ரொம்ப தைரியம் சொல்லிக் கொடுக்க வேண்டும். என்பான். 'ஊஹூம். ராசாத்தி இல்லாம எங்கேயும் வரமாட்டேன். எனக்கு ரொம்ப பயம்' என்பாள்.

'இப்போது அந்த பயம் எங்கு போயிற்று? தன்னந்தனியாய் நாள் முழுவதும் நிற்கிறாளே. கையில் கழுத்தில் என எத்தனை எறும்புகள் கடித்து வீங்கியிருக்கும். ஒரு சத்தம். ஒரு துளி கண்ணீர். ஊஹூம். ராசாத்தியாக பார்த்தால் தான் உண்டு. அப்படியா உடலும் உள்ளமும், மறந்து போயிற்று உனக்கு. ஆனால் அவனுக்கு அப்படி ஒன்றும் நேரவில்லையே. முன்பை விட அழகும் கம்பீரமும் கூடித்தானே தெரிகிறான். ஏன் நீ மட்டும் எப்படி உருத்தெரியாமல் உருக்குலைந்து போனாய் அக்கா?'

மூடியிருந்த விழிகளிலிருந்து சூடாய் கண்ணீர் இறங்கியது. பொட்டென தன் மீது ஏதோ விழ திடுக்கென கண் விழித்தாள். காய்ந்த குச்சியொன்று கிடந்தது. தூக்கியெறிந்தவனின் கண்கள் ஓரிடத்தில் நிலைத்து நின்றது. யார் அது? அட! அவன்தானா? அவனேதான்.

அவனுக்கு கூட இந்த இடம் இன்னும் நினைவிருக்கிறதா? அவனைக் காண வேண்டாம் என்று ஒதுங்கினோமே அவனே மீண்டும் மீண்டும் கண்ணில் படுகிறானே? ச்சே காசிக்கு சென்றாலும் கருமம் விடாது என்பார்களே அது இதைத்தானோ? சட்டென எழுந்து விறுவிறுவென நடக்கத் தொடங்கினாள்.

சருகு மிதிபடும் ஓசையில் கலைந்தவன் ராசாத்தியை கண்டு கொண்டான். விழிகளில் சந்தோஷ மின்னல். ஓடிவந்தான். 'ராசாத்தி நீயும் இங்கேயே இருந்தாயா? உன்னை எங்கெல்லாம் தேடினேன் தெரியுமா? ஏன் என்னைப் பார்த்ததும் ஒரு வார்த்தை கூட பேசாமல் ஓடினாய். கோதை தான் அப்படிச் செய்தாள் என்றால் நீயுமா என்னை வெறுக்கிறாய்? ஏன் ராசாத்தி. நீ ஏன் இப்படி இருக்கிறாய்?' வழி மறித்தவனை ஆத்திரமாய் முறைத்தாள்.

'இதோ பாருங்க. நீங்க பெரிய வீட்டு மாப்பிள்ளை. இப்படி கண்ட இடத்தில் கண்ட பெண்களுடன் பேசுவதைப் பார்த்தால் என் பெயரும்

'என்னது பேப்பர் ரோஸ்ட் டோட ஒரு சின்ன தோசை இருக்கு?'

'இது இலவச இணைப்பு சார்!'

-ப.கோபிபச்சமுத்து. கிருஷ்ணகிரி.



கெட்டுப்போகும். உங்கள் கனவு வாழ்க்கையும் பாழாகக் கூடும். வழியை விடுங்கள்.'

'நான் என்ன கேட்கிறேன். நீ என்ன சொல்கிறாய். சிரிக்க சிரிக்க பேசும் பழைய ராசாத்தி எப்படி மறைந்தாள்? ஏன் என் மீது இப்படி வெறுப்பைக் கொட்டுகிறாய். எனக்கு தெரிய வேண்டும் இப்போதே இங்கேயே. தெரியாமல் உன்னை விடமாட்டேன்.' யார் என்ன நினைத்தாலும் அதைப் பற்றி எனக்கு கவலையில்லை.

'உங்களுக்கு என்ன கவலை. நீங்கள் ஆண்மகன். அதிலும் பணக்காரர். நீங்கள் எது வேண்டுமானாலும் செய்யலாம். செய்து விட்டு தப்பித்தும் கொள்ளலாம். ஆனால் நாங்கள் அப்படி அல்ல.' மேற்கொண்டு பேச முடியாமல் திணறினாள். இவன் முன் கண்கள் கலங்கிவிடக்கூடாது என உறுதியாய் இருந்தாள்.

'ப்ளீஸ் ராசாத்தி ஏற்கனவே நான் மிகுந்த குழப்பத்தில் நொந்து போயிருக்கிறேன். என்னைக் கொல்லாதே. உண்மையில் நான் தான் உன் மீது கோபப்பட வேண்டும். ஆனால் நானே எல்லாத்தையும் மறந்துவிட்டு உன்னிடம் பேசினால் நீ என்னிடம் இத்தனை வெறுப்பைக் காட்டுகிறாய்? அப்படி என்ன செய்துவிட்டேன்? சரி. கோதை நன்றாக வாழட்டும் என்றுதானே ஒதுங்கிக் கொண்டேன். இதில் எது தவறு? ஆனால் கோதை இப்படிச் செய்யலாமா நீயே சொல்'

'என்ன செய்தாள்!' அவனை நேராய் பார்த்தாள்.

என்னை விட்டுவிட்டு எப்படி வேறொருவனை மணக்க சம்மதித்தாள். அத்தையும் மாமாவும் வற்புறுத்தினார்களா? அப்படி இருந்தாலும் உடனே ஒரு போன் பண்ணியிருக்கலாமே என் அம்மாவிடம் சொல்லி. சரி போன் வேண்டாம். ஒரு கடிதம் போடலாமே. என் முகவரியை எழுதி எத்தனை கடிதம் போட்டேன். ஒன்றுக்குமே பதில் போடாமல் என்னை ஏன் வதைத்தாள். என் உடலை மட்டும் விட்டுவிட்டு உயிரை பிடுங்கி எறிந்தது போல் எப்படி இன்னொருவனை மணந்து கொண்டாள்? இந்த அத்தான் மீது உங்களுக்கு அத்தனை அவநம்பிக்கையா? போனவன் திரும்பவே மாட்டான் என்று ஒரே மாதத்தில் முடிவெடுத்துவிட்டீர்களா? நீ எப்படி இப்படி நடக்க விட்டாய். அவள் தான் பயந்தவள். நீ பெரிய தைரியசாலிதானே. நீ தடுத்திருக்கலாமே. நீயும் ஏன் விட்டாய்? எல்லோருமாய் சேர்ந்து ஏன் என்னை என் காதலை கொன்று விட்டீர்கள்?

அன்று அத்தனை நம்பிக்கையாய் சொன்னாளே எத்தனை ஆண்டுகள் ஆனாலும் காத்திருப்பேன் என்று. நான் ஒன்றும் ஆண்டுக் கணக்காக காக்க வைக்கவில்லையே. ஹாஸ்பிடலில் அத்தான் ரத்த வாந்தி எடுத்து இரண்டுமாதமாக உயிருக்கு போராடிக் கொண்டிருக்க என்னால் வரமுடியவில்லை என தெளிவாக கடிதம் போட்டேனே. பதிலில்லை என்றதும் எத்தனை முறை போன் செய்தேன். ஒரு முறை கூட நீங்கள் யாரும் பேசவில்லை. ஏமாந்துபோன நான் அம்மாவின் சமாதானத்தால்தான் அங்கே இருந்தேன். பிறகு அத்தான் இறந்த பின் தானே எனக்கு இந்த கொடுமை தெரியவந்தது. அன்று முதல் இன்று வரை கோதையையே எண்ணி வாழ்ந்து கொண்டிருக்கேனே. இது தான் நான் செய்த தவறா? இல்லை என் நிலையை எண்ணி எண்ணி துடித்த என் அம்மா நன்றாக வாழ்ந்துக்



கொண்டிருக்கும் கோதையை சபிக்கும் மொழிகளைக் கேட்க முடியாமல் திருமணத்திற்கு சம்மதித்து இதோ இன்று வரை அந்த மதுவுடன் ஒட்டவும் முடியாமல் விலகியே நிற்கின்றேனே. இது தவறா?

எப்படியோ கோதை நன்றாக வாழ்ந்தால் போதும் என்று என் வேதனைகள் அனைத்தையும் என்னுள்ளே புதைத்துக் கொண்டு நடைபிணமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறேனே. இது தான் நான் செய்த தவறா? சொல் என்ன தவறு செய்தேன் என்று சொல். ஏன் என்னை ஏமாற்றினீர்கள். ஏன் என் கோதையை பிரித்து என்னை இந்த நிலைக்கு ஆளாக்கினீர்கள்? சொல். சொல்' தோளைப் பற்றி உலுக்கியவனின் கேள்விகளால் தூள்தூளாகிக் கொண்டிருந்தாள் ராசாத்தி.

## 12

*உன் கண்ணில் நீர்வழிந்தால்-என்*
*நெஞ்சில் உதிரம் கொட்டுதடி!*
*என் கண்ணின் பார்வையன்றோ*
*கண்ணம்மா என்னுயிர் நின்னதன்றோ!*

'ராசாத்தி!ராசாத்தி' திடுக்கிட்டு விழித்தாள். ம்?' 'கோதை எப்படி இருக்கா ராசாத்தி' ம்?' 'கோதை எப்படி இருக்கா இயல்பிற்கு திரும்பினாள் ராசாத்தி.

'கோதையா? ம்.ம். ஒஹோன்னு இருக்கா'

'ஓ ரொம்ப சந்தோஷம். இப்போ எந்த ஊர்ல இருக்கா. எத்தனை குழந்தைங்க இருக்கு. அவ புருஷன் நல்லவரா. கோதையை நல்லா வெச்சிருக்காருல்ல. அவ சந்தோஷமா இருக்கால்ல. குழந்தைகள்லாம் நல்லா வளர்ந்திருப்பாங்க இல்ல. என்னைப் பத்தி ஏதாவது கேட்பாளா? சேச்சே! என் நினைப்பு ஏன் அவளுக்கு வரணும். அவ சந்தோஷமா இருந்தாப் போதும் எனக்கு. சந்தோஷமா இருக்கா இல்ல?'

அடுக்காய் ஆர்வமாய் கேட்டவனின் கண்களை உற்றுப்பார்த்தாள். இந்தக் கண்களில் இருப்பதென்ன? கனிவு, ஆர்வம், எதிர்பார்ப்பு, மகிழ்ச்சி கொஞ்சம் சோகம் எல்லாமே கலந்து இருந்தது. ஆனால் ஒரு துளிகூட பொய்யோ வஞ்சனையோ இல்லை. எப்போதும் குடிகொண்டிருக்கும் சாந்தம் இதோ இன்னும் இருக்கிறதே. பழைய குறும்பு மட்டும் காணாமல் போயிருந்தது. அப்படியென்றால் தான் எண்ணியது தான் தவறோ? இல்லையே அத்தைதான் திருமண அழைப்பிதழை கையில் கொடுத்தாளே? கொடுத்துவிட்டுத்தானே அத்தனை ஆர்ப்பாட்டம் செய்தாள். விஷமாய் கக்கினாளே.

'பாருங்கடி. நல்லா பார்த்துக்கங்க. இதுதான் எம்புள்ள கல்யாணப் பத்திரிகை. பொண்ணு வீட்ல அடிச்சது. ஒரு பத்திரிகையே அறுபது ரூபாய் ஆகுதாம். இரண்டாயிரம் பத்திரிகை அடிச்சிருக்கு. அப்போ எப்படிபட்ட இடம்னு கணக்கு போட்டுக்கங்க. அவன் அக்கா எல்லாம் முடிவு பண்ணிட்டுதான் அவனை வரவழைச்சிருக்கா. நானும் இன்னும் ரெண்டு நாள்ல கிளம்பணும். அடுத்த வாரம் கல்யாணம். கல்யாணம்

முடிஞ்சி இங்க வரும் போது எவளும் கண்ல பட்டு வைக்காதீங்க. அஞ்சோ பத்தோ தர்றேன். பேசாம ஊரை விட்டே போயிடுங்க. உம்பெண்ணைங்க அழகுக்கு எவனும் மாட்டாமலா போயிடுவான்.'

'ரஞ்சிதம்! நாக்கை அடக்கிப்பேசு' ராஜகோபால் சீறினார்.

'வாடா என் சகோதரா. என்ன ரோஷம் பொத்துக்கிட்டு வருதோ. உம் பொண்டாட்டியும், நீயும் சேர்ந்துதானே எம்புள்ளைய வளைச்சிப்போட உம்மகளை ஏவிவிட்டீங்க. அவன் யார்? எம் மகன். ஏமாறுவானா? பாரு அந்தப் பணக்கார பெண்ணை பார்த்து உடனே இவ மேல உள்ள பைத்தியம் விலகிப்போச்சு. ஊருக்கு வாடான்னு கூப்பிட்டா நந்தினியை விட்டு என்னால வரமுடியாதும்மா. அங்க வந்தா யாராவது எம்மனதை மாத்திடுவாங்க. அதனால கல்யாணத்துக்கு முன்னால நான் வரமாட்டேன்னு என் புள்ளை போன்லயே அழுறான். அப்படி எம்புள்ளையை மிரட்டி வெச்சிருக்கீங்க' என்றவாறு கதவிற்கு பின்னால் கண்ணீரோடு நின்ற கோதையை வெளியே இழுத்து தெருவில் நிறுத்தினாள்.

'ஏண்டி சாகசக்காரி! எம்புள்ளைய மிரட்டித்தான் கிணத்துல குதிக்கு நாடகம் ஆடினியா? ஊமைக் கோட்டான் மாதிரி இருந்து கொண்டு இத்தனை சூழ்ச்சி செய்தாயா? என்ன நடிப்பு? உன் ஆத்தா கற்றுக் கொடுத்தாளா?'

ரஞ்சிதத்தின் பிடியில் கோதை நடுங்கித் துடித்தாள்.

ராசாத்தி ஓடிவந்து, கோதையை தன்னோடு சேர்த்துக் கொண்டு, 'விடுங்கத்தை. அவளை ஏன் இப்படி சித்ரவதை பண்றீங்க' என சீறினாள்.



'செந்திலுக்கும், வடிவேலுக்கும் என்ன வித்தியாசம்?'

'செந்தில் கவுண்டமணி கிட்ட மட்டும் அடி வாங்குவார். வடிவேல் யாரிடம் வேண்டுமானாலும் அடி வாங்குவார்!'


-எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

கோதை ரஞ்சிதத்தின் காலில் விழுந்தாள். 'அத்தே! நான் நடிக்கல அத்தை. நான் ஒதுங்கித்தான் போனேன். அத்தான்தான் பாட்டி என்கிட்ட சத்தியம் வாங்கியிருக்காங்க. நான் உன்னைத் தான் கட்டுவேன்னு சொன்னதால தான் நான் ஒத்துக்கிட்டேன். நானாகப் போய் அத்தானை மயக்கல அத்தை.' கெஞ்சினாள்.

'ஓஹோ! அப்ப இப்படி ஏதாவது சாக்கு போக்கு சொல்லிட்டு எவன் வந்தாலும் ஒத்துக்கிடுவியோ'

'அத்தே' வீறிட்டுக் கொண்டு காதுகளை மூடிக் கொண்டாள். வசுமதி வாயை புடவைத்தலைப்பால் மூடிக்கொண்டு உள்ளே ஓடினாள். பின்னே ராசாத்தி ஓட, ராஜகோபால் கோதை அருகே வந்து அவ





ளைப் பற்றி தூக்கினார்.

'கேட்டியாம்மா. போதுமாம்மா. இந்தப் பேச்செல்லாம் கேட்டுமா இவ வீட்டுல போய் வாழ ஆசைப்படறே. வேண்டாம்மா. இவ பேய். ராட்சஸி. என் கண்மணிய உயிரோடு எரித்துவிடுவாள். வாம்மா. நாம எதாவது ஊர்ல போய் காலத்தை கழிச்சிடலாம். இவ மூச்சுக் காத்துபட்டாலே நம்ம குடும்பம் கருகிடும் வாம்மா'

'வேண்டாம்ப்பா! அத்தான் வந்து தேடும்போது நாம இங்க இல்லன்னா அத்தான் ஏமாந்திடும்ப்பா. நான் அத்தானை நம்பலன்னு நினைச்சி வருத்தப்படும்பா. எனக்கு நம்பிக்கை இருக்குப்பா. அத்தான் வரும். நிச்சயம் வரும். அப்படி அவர் வராமல் போனாலும் இதோ அவர் கட்டிய தாலி. இதோடயே என் அத்தான் நினைவோட வாழ்ந்திடுவேன்பா. ஆனா இந்த ஊரை விட்டு மட்டும் வரமாட்டேன். நான் வரவே மாட்டேன்' தந்தையின் தோளில் சாய்ந்து கதறினாள்.

அத்தையின் கண் கூர்மையானது. 'ஓஹோ. இது வேறயா. இது எப்படி நடந்தது. குடுடி எம்புள்ளை செயினை' கோதையின் அருகே நெருங்க. கோதை தன் செயினை இறுகப்பற்றி கொண்டாள். 'ஐயோ ராசாத்தி ஓடிவாயேன். அத்தை என் தாலியை அத்துடப் பார்க்கிறாங்க. ராசாத்தி ஓடிவா. சீக்கிரம் வா' கோதையின் குரலில் ராசாத்தி ஓடிவர, அத்தையிடம் போராடிக் கொண்டிருந்தாள் கோதை.

செயினைப் பற்றி இழுத்துக் கொண்டிருந்தாள் அத்தை. செயின் அக்காவின் மனதைப் போலவே உறுதியாய் இருக்க, கோதையின் கழுத்தில் பதிந்து ரத்தம் கசியத் தொடங்கியது. ராஜகோபால் மார்பில் அடித்துக் கொண்டு கதற, கோதை வீறிட்டு கத்த, ராசாத்தி கோபாவேசமாய் வீட்டுக்குள் பாய்ந்து சென்று வெட்டரிவாளோடு வந்தாள். அதை அத்தையின் கழுத்தில் வைத்தாள். 'எடுடி கையை. அக்காவை விடுடி. கையை எடுக்கல்ல உன் தலையை அறுத்திடுவேன். எடுடி கையை' பத்திரகாளியாய் தோன்றிய ராசாத்தியைக் கண்டதும் ரஞ்சிதம் கையை எடுத்தாள். துவண்டு மயங்கி சரிந்த கோதையை பட்டம்மாள் ஓடிவந்து தாங்கிக் கொள்ள ரஞ்சிதம் கர்ணகொடூரமாய் அலறினாள்.

'என் கழுத்திலயா கத்தி வெக்கிற. உங்குடும்பத்தையே ஜெயில்ல அடைக்கிறோம் பாரு. டேய்! என் கூட பொறந்த ஒரே காரணத்திற்காக இன்னிக்கு ஒரு நாள் உனக்கு டைம் தர்றேன். விடியும் போது இந்த ஊருக்குள்ள நீங்க யாரும் இருக்கக்கூடாது. இந்த ஓடு காலிகளை கூட்டிட்டு ராவோடு ராவா ஓடிடு. மீறி விடியும் போது நீங்க இங்க இருந்தா பொட்டச்சிகளை வைச்சிட்டு பிராத்தல் பண்றான்னு நான் போலீசக் கூட்டிட்டு வந்திடுவேன்'

கூடியிருந்த ஊர் ஜனங்க அனைத்தையும் பார்த்தாள். 'இங்க என்னடி வேடிக்கை. ஓடுங்கடி. இது எங்க குடும்ப தகராறு 'என விரட்டினாள்.

ராஜகோபாலின் முன் வந்து நின்றாள். ''இன்று ஒரு நாள் ராத்திரிவரைக்கும் தான் உனக்கு டைம். நான் சொன்னதைச் செய்வேன்னு உனக்குத்தான் தெரியுமே' விரல் நீட்டி எச்சரித்துவிட்டுப் போனாள்.

அம்மாவும், அப்பாவும் ஆளுக்கொரு தூணில் சாய்ந்து கொண்டு அழ உடம்பும் மனமும் புண்ணாகிப் போன கோதை தரையில் சுருண்டு படுத்திருந்தாள். ராசாத்தி அவளது கழுத்தில் இருந்த காயத்திற்கு பட்டம்மா தந்த மருந்தை தடவினாள். கொஞ்ச நேரத்தில் உறங்கியும் போய்விட, அதிகாலையில் கோதை போட்ட கூச்சலில் ஊரே விழித்துக் கொண்டது.

அத்தைதான் மீண்டும் வந்து விட்டாளோ என பதறி எழுந்த ராசாத்தி அதிர்ச்சியில் உறைந்து போனாள். தாயும், தந்தையும் கயிற்றில் தொங்கிக் கொண்டிருக்க அவர்களது காலைக் கட்டிக் கொண்டு கதறிக் கொண்டிருந்தாள் கோதை. ஊர் மொத்தமும் கூடி காரியங்களைக் கவனிக்க, ஆட்களோடு வந்தாள் ரஞ்சிதம்.

'டேய் எல்லா பொருட்களையும் எடுத்து வெளியே போடுங்கடா. இது எனக்கு எங்க அப்பா தந்தவீடு. கண்ட கருமம் எல்லாம் நடக்கக்கூடாது. ஒரு பொருள் உள்ளே இருக்கக்கூடாது. ம்! வெளியே எடுத்து போடுங்க'. வேலைக்காரர்கள் தயங்கி நின்று பின் முதலாளியம்மாவின் சொல்லுக்கு கட்டுப்பட்டனர்.

பட்டம்மா மட்டும் இல்லையென்றால் தன்னை பெற்றவர்களை கூட அடக்கம் செய்ய முடிந்திருக்காது. 'பொம்பளையா இவ! கொஞ்சம் கூட இரக்கம் இல்லாம பொட்டப்புள்ளைங்கள தெருவில நிறுத்திட்டாளே. யம்மா போலீசுல போய் சொன்னாப் போதும். இவளை உள்ளே தள்ளிடலாம்' என்றார் ஒருவர்.

'வேண்டாம். எங்க அம்மாவும் அப்பாவும் ஏற்கனவே ரொம்பக் காயப்பட்டுட்டாங்க. இன்னும் அவங்களை அறுத்துக் கூறு போட வேண்டாம். அவங்களை முழுசா புதைச்சிடுங்க. இனிமே கூறு போட என்ன இருக்கு. அதான் கூறு போட்டு அறுத்து இரத்தத்தை எல்லாம் குடிச்சிட்டாளே சண்டாளி. இனி என்ன இருக்கு?' மடார் மடாரென்று தலையில் அடித்துக் கொண்டாள் ராசாத்தி.

கோதை பெற்றவர்களை விட்டு அசையவில்லை. பிதுங்கியிருந்த கண்களும் நாசியில் வழிந்திருந்த ரத்தமும் அவள் கண்களில் அப்படியே பதிவாகியிருந்தது. அப்போது உறைந்தவள்தான். இன்றுவரை தன் தங்கையின் பெயர் கூட அவளுக்கு நினைவு வரவில்லை.

இவன் என்னடாவென்றால் எத்தனை குழந்தைகள் குட்டிகள் என்றுக் கேட்கிறான். தாம் எட்டடி என்றால் இவன் முப்பத்திரெண்டடி பாய்வான் போல் தெரிகிறதே! ரஞ்சிதத்தின் மகனாயிற்றே. இவன் சொல்வதை எப்படி நம்புவது? நம்பாமல் நின்றாள்.

'என்ன ராசாத்தி. நான் எவ்வளவு நேரமா கேட்கிறேன். ஏன் பதிலே சொல்ல மாட்டேங்கிற'.

'ம்! என்ன. என்னகேட்டே.'

'கோதை எப்படி இருக்கா. மாமா அத்தைக்கு என்னாச்சு. நீ மட்டும் தனியா இருக்கே.'

'இதெல்லாம் கண்டிப்பா தெரிஞ்சுக்கணுமா'

'என்ன கேள்வி இது. தெரிஞ்சுக்கதான் கேட்கிறேன் ராசாத்தி'

'நேரே போ. போய் உங்க அக்காகிட்டே கேளு. எல்லாத்தையும் சொல்வாங்க.'

'ஏன் ராசாத்தி. நீ சொல்ல மாட்டியா. இதை ஏன் அக்காகிட்ட கேட்கணும்! நான் உன் அத்தான் தானே!'

சட்டென கைநீட்டி தடுத்தான். 'வேண்டாம்! அந்த வார்த்தையைமட்டும் உன் வாயால சொல்லாதே' என்று ராசாத்தி கசப்பாய் புன்னகைத்தாள்

'கிட்டதட்ட பத்து வருஷமாய் நான் கேட்டு கேட்டு வெறுத்த வார்த்தை இது ஒன்னுதான்'.

'எது கேட்டாலும் இப்படி புரியாம பேசினா எப்படி ராசாத்தி. தளர் வாய் தோளைக் குலுக்கினான். கண்களும் முகமும் சோர்ந்தன. ஒரு பெருமூச்சுடன் கண்களை மூடினான். அந்த நிலையில் அவனை அப்படிப் பார்க்கும் போது வேதனையாகத் தான் இருந்தது. என்ன இருந்தாலும் தன் அக்காவின் மனம் கவர்ந்தவன். அக்கா தன்கணவனாகவே ஏற்றுக் கொண்டவன். பிறகு எப்படியோ?'

ஆனால் ஊரில் இருந்தவரை தன் அக்காவைத் தவிர வேறு ஒரு பெண்ணை ஏறெடுத்துக்கூட பார்த்தவனில்லை. உத்தமனாய்த்தான் இருந்தான். அதுவும் கோதை மீது உயிரையே வைத்திருந்தான். அது தனக்கும் நன்றாகவே தெரியுமே. ரஞ்சிதம் இவனிடம் என்ன சொல்லி மாற்றினாளோ?

ஒரு கணம் ஏற்பட்ட இளக்கத்தில், 'கோதைக்கு கல்யாணம் ஆயிட்டதா உங்க கிட்ட யார் சொன்னா?' என்றான்.

'அம்மாதான்! ஏன்' என்றான் குழப்பமாய்.

'எப்போ சொன்னாங்க' மொட்டையாய் கேட்டாள்.

'ம். அத்தான் இறந்த பிறகு. கொஞ்ச நாள் கழிச்சு நான் ஊருக்கு வரணும்னு கிளம்பினப்போ சொன்னாங்க. நீங்க எல்லோருமே வீட்டை பூட்டிபோட்டு மாப்பிள்ளை வீட்ல போய் செட்டிலாயிட்டதாக சொன்னாங்க. ரொம்ப பெரிய இடம் அது இதுன்னு'

'உடனே நீங்க நம்பிவிட்டீர்கள்' 'அதை எப்படி நம்புவேன்! கிளம்பி ஊருக்கு வந்தேனே. உங்கள் வீடு பூட்டிதான் இருந்தது. யாரும் இல்லை. யாரிடம் கேட்டும் பயனில்லை. அதனால்தான் வெறுத்து உடனே கிளம்பி போயிட்டேன். கோதை இல்லாத ஊரில் எனக்கு என்ன வேலை?' குரலில் விரக்தி இருந்தது. கண்கள் கலங்கின.

'அப்போ உங்கள் அத்தான் மருத்துவமனையில் இருந்தது உண்மையா?' ராசாத்தி படபடப்பாய் கேட்டாள்.

'இதைத்தானே முதலில் இருந்தே சொல்லிக் கொண்டிருக்கிறேன். நீ ஏன் நான் எது சொன்னாலும் நம்ப மறுக்கிறாய்?'

'மறுத்திருக்க வேண்டும் அத்தான். உங்கள் தாயார் சொன்னதை நீங்கள் நம்ப மறுத்திருக்க வேண்டும். அப்படி மறுத்திருந்தால் இத்தனை துன்பங்களை நாங்கள் அனுபவித்திருக்க மாட்டோம். எத்தனை விலகல். எத்தனை இழப்புகள். ஐயோ அம்மா. அப்பா. கேட்டீர்களா அத்தான் சொன்னதை. கோதை சொன்னாளே அத்தான் வருவார் வருவார் என்று. நான் இல்லாவிட்டால் ஏமாந்து போவார் என்று சொன்னாளே. அது உண்மை ஆயிற்றே'.

ராசாத்தியின் கதறல் கேட்டு இடியுடன் மழை வந்தது. விடாமல் வலுத்தது.



உன்னை அல்லால் ஒரு பெண்ணை
இனி நான் உள்ளத்தினாலும்
தொட மாட்டேன்-உன் உள்ளம்
இருப்பது என்னிடமே-அதை
உயிர் போனாலும் தரமாட்டேன்...

13

மழை இன்னும் நின்று விடாமல் பெய்து கொண்டேயிருந்தது. கட்டிலில் மல்லாந்து படுத்திருந்தான் ரகு. அவனிடம் சற்றும் அசைவில்லாமல் போகவே ரதி கண்ணீர் சிந்தினாள். அவனது தலை மாட்டில் அமர்ந்தாள். 'தம்பி! சத்தியமா இதுக்கு மேல எனக்கு எதுவும் தெரியாதுப்பா. இதெல்லாம் எனக்கு முதல்லயே தெரியாதுப்பா. அம்மா என் கிட்ட மூச்சே விடல்ல. நான் ஊருக்கு வந்த பிறகு தான் தெரியும். பழைய வேலைக்காரங்களை எல்லாம் அம்மா நிறுத்திட்டாங்க. அதனால ரொம்ப நாள் கழிச்சு என்னைப் பார்க்க வந்த பட்டம்மா சொன்னப்பதான் எல்லாம் தெரிஞ்சது. உடனே அம்மாவுக்கு போன் பண்ணினேன். சண்டை போட்டேன். உங்கிட்ட பேசணும்னு சொன்னேன். அப்போதான் அம்மா நீ கல்யாணத்துக்கு இப்பதான் சம்மதிச்சதா சொல்லி அதை கெடுத்துடாதேன்னு ஒரே அழுகை. சரி நீயும் மறந்துட்டியோன்னு விட்டுட்டேன். என்னை நம்புப்பா'

பெரு மூச்சோடு எழுந்து அமர்ந்தான். 'நீ எப்படிக்கா நான் கோதையை மறந்திட்டேன்னு நினைச்சே. கோதையை நினைச்ச மனசில இன்னொருத்திய எப்படி நினைப்பேன்? எல்லாருமா சேர்ந்து என்கிட்ட எல்லாத்தையும் மறைச்சி என்னை ஒரு மாபாதகனா ஆக்கிட்டாங்களே. நான் இல்லாம என் கோதை என்ன பாடுபட்டாளோ? அவ முகத்தை என்னால எப்படி தைரியமா பார்க்க முடியும்? நான் உடனே அவளைப் பார்க்கணும். இந்தப் பாவியை ஏத்துப்பியான்னு அவ கால்ல விழுந்து கதறணும். நான் போறேன்'' சடாரென எழுந்தவனை கைபற்றி தடுத்தாள் ரதி.

''இதோ பாருப்பா! பொறுத்தது பொறுக்க. நாளை காலைல வரைக்கும் பொறுத்துக்குப்பா. இந்த அர்த்த ராத்திரியிலே கொட்டுற மழையில

''நம்ம தலைவரை ஏன் கைது பண்றாங்க?'
'மேடையில பேசும்போது தானொரு இந்திய பிள்ளேடன்னு பேசிவிட்டாராம்!'
-வெ.ராம்குமார்,
வேலூர்.



நீ ரெண்டு பெண்பிள்ளைங்க இருக்கிற வீட்டுக்கு போனா அதுக்கு பார்த்தவங்க தப்பு அர்த்தம் பண்ணி பேசுவாங்க. அதுவும் நீ கல்யாணம் பண்ணிக்கப்போற வீட்டுக்கு பின் வீட்லதான் அவங்க இருக்காங்க. நீ போறதை பொண்ணு வீட்டுல யாராவது பார்த்துட்டா என்னாகும்?

அம்மாவும் அப்பாவும் பொறப்பட்டு வந்திட்டு இருக்காங்களாம். மூணுவாட்டி போன் வந்திடுச்சி. நீ எங்கே இருக்கேன்னு கேட்டு அம்மா துளைச்சி எடுத்திட்டாங்க. செல்போனும் எடுக்காம போயிட்டியோ, அம்மா பயந்துட்டாங்க. அம்மா வர்றதுக்குள்ள காலையிலே போய் பார்த்துட்டு வந்துடு. என்ன. இன்னும் கல்யாணத்துக்கு மூணுதான் நாளே இருக்கு''.

திக்கென அதிர்ந்தான் ரகு. ''அக்கா.. அக்கா.. எனக்கு இந்த கல்யாணம் வேண்டாங்க்கா. எப்படியாவது அம்மாகிட்ட சொல்லி நிறுத்திடு, பிளீஸ். என்னால முடியாது. கோதைக்கு அம்மாவால் எந்த கஷ்டமும் வரக்கூடாதுன்னுதான் மனதை வெறுத்து இதற்கு சம்மதித்தேனே தவிர என்மனதில் மதுமேல் ஒருதுளி ஆசைகூட இல்லை. அக்கா பிளீஸ். கோதைக்கு திருமணம் ஆகியிருந்தால் கூட பரவாயில்லை.

ஆனால் என் கோதை என்னையே நினைத்து மருகிக்கொண்டிருக்க, நான் இன்னொரு பெண் கழுத்தில் ஓ.. நோ.. என்னால் முடியாது. முடியவே முடியாது'' முகத்தை மூடிக் கொண்டான்.

''டோண்ட் வொர்ரி ரகுண்ணா. அதை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் கோதையைப் பார்த்துக் கொள்ளுங்கள்'' வாசற்புறமாய் குரல் கேட்டு இருவரும் திரும்ப கையில் மடக்கிய குடையுடன் சரவணன் நின்றிருந்தான்.

எழுந்து வந்து சரவணனை கட்டிக்கொண்டான் ரகு. ''என்ன சொல்கிறாய் சரவணா. நாங்கள் பேசியதைக் கேட்டாயா. உனக்கு ஒன்றும் கோபம் இல்லையே. உன்னால் திருமணத்தை நிறுத்தமுடியுமா?'' பதற்றமாய் கேட்டான்.

''நிச்சயமாய். அது விஷயமாய் பேசத்தான் காலையிலே தோட்டத்திற்கு வந்தேன். அதற்குள் மது என்னை அழைத்து அவளது நண்பர்கள் வருவதாகக் கூறி அவர்களை அழைத்து வர ரெயில்வே டேஷனுக்கு அனுப்பிவிட்டாள். சரிவந்து பேசிக் கொள்ளலாம் என்றால் அந்த வானரங்கள் கண்ட இடத்தில் எல்லாம் காரை நிறுத்தி கடைகடையாய் மேய்ந்து கொண்டே வந்ததில் இருட்டிப் போயிற்று. அனைவரையும் தம் வீட்டு மாடியில் தங்க எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு வந்து பார்த்தால் நான் என்ன பேச வேண்டும் என்று நினைத்து வந்தேனோ அதே டாபிக்கை நீங்கள் பேசியதால் சரி உங்கள் முடிவு என்ன என்பதை தெரிந்துகொள்ளலாம் என்று அமைதியாக நின்றேன். தவறென்றால் மன்னிக்கவும்.'' பவ்யமாய் தலைகுனிந்தான்.

''சேச்சே நீ சொன்ன ஒரு வார்த்தையே போதும் எனக்கு. நான் யார் உன்னை மன்னிக்க? உண்மையை சொல்வதென்றால் உன்னைத்தான் நான் கோவில்கட்டி கும்பிட வேண்டும்''

''அய்யய்யோ! ஏன். நான் இன்னும் கொஞ்சநாள் வாழ வேண்டாமா''

''அடப்போப்பா! ராசாத்திக்கும் கோதைக்கும் நீதான் காவலாய் நின்று



காத்தாயாம் அக்கா சொன்னாள். ரொம்ப நன்றி சரவணா. தாய் தந்தையை இழந்த பிள்ளைகளை நீயும் பட்டம்மாவும் பார்த்துக் கொள்ளாவிட்டால் என்னவாகி இருப்பார்களோ. நினைக்கவே பயமாக இருக்கிறது.'' சொல்லும்போதே உடல் நடுங்கியது ரகுவிற்கு.

''நல்லவர்களை எப்போதும் கடவுள் கைவிடமாட்டார். அதெல்லாம் போகட்டும். நாளை வரும் உங்கம்மாவை எப்படி சமாளிப்பீர்கள் அதைச் சொல்லுங்கள் முதல்ல'' அந்தக் கேள்விக்கு பதில் கூற இயலவில்லை ரகுவால்.

''அம்மாவா? ஒரு தாயாகவா நடந்து கொண்டாள் அவள்? எப்படிப்பட்ட துரோகம். உன் கண்முன்னால் மாமா குடும்பத்துடன் தாம்பூலம் மாற்றிவிட்டு என்னை அப்படி அனுப்பிவிட்டு இங்கே ஒரு குடும்பத்தையே சிதைத்து சின்னாபின்னமாக்கி இருக்கிறாள். அதுவும் தன் உடன் பிறந்த அண்ணன் குடும்பத்தை. அவளை எப்படி மன்னிப்பது. அப்படி மன்னித்தால் நான் மனிதனா?

எத்தனை பொய்? எத்தனை நடிப்பு? இங்கே பித்துபிடித்து என் கோதை தவிக்க ஒவ்வோர் முறை ஊர் சென்று வந்தபோதெல்லாம் அவ அப்படி அமோகமா இருக்கா இப்படி வாழுறான்னு எத்தனை விதம் விதமாய் பொய் சொல்லி இந்த நிலைக்கு ஆளாக்கிய பிறகும் நான் வாயைத் திறந்தாலே கோதைமீது சாபமாய் விட்டுக் கொண்டிருந்தாளே. அந்த வாயை அடைக்கத்தானே திருமணத்திற்கு சம்மதித்தேன். எவ்வளவு அழகாய் சூழ்ச்சி செய்து காய் நகர்த்தி இருக்கிறாள். சகுனி அம்மா. ஆனால்.. நான்.. என்னபடித்து என்ன சம்பாதித்து என்ன பயன்! இத்தனை ஏமாளியாய் இருந்திருக்கிறேன்.

இல்லை என் காயத்தை கிளறிவிட்டு என்னை ஊருக்கு போகவிடாமல் தடுத்து என் வேதனையை அவள் வெற்றியாக்கிக் கொண்டாள். அதுதான் உண்மை. அதெப்படி முடிந்தது. ஒரு பெண்ணால்? அதுவும் ஒரு பெண்ணிற்கு தாயாய் இருந்தும் எப்படி இவள் வாயில் அத்தனை மோசமான வார்த்தைகள் வந்தது? இரண்டு உயிரைக் குடித்தும் அவள் திருந்தவில்லை. செய்த தவறுக்காக ஒரு நொடியும் வருந்தியதும் இல்லை. மேலும் மேலும் தவறுகளையே செய்து கொண்டே இருக்கிறாள். பெண் பாவம் இவளை சும்மா விடுமா? எந்தப்பாவத்தை தீர்த்தாலும் பெண்பாவத்தை தீர்க்கவே முடியாதே.

இவள் செய்தபாவம் தான் இவள் பெற்ற பெண் தலையில் விழுந்ததோ. இந்தவயதில் பூவை இழந்து பொட்டை இழந்து நிற்கிறாளே அக்கா. இதைக் கண்டுமா அவளது மனம் மாறவில்லை. எப்படிமாறும்.?

மருமகனது சாவையும் கூட தனக்கு சாதகமாக்கிக் கொண்டவளாயிற்றே. அங்கே அத்தான் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தபோது தானே உனக்கு கல்யாணம் என்று போலியான பத்திரிகையை தயாரித்து காட்டி என் கோதையை அநாதையாக்கி. அவள் மூளையை கலங்கடித்து அந்த பச்சைமண் ராசாத்தியின் வாழ்க்கையை சூனியமாக்கி ஆண்களைக் கண்டாலே வெறுத்துபோகும் அளவிற்கு அவளது மனதை கல்லாக்கி எத்தனை எத்தனை பாவங்களை செய்திருக்கிறாள்?

வீட்டைவிட்டு வெளியே வராத வசதியான பெண்குழந்தைகளை

காட்டிலும் மேட்டிலும் வேலை செய்தால்தான் கஞ்சி என்ற நிலைக்கு ஆளாக்கி வீடுவாசல் இல்லாமல் தெருவில் நிறுத்தி எத்தனை பாவங்கள்... இதையெல்லாம் எந்த கங்கையில் மூழ்கி கரைப்பது.? இவன் மூழ்கினால் கங்கையே கெட்டுப்போய்விடும். புனிதத்தை இழந்துவிடும். எல்லாவற்றுக்கும் காரணம் பணம்தானே. இந்த சொத்துதானே. அவற்றையெல்லாம் நீயே கட்டிக்கொண்டு எனக்கு என் கோதை போதும் என்று சொல்லிவிட்டு அவள் கண்படாத இடத்திற்கு போய் விடுவேன். பெற்ற பாவத்திற்கு அவளை கொல்லமுடியாது. ஆனால் நான் கொடுக்கும் இந்த தண்டனை போதும் அவனுக்கு.''

''ஹலோ! நான் இன்னும் போகவில்லை. இங்கு தான் இருக்கிறேன்.'' முகத்தின் முன்னால் சொடுக்கினான் சரவணன்.

''ஓ! ஸாரிடா. அம்மாவை நான் பார்த்துக் கொள்கிறேன். நீ எப்படி இந்த கல்யாணத்தை நிறுத்துவாய்? அதைச் சொல் நீ.''

''அது ஒன்னும் பெரிய விஷயமில்லை. மதுவோட குணத்தை வெச்சே நான் நிறுத்திருவேன். ஆனா இப்போ இன்னொரு ஐடியாவும் வந்திருக்கு''

''என்ன? என்ன?'' பரபரப்பாய் கேட்டவனிடம்'' இந்த மழைக்கு சூடாய் ஒரு காபி கிடைத்தால் சொல்கிறேன்'' என்றான் கூலாக.

''அக்கா..'' ''இதோ வந்திட்டேன்'' என்றவள் காபியோடுவர அமைதியாக குடித்து முடித்தனர். ''ம் இப்ப சொல்லு'' என்றான் வாயைத் துடைத்தவாறே.

''அது வேறொண்ணும் இல்லண்ணா. இன்னிக்கு சென்னையிலிருந்து வந்த வானரங்கள்ல ஒன்னு நம்ம மது மேல பைத்தியமா இருக்கு'' ''வ்வ்வாட்'' துல்லியமாய் அதிர்ந்தான் ரகு.

''ம். ஆமா! அதுங்க எங்கிட்ட நேரடியா எதுவும் சொல்லல. ஆனா நான் டிரைவர்தான்னு நினைச்சிட்டு அதுங்க இஷ்டத்துக்கு பேசினாங்க. பார்ட்டி பேரு பிரதாப். கொஞ்சநாள் லவ் பண்ணியிருக்காங்க. அப்போ ஏதோ ஜாலி மூடுல வேற ஏதோ ஒரு பொண்ண பார்த்து மது இட்ட கமெண்ட் அடிச்சிருக்கான். உடனே மதுவிற்கு கோபம் வந்து நான் உன் முன்னால் இருக்கும் போதே இப்படி இன்னொரு பொண்ணை பார்க்கிறியே. போ. போய் அவளையே கட்டிக்கன்னு



''கேஸ் கம்பெனியில் வேலை பார்க்கும் பெண்ணை பிறந்தகம் அனுப்பினது தப்பா போச்சு...''

''ஏன்...?''

''நாளைக்கு திரும்பிவான்னு போன் செஞ்சா... பதிவு செஞ்சதிலிருந்து 10 நாள் கழிச்சு தான் வருவேங்கறா...''!!

-ராஜிராதா, பெங்களூர்-34.



வெட்டி விட்டுட்டாளாம்.

மது அத்தோட அவனை மறந்துட்டாளாம். ஆனா பாவம் அவன் தாடியெல்லாம் வளர்த்திருக்காண்ணா. அப்புறம் ஏண்டா நீ கல்யாணத்துக்கு வர்றன்னு ஒரு வானரம் கேட்டது. அதுக்கு அந்த பிரதாப் சொல்றான். மது எனக்கு இல்லன்னு ஆகிடுச்சு. சரி அவளை கட்டிக்கப் போற அதிர்ஷ்ட சாலியையாவது பார்த்து கை கொடுத்துட்டு போயிடுறேனேன்னு பாவமா சொன்னான். ஒருவேளை உண்மையாகவே விரும்பியிருப்பானோன்னு தோணுது. என்ன இருந்தாலும் மது நம்ம சித்தி பொண்ணாச்சேன்னு அவன் பேமிலியைப்பத்தி ஜாடைமாடையாய் விசாரிச்சேன். ரொம்ப ரிச்சாளாம். மதுவுக்கு வசதி குறைந்த பிரண்டே கிடையாதாம். வீடு வந்ததும் அரேன்ஜ் பண்ணிக் கொடுத்ததும் தான் நான் யார்னு அவனுக்கு தெரிஞ்சது. உடனே தனியாக கூட்டிட்டு போயி என்கையைப் பிடிச்சுகிட்டு கெஞ்சுறான். சார் நான் நல்லவன். கல்யாணத்தை நிறுத்த வரல்ல. பசங்க கிண்டலா பேசினதை மதுகிட்ட போட்டுக் கொடுத்திடாதீங்கன்னு. அப்பவே முடிவு பண்ணிட்டேன். மதுவுக்கு அவன்தான் மாப்பிள்ளைன்னு.

இன்னாருக்கு இன்னார் எழுதி வெச்சிருக்காருல்ல சாமி. கோதைக்கு ரகுநாதன்னா மதுவுக்கு ஒரு பிரதாப். தட்ஸ்ஆல்''

அழகாய் தோள்களைக் குலுக்கி சரவணன் சிரித்தான். முதன் முறையாய் புன்னகைத் தான் ரகு.

''ஓஹோ! அப்போ சரவணனுக்கு யார்னு எழுதியிருக்கு'' கேலியாய் கேட்டதும் உஷாரானான். தவறிப்போய் கூட ராசாத்தியின் மனம் தெரியாமல் எதுவும் உளறிவைக்கக் கூடாது.

மெல்ல சிரித்து. ''முதல்ல நீங்க எல்லாம் குடும்பம்ங்கிற சாகரத்துல மூழ்கி நீந்தி வாங்க. அப்புறம் அந்தசாகரத்தில் இறங்கலாமா இல்ல பாதுகாப்பா கரையிலயே நின்னு தப்பிச்சிக்கலாமான்னு முடிவு பண்ணிக்கிறேன். என்னக்கா நான் சொல்றது சரிதானே?'' என்க, ரகு வெகுநாட்களுக்கு பிறகு தன்மனபாரம் எல்லாம் குறைந்து கலகலத்து சிரித்தான்.

அதை ரசித்த சரவணன் விடியும் வரை கலகலப்பாக பேசிக் கொண்டே இருந்தான். இருள் மறைந்து வெளிச்சம் பரவியது ரகுவின் மனதிலும் ரதியின் முகத்திலும்.

**14**

**இந்த பந்தம் இன்று வந்ததோ**
**ஏழு ஜென்மம் கண்டு வந்ததோ**
**உலகம் முடிந்தும் தொடரும்**
**உறவிதுவோ? வாழாத காதல் ஜோடி**
**இம்மண்ணில் கோடியே - வாழாத**
**பேர்க்கும் சேர்த்து வாழ்வோமே தோழியே!**

'' ஏய் கதவைத் திற. நான் அத்தானைப் பார்க்கப்போகணும். கத

வைத் திறந்துவிடு'' கோதை பட்டென்று அடித்து எழுப்ப ராசாத்தி முன ஙினாள்.

''அக்கா! எனக்கு ரொம்ப தலைவலிக்குது. வெளியில வேற மழை தூறிட்டே இருக்கு. கொஞ்சநேரம் கழிச்சுப் போலாம். சரியா''

''நான் இப்பவே போனும். அப்புறம் அத்தானுக்கு கோபம் வந்தி டும் நீ கதவைத் திற.'' கோதை பிடிவாதமாய் எழுப்ப ''ஐயோ! சொன்னா கேட்கமாட்டியா. நேத்து மழைல நனைஞ்சேன்ல அதான் இப்பக் காய்ச் சலடிக்குது எனக்கு. நீ இப்ப நனைஞ்சா உனக்கும் காய்ச்சல் வரும். அப்பு றம் டாக்டர் ஊசிபோடுவாரு. பேசாம இரு. இப்ப அத்தான் வந்திடும்'' ராசாத்தி சொன்ன உடன் கதவை தட்டும் ஓசைகேட்க கோதை எழுந்து, ''யாரு வந்திருக்கா அத்தானா? ''என கேட்க, வந்த பதிலில் வாரிசுருட் டிக் கொண்டு எழுந்தாள் ராசாத்தி.

மளமளவென ஆடையை சரிசெய்து கொண்டே கதவை திறக்க சரவ ணனும் ரகுவும் லேசான சாரத்தோடு உள்ளே நுழைந்தனர். ராசாத்தி யோச னையாய் சரவணனைப் பார்க்க அவன் பார்வையாலேயே வெளியேறச் சொன்னான், தலையசைத் தவாறே ராசாத்தி வெளியேறிவிட, ''கோதை! இதோ உங்க அத்தான் வந்தாச்சு. என்ன பேசனுமோ பேசுங்க. ரகுண்ணா எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு. வரட்டுமா ''- என்றவாறு கதவை லேசாக சாத்திவிட்டு வெளியேறினாள்.

வெளியே வந்தவனிடம் சீறினாள் ராசாத்தி ''என்ன காரியம் செய்கி றீர்கள் சரவணன். இது மட்டும் உங்கள் வீட்டிற்கு தெரிந்தால் என்ன ஆகும். உங்களுக்கென்ன மூளை மழுங்கிப் போயிடுச்சா?''

''அதுதான் நான்கைந்து வருடங்களாய் மழுங்கிப்போய் உன் பின் னால் சுற்றுகிறதே. உன் மூளைதான் என்னை ஏற்றுக் கொள்ள மறுக்கி றது'' குறும்பாய் புன்னகைத்தான்.

''நான் என்னகேட்கிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்'' ''இந்த விசாரணையை அப்புறம் வைத்துக் கொள். முதலில் என்னுடன் வா. உனக்கு மாத்திரை தருகிறேன். போட்டுக்கொண்டு உமாவுடன் ரெஸ்ட் எடு வா'' நடக்க ஆரம்பித்தான்.

''எனக்கென்ன கேடு. நான் நான்றாய்த்தான் இருக்கிறேன்'' மிடுக் காய் பதில் வந்தது. நின்று அவளை கூர்மையாய் பார்த்தான்.

''நான் சொல்வதையெல்லாம் மறுக்க வேண்டும் என்றில்லை. எல் லாம் உன் நல்லதிற்குத்தான். உன் முகத்தைப் பார்த்தே உனக்குஎன்ன செய்கிறது என்று என்னால் சொல்ல முடியும். பேசாமல்வா. இத்தனை வருடம் கழித்து நடக்கப்போகும் உன் அக்காவின் திருமணத்தை நீ முன் நின்று பார்த்து மகிழ வேண்டாமா? காய்ச்சலில் சுருண்டு கிடந்தால் நன் றாகவா இருக்கும்'' என்றவாறு அவன் நடக்க கூடவே ... ஓடிவந்தாள்.

''என்ன நடக்கிறது இங்கே! எனக்கும் ஒன்றுமே புரியவில்லை''

''எல்லாம் நல்லதே நடக்கும். இனி உங்கள் வாழ்வில் சுகம். சுகம் மட்டுமே. பொறுமையாய் இருந்து நடப்பதை வேடிக்கை பார்'' சரவண னின் குரல் சந்தோஷத்தையும் கூடவே கலக்கத்தையும் உண்டுபண்ணி யது.

ரகுவின் கண்கள் நீரால் நிறைந்திருந்தது. என் கோதையா இவள். சந்



தன மேனியும் பொங்கும் புன்னகையும் குறுஞ்சிரிப்பும் செவ்வான வெட் கமும் குளிர்நிலவு கண்களும் எங்கே போயிற்று. சரவணன் மட்டும் வந்தி ராவிட்டால் இவள் யாரோ என்று ரகு நினைத்திருப்பான். அத்தனை மாற் றம் கோதையிடம் எல்லாம் தன் தாயால் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் என நினைக்கையில் நெஞ்சம் தீயாய் எரிந்தது.

என்ன செய்தாள் இவள் இத்தனை பெரிய தண்டனையை அனுப விக்க? எப்படி மனம் வந்தது தன் தாயிக்கு. ஐயோ அந்தக் காந்தக் கண்க ளின் ஒளி எங்கே போனது. ரகுவின் மனம்தான் அரற்றியதே தவிர வாய் திறக்கவே இல்லை. திறக்க முடியவும் இல்லை. கோதையின் கண்களோ அத்தானின் முகத்தை ஆசை தீரப்பார்த்தது. தேடி தேடி ஏங்கிய ஜீவன் எதிரில் நின்றவுடன் கண்கள் இழந்த ஒளியை திரும்பப் பெற்றுக் கொண் டிருந்தது. அத்தானின் கண்களை அது நீரில் நிறைந்து நின்றதை மெல்ல மெல்ல தன் நினைவலைகளில் பதித்துக் கொண்டாள். பழைய நினைவு களை தூசு தட்டி எழுப்பினாள்.

''ஹாஸ்பிடல்ல முன்னேபின்ன ஆனாலும் ஆயிடும். அது தெரியாம பயந்துடாதே. அத்தான் மேல உனக்கு நம்பிக்கை இருக்குல்ல'' அத் தானின் குரல் காதில் மோதியது. உதடுகள் துடித்தது. கண்களில் லேசாய் சாரம் சுரந்தது. இதயம் படபடத்தது. அத்தானை நெருங்கி அவனது முகத்தைப் பற்றிக் கொண்டாள்.

''அ..த்..தான்! அத்தான்! வந்து விட்டீர்களா. எனக்குத் தெரியும் வந்துவிடுவீர்கள் என்று எனக்குத் தெரியும். எனக்கு நம்பிக்கை இருந் தது அத்தான்'' இத்தனை வருடங்களாய் உறைந்திருந்த கண்ணீர் உருகி ஆறாய் பெருகியது. பேச வார்த்தையின்றி தன் மார்போடு அணைத் துக் கொண்டான் ரகு. பேசவேண்டிய ஒன்பது வருட கதையை வேத னையை வலியை அந்தக் கண்ணீர் அவனுக்கு உணர்த்த அவனது இத யம் அவளுக்கு உணர்த்தியது. கோதை அழுதாள் அழுது கொண்டே இருந்தாள். தன் வருத்தம் எல்லாம் மறையும் வரை அழுது கொண்டே இருந்தாள்.

''பாரு! உன் வருங்கால கணவர் செய்யும் வேலையைப் பாரு'' லேசாய் கதவைத் திறந்து மதுவிடம் காட்டினாள் சரவணன். ரகுவா இது? தன்னை ஏறெடுத்தும் பாராத ரகு இப்படி ஒருபெண்ணை கட்டி அணைத்துக் கொண்டிருப்பான் என கனவிலும் நினைக்கவில்லை. அவள்.

கோபம் எரிமலையாய் வெடிக்க. ''தூ. பாஸ்டர்ட், ரெண்டு நாள்ல கல்யாணத்தை வெச்சிகிட்டு என்ன காரியம் பண்ணிட்டு இருக்க. ச்சி! உன்னைப் போயி நல்லவன்னு நினைச்சேனே. நீ இத்தனை மோசமா னவனா? சென்னையில் அத்தனை யோக்கியனாய் இருந்தாயே.. அதெல்லாம் நடிப்பு. ஐயோ சரவணன் நான் ஏமாந்து விட்டேனே. நான் என்ன செய்வேன். தெருவை அடைத்து பந்தல் போட்டு உறவினர் எல்லாம் வந்துவிட்டார்கள். நான் எப்படி.. என்ன செய்வது? பாரேன் நான் ஒருத்தி காட்டுக்கத்தல் கத்துகிறேன். திரும்பிப் பார்க்கிறாரா பாரேன். உலகை மறந்து நிற்கிறார்களே? போகிறேன். இவன் அம்மா விடம் பேசிக்கொள்கிறேன்'' படபடவென பொரிந்துவிட்டு அவள்

ஓட ''ரகு அண்ணா சக்ஸஸ்! நீங்க ஜமாய்ங்க..'' என ரகசியமாய் கிசுகிசுத்து கட்டைவிரலை உயர்த்திக் காட்டிவிட்டு அவன் பின்னே ஓடினான் சரவணன்.

மலையென வந்தபாரம் பனியென விலகிவிட்ட நிம்மதியோடு கோதையை இன்னும் இறுக்கிக்கட்டிக்கொண்டான் ரகு.

'' சேச்சே! யாரையுமே நம்ப முடியல்ல சரவணா. இந்த ஆளை நான் நிறைய மீட்டிங்ல கம்பெனியில பார்த்திருக்கேன். ஒருவாட்டி கூட பெண்கள் பக்கம் திரும்பவே மாட்டான் தெரியுமா. அதனால தான் இவனைத்தான் கட்டணும்னு முடிவு பண்ணி அப்பாகிட்ட கேட்டேன். ஆனா முதன்முறையா என்னோட கணக்கு தப்பாப்போச்சு''

'' இல்லை மது. இது இரண்டாவது தப்பு'' வேகமாக நடந்து கொண்டிருந்தவள் நின்று புருவத்தை சுருக்கினாள். '' இரண்டாவது தப்பா? என்ன சொல்கிறாய் சரவணா''

'' முதல் தப்பு பிரதாப்பை தவறாக எண்ணியது'' வெகு நிதானமாய் அவன் சொல்ல சர்வமும் அடங்கிப் போனாள் மது.

சற்றுநேர மௌனத்திற்குப்பின், '' வேறென்ன உளறினான் அந்த முட்டாள்?'' என்றான் எங்கோ வெறித்துக்கொண்டு.

''ஐயோ! சத்தியமாய் அவராக வந்து என்னிடம் எதுவும் சொல்லவில்லை. காலையில் உரம் எடுக்க தோட்டத்திற்கு வந்தால் வயலுக்கு தெளிக்கும் பூச்சி மருந்தை ஒருவன் திருடிக்கொண்டிருந்தான். யாரடா அது என்று பிடித்து நாலுசாத்து சாத்திவிட்டு பார்த்தால் அது உன் பிரண்ட் பிரதாப்.''

''ஐய்யய்யோ! அப்புறம்'' பதறினாள். அந்தப் பதற்றத்தை பார்த்து தனக்குள் சிரித்துக்கொண்டே '' அப்புறம் என்ன? ஏண்டா கல்யாணத்தை நிறுத்தப்போறியா. சாகுறதுக்கா எங்க வீட்டுக்கு வந்தேன்னு கேட்டு நொறுக்கிட்டேன்'' என்றான்.

மது சீறினாள் ''என்ன அடித்தாயா? நீ எப்படி அவரை அடிக்கலாம். அவரை யார் என்று நினைத்தாய்''

'' யார்'' வெகுளியாய் கேட்க''அது.. அவர் என்நண்பர் '' என்றாள் சமாளிக்கும் விதமாக.

ஓஹோ அவன் இப்போது அவராகி விட்டாரோ. வார்ரேவா. மனதுக்குள் கும்மாளமிட்டபடி.

'' இது நல்லா இருக்கே. உன் பிரண்டுன்னா நம்ம ஊருக்கு வந்து நம்ம தோட்டத்துக்கு வாங்கிட்டு வந்த மருந்தை குடிச்சிட்டு நம்ம வீட்லயே சாகலாமா? அப்புறம் போலீஸ் கேசுன்னு யாரு அலையுறதாம். அதான் ரெண்டு தட்டுதட்டி விசாரிச்சேன். அப்ப எல்லா உண்மையும் தெரிஞ்சது என் மது இந்த சின்ன விசயத்துக்கு எல்லாமா காதலர்கள் பிரிவாங்க'' கன்னத்தில் கைவைத்தவாறே கேட்டான்.

'' எது சின்ன விசயம்? நான் பக்கத்தில் இருக்கும் போது அவன் எப்படி இன்னொரு பெண்ணை பார்க்கலாம். ரசிக்கலாம்? அதுவும் என்னிடமே சொல்கிறான் அந்த சுடிதார் நல்லாயிருக்குதே என்று'' மதுவின் மூக்கு கோபத்தால் சிவந்தது.

'' பார்த்தியா! நீ கோபப்படும் போது உன் மூக்கும் கன்னமும்



சிவந்து என்னமாய் ஜொலிக்குது. இந்த அழகைப் பார்ப்பதற்குத்தான் அப்படி சொன்னானாம்'' நம்ப முடியாமல் விழியை விரித்தாள் மது.

'' என்ன சொல்கிறாய் சரவணா. நீ சொல்வது நிஜமா''

'' பின்னே நான் என்ன பொய்யா சொல்கிறேன். வேண்டுமானால் அவனிடமே கேட்டுக்கொள்'' என்றவாறு அருகிலிருந்த மரத்தின் பின்னால் நின்றிருந்த பிரதாப்பை இழுத்து மதுவின் முன் நிறுத்தினான். எல்லாம் உன் வேலையா என கோபமாய் நிமிர்ந்தவள் தாடியோடு நின்றிருந்த பிரதாப்பின் வேதனை படர்ந்த கண்களைக் கண்டதும் உருகி விட்டாள்.

''உண்மையா பிரதாப். என்னிடம் சரவணன் சொன்னது''

பிரதாப் விழித்து''என்ன சொன்னா..'' என இழுக்க சரவணன் ஓங்கி அவன் காலில் மிதிக்க.. ''ஆ.. ஆமாம். ஆமாம் நீ கோபப்படும் போது எத்தனை அழகு தெரியுமா. அந்த அழகை ரசிக்கத்தான் அப்படிச் சொன்னேன்''

'' இதையேன் என்னிடம் முன்னமே சொல்லவில்லை''

காலை உதறிக்கொண்டான் பிரதாப்'' ப்பா! நீ எங்கே என்னைச் சொல்ல விட்டாய். என்னைப் பார்த்தாலே எரிந்து விழுந்தாய்''

'' ஆமாம் இல்ல. சரி சரவணா இப்ப அப்பாகிட்ட எப்படி சொல்றது. என்னதான் பிரதாப்பை வெறுத்தாலும் அவர்தான் என் மனதில் இருந்திருக்கிறார். அதனால் தான் எல்லோரிடமும் எரிந்து விழுந்து கொண்டிருந்தேன்'' உண்மையை ஒப்புக் கொண்டாள் மது.

'' இதேதான் மது. நீ எப்படி பிரதாப்பை நினைச்சிட்டு இருக்கியோ, அதே போல்தான் ரகுவும் கோதையை மனசில நினைச்சிட்டு இருந்தார். ஒருவருடம் ரெண்டு வருடக்காதல் இல்லை அது. விபரம் தெரிஞ்சநாள்ல இருந்து தொடர்ந்த காதல். அதனால தான் அவரும் உன்கூட நெருங்காம விலகியே நின்றிருக்கார். எனிவே அதுவும் நல்லதாப் போச்சு''

'' ஓ! நான் அவரை ரொம்ப திட்டிட்டேனோ சரவணன். போய் ஸாரி கேட்டுட்டு வரவா''

'' அம்மாடி மொதல்ல உன் பிரதாப்கிட்ட ஸாரிகேட்டு அந்த தாடியை வழிக்கச்சொல்லு. நான் போயி சித்தப்பாகிட்ட சமாதானம் சொல்றேன். நீ அதுக்குள்ள மாப்பிள்ளையை நல்லா டிப்டாப்பா மாத்திக் கூட்டிட்டுவா. அப்போதான் உங்கப்பாவுக்கு மாப்பிள்ளையை உடனே பிடிச்சுப்போகும்.'' என்றவன் '' என்ன மாப்பிள்ளை ஓ.கே.தானே'' என பிரதாப்பைப்

'மன்னர் தளபதியை ஏன் கடிந்து கொள்கிறார்?'

'போர்க்களத்தில் இருந்து புறமுதுகிட்டு ஓடிவரும்போது மன்னரை அவர் முந்திவிட்டாராம்..'

மு.மதிவாணன், அரூர்.



பார்த்து கண்ணடித்தான்.

''எல்லாம். ஓ.கே. தான் ஸார். இதுதான் கொஞ்சம் ஓவர்'', என்றான் காலைக்காட்டி ''இன்னும் வலிக்கிறது'' என்றான் முகம் சுருக்கி.

''காதல்ல அடி உதை மிதி இதெல்லாம் சகஜமப்பா'' என்ற சரவணனிடம் ''என்ன சொன்னாய்? என்றாள் மது.

''இது எங்களுக்குள்ள பர்சனல். நீ போய் நான் சொன்னதைச் செய். நான் வீட்டுக்குப் போறேன்'' விசிலடித்தவாறே நகர்ந்தான்.

## 15

*மறந்தால் தானே நினைக்கணும் மாமா*
*நினைவே நீதானே நீதானே!*
*மனசும் மனசும் இணைஞ்சது மாமா*
*நினைச்சு தவிச்சேனே நான் தானே!*

மழை சுத்தமாய் நின்று வெயில் அடிக்கத் தொடங்கியிருந்தது. நன்றாக குளித்து பசுமையாக காட்சியளித்த மரங்களின் இலைகளில் துளித்துளியாய் நின்றிருந்த நீர்த்துளிகள் வைரங்களாய் ஜொலித்தன. காற்றின் சிலு சிலுப்பில் சில துளிகள் தங்கள் மேலே விழ அதன் குளிர்ச்சியில் கோதை சிலிர்த்தாள். இன்று தான் புதிதாய் பூமிக்கு வந்ததுபோல் இருந்தது.

நேற்று பெய்த மழையில் ஆங்காங்கே வெள்ளை முட்டைகளாய் காளான்கள் முளைத்திருந்தன.

காளானைப் பார்த்ததும் அம்மாவின் நினைவு வந்தது கோதைக்கு. மழை பெய்தாலே மறுநாள் அப்பா தோட்டத்திற்கு போய் திரும்பும் போது முட்டைக்காளானோடுதான் வருவார். அம்மா அதை பொறுமையாக அரிந்து சுத்தம் செய்து கறிக்குழம்பாய் செய்யும் போது தெருவே மணக்கும். கோதையும் ராசாத்தியும் அம்மா செய்து முடிக்கும் வரை அடுக்களையை விட்டு நகரமாட்டார்கள். அம்மாவும் அவசரமாகச் செய்து தங்களுக்கு பரிமாறி அதை ரசித்து சாப்பிடுவதை புன்னகையோடு பார்த்துக் கொண்டே இருப்பாள்.

சில சமயங்களில் அம்மாவுக்கு இல்லாமல் காலியாகிவிடும். கொஞ்சமும் சலிக்காமல் நீங்கள் சாப்பிட்டால் என் வயிறு நிறைந்துவிடும் கண்ணுங்களா என அணைத்துக் கொள்வாள்.

இன்று அந்த அணைப்பு இல்லை. தன் அன்னை இல்லை. அதுவும் தன்னால் தானே. தன்னால் ஏற்பட்ட அவமானம் தாங்கமுடியாமல் தானே தன்னைத் தானே மாய்த்துக் கொண்டனர். ஏன் எங்களை மட்டும் அநாதையாய் விட்டுச் சென்றனர். எத்தனை யோசித்தும் இதற்கு மட்டும் கோதையால் விடைகாண முடியவில்லை. இரண்டு பெண்குழந்தைகளையும் இரண்டு கண்ணாக மதித்தவர் அப்பா. தன் கண்மூடியபிறகு குழந்தைகளின் நிலை என்ன என்று யோசிக்காமலா இருந்திருப்பார்.

மரணம் கொடிது- அது எத்தகையவர்களை மாற்றிவிடும் வல்லமை உடையது. அதுதன் தங்கையின் மனதையும் மாற்றிவிடும் என நினைத்திருப்பாரோ. மனம்மாறி தன் குழந்தைகளை அரவணைத்துக் கொள்வாள்



தன் தங்கை என நினைத்து விட்டாரோ? அத்தையா மாறுவாள். நடக்கும் கதையா இது? உடன் பிறந்தவன் மனைவியோடு பிணமாகிக் கிடந்த போது அவன் பெற்ற பிள்ளைகளை தெருவில் நிறுத்தியவளாயிற்றே. அதுவும் அவள் வெளியே வீசியெறிந்த பொருளில் தன் தாய் சேர்த்துவைத்த நகைகளில் ஒரு குன்றிமணி கூட வெளியே வரவில்லை.

தன் தந்தை சேர்த்துவைத்த பணம் என்று ஒரு ரூபாய் கூட வரவில்லை. துணிமணிகளும் தட்டுமுட்டு சாமான்களும் தான் வீசியெறியப்பட்டிருந்தது. அவளது அரக்கத்தனத்திற்கு முன்னால் யாருடைய பேச்சும் எடுபடாமல் போயிற்றே. எத்தனை அழகான அம்மா விழி பிதுங்கி நாக்கை வெளித்தள்ளி, ''ஐயோ அம்மா என்ன கொடுமை! உன்னை நான் தான் கொன்று விட்டேனோ? நீயும் அப்பாவும் இன்னும் எத்தனை ஆண்டுகள் இணைபிரியாமல் சந்தோஷமாக வாழ்ந்திருக்க வேண்டியவர்கள். பாவி. என்னால்தான்.. என்னால்தானே இப்படி ஆயிற்று''

அதுவரை அமைதியாக நின்று கொண்டிருந்த ரகு பதறிப்போய் அவளது கைப்பற்றி தடுத்தான். ''கோதை என்னம்மா நீ. என்ன காரியம் செய்து விட்டாய் டாக்டர் என்ன சொன்னார். உணர்ச்சிவசப்படக்கூடாது என்று தானே சொன்னார். இப்படி அழலாமா. உன் உடம்பு ரொம்ப பலவீனமா இருக்குதும்மா. ப்ளீஸ் அழாதே உன் மனசு ரிலாக்ஸா ஆகட்டும்னு தான் நாம சந்திக்கிற இடத்துக்கு கூப்பிட்டு வந்தேன். நீ இப்படி அழுவேன்னு தெரிஞ்சா இங்க வந்திருக்கவே மாட்டேன் வா வீட்டுக்கு போலாம்'' என்றான்.

''இல்ல அத்தான் நான் அழணும். என்னை அழவிடுங்க. என் தாயையும் தந்தையையும் முழுதாய் முழுங்கிவிட்டு நான் இன்னும் உயிரோடு இருக்கிறேனே. இந்தப் பாவம் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் என்னை விட்டுப்போகாது. நான் பாவி. நான் வாழக்கூடாது. நான் செத்துப்போயிடணும்'' கதறிக்கொண்டு முகத்திலறைந்து கொண்டே இருந்தாள்.

ரகுவின் உடலும் மனதும் துடிக்க, அவளை இழுத்து தன் மார்போடு அணைத்துக் கொண்டான்.

''அழாதே கோதை, நீ ஒரு தவறும் செய்யவில்லை. தவறு செய்ததெல்லாம் நானும் என் அம்மாவும் தான். உன்னை என் தாயை நம்பி விட்டுச்சென்றது என் தவறு. உங்கள் குடும்பத்தை நாசமாக்கியது என் அம்மா. தவறு முழுவதும் எங்களுடையது தான். நீ குற்றமற்றவள். நீ நல்லவ. உன்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய நான்தான் பூமியில் வாழத்தகுதியற்றவன். நான் தான்பாவி. என்னை அடி. உன் ஆத்திரம் தீர அறைந்து என்னைக் கொன்றுவிடு. உன் கையால் இறப்பதையே நான் பெருமையாக நினைக்கிறேன். அடி என்னை அடி. ''அவளை நிமிர்த்தி அவளது கைகளைப் பற்றி தன் கன்னத்தில் முகத்தில் பளாரென்று அறையவைத்தான் கோதை பதறியவாறே தன்கையை விடுவித்துக் கொண்டாள்.

''அத்தான்! என்ன பண்றீங்க. விடுங்கத்தான் பாவம் நீங்க என்ன பண்ணுவீங்க. எல்லாம் என்விதி. '' என்றவாறு விசும்பினாள்.

''இல்லை கோதை. இது விதி இல்லை. எல்லாம் என் அம்மா செய்த சதி. உனக்கு நான் போன் செய்யும் போதெல்லாம் ஏதாவது சாக்கு போக்கு சொல்லி வைத்துவிடுவாள். நான் போட்ட கடிதங்கள் அனைத்தும் அம்

மாவிடம் தான் கிடைத்திருக்கிறது. அனைத்தையும் மறைத்துவிட்டு என் வீடமே வந்து நீ எங்கோ பெரிய இடத்தில் வாழ்க்கைப் பட்டிருப்பதாக சொல்லி சொல்லி வயிறெரிந்தாளே. ஏற்கனவே உன்னிடம் நான் பெண் பார்த்ததாக சொல்லி ஒரு ஏமாற்று வேலை செய்தவளாயிற்றே. நான் அதை நினைவு வைத்திருக்க வேண்டும். அம்மா சொன்னதை நம்பியிருக்கக்கூடாது. எல்லாம் என் தவறுதான். நான் சற்று மும்முரமாய் உன்னைத் தேடியிருக்க வேண்டும். நீ திருமணமாகி போய்விட்டாய் என்பது எனக்கு பெரிய அடி. அத்தோடு அத்தானின் மரணம். நஷ்டத்தில் ஓடிய பிஸ்னெஸ். ஏமாற்றம் எல்லாமாய் சேர்த்து என்னை அடியோடு சாய்த்து விட்டது.

அப்போது கூட அம்மா என்னிடம் எதையுமே சொல்லவில்லை தெரியுமா? கல்நெஞ்சம் அம்மாவுக்கு. கடைசிவரை உன்னைப் பற்றித்தான் கரித்துக் கொண்டே இருந்தாள். அவள் வாயை அடைக்கத்தான் திருமண முடிவை எடுத்தேன். ஆனால் கடவுள் இருக்கிறார் கோதை. இல்லையென்றால் கோபாலகிருஷ்ணன் நம் கிராமத்தில் திருமணத்தை வைக்க வேண்டும் என்றிருப்பாரா? இல்லை கிராமத்திற்கு வர மறுத்த என்னை பத்துநாட்களுக்கு முன்பாகவே அம்மாதான் அனுப்பி வைப்பாளா? எல்லாம் கடவுள் செயல்தான் கோதை. இல்லையென்றால் உன்னைக் காணாமல் உன் நினைவால் நொந்து நொந்தே என் உயிர் பிரிந்திருக்கும். '' சட்டென ரகுவின் வாயைப் பொத்தினாள் கோதை.

'' வேண்டாம் அத்தான். இனிஒருமுறை இந்த வார்த்தையை நீங்கள் சொல்லக்கூடாது'' அவளது தளிர்விரல்களை எடுத்துகொண்டே, ''அப்படின்னா நீயும் இனியொரு முறை இப்படி அழக்கூடாது. உன்னை நீயே வருத்திக் கொள்ளக்கூடாது. நடந்ததை எல்லாம் இறைவனின் சோதனை என்று விட்டுவிட்டு இனி நடப்பதை மட்டும் நினைக்கவேண்டும் சரியா. அழமாட்டேன் என்று சொல்'' கெஞ்சினான் ரகு.

''இல்ல அத்தான். இனிமே அழமாட்டேன். அம்மாவும் அப்பாவும் ஆசைப்பட்ட மாதிரி நம்மபாட்டி ஆசைப்பட்டமாதிரி இனிமே நாம சந்தோஷமா வாழலாம். ஏன் அத்தான் அத்தை இப்போ மாறி இருப்பாங்களா. என்னை ஏற்றுக் கொள்வார்களா'' கண்களில் ஆர்வம் மின்ன கேட்டவளை பரிதாபமாய் பார்த்தான்.

'தலைவர் படிப்பறிவு இல்லா தவன்ற விஷயம் எல்லாருக்கும் தெரிந்து விட்டது..'

'என்னாச்சு?'

'ஆளானுக்குப் பாடம் புகட்டு வோம்னு சொல்கிறார்களே!'

-எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.





அம்மா இந்நேரம் வீட்டுக்கு வந்துசேர்ந்திருக்கலாம். அங்கே அக்காவிடம் என்ன ஆட்டம் ஆடிக் கொண்டிருக்கிறாளோ. சமாளிக்க முடியாமல் அக்கா எப்படி திணறிக் கொண்டிருக்கிறாளோ. சரி நம் கஷ்டம் நம்மோடு போகட்டும். கோதையிடம் சொல்லி அவளை ஏன் பயமுறுத்த வேண்டும். ரிலாக்ஸா இருக்க வேண்டும் என்று தானே இவளை இங்கே அழைத்துவந்தேன்.

'' ஹேய் கோதை! இங்கே பாரேன். வாவ் ப்யூட்டிபுல்'' அவன் கைகாட்டிய பொருளை குனிந்து பார்த்தாள் கோதை. சின்னதாய் குட்டிக்குட்டியாய் வெல்வெட் துணுக்குகள் நடந்து வருவதைப் போல் சிவப்பு நிற பட்டுப்பூச்சிகள் வரிசையாக நிறைய வந்து கொண்டிருந்தன. இளம் வெயில் பட்டு அதன் உடம்பு பளபளத்து ''ஹய்யோ! அத்தான் எவ்ளோ வந்திருக்கு. பட்டுத்துணியாட்டம் மின்னுதே. இதுங்க வர்றதுக்காகவேணும் தினமும் மழைவரக்கூடாதா. அச்சோ தொடாதீங்க கடிச்சிடும்'' கிசுகிசுத்தாள்..

'' மண்டு. கண்ணை திறந்துபார். இதுவாகடிக்கும். பாரேன்'' உள்ளங்கையில் பட்டுப்பூச்சியை வைத்து காட்டினான். அது கைகளை சுருக்கிக் கொண்டு அசைவற்று கிடந்தது'' ஐயோ! செத்துப் போச்சா. ஏன் அத்தான் பிடிச்சீங்க. பாவம். இவங்க அம்மா அப்பா எல்லாம் தேடிட்டு இருப்பாங்களே'' பரிதாபப்பட்டவளை பார்த்து உடல் குலுங்கச் சிரித்தான்.

'' டீ இதோ இப்பப்பாரு'' என கையில் உள்ள பூச்சியை மண்ணில் விட்டான். சில நொடிகளில் அதுதன் கால்களை விரித்துக் கொண்டு அழகாய் நடந்து சென்றது. '' அட! பாருங்கத்தான். இந்த பூச்சிக்கு ரொம்ப அறிவுத்தான். பாருங்களேன் என்னமா பிளான்பண்ணிட்டு இப்போ நடந்து போகுது. அம்மாடியோவ்'' ஆச்சரியமாய் கண் மலர்த்தினாள். அந்த கொள்ளை அழகில் சொக்கிப்போனான் ரகு.

'' அது பிளான் எல்லாம் போடலடி. அதுவும் உன்னை மாதிரி தொட்டாச்சிணுங்கி போல இருக்கு. அதான் தொட்டவுடனே சுருங்கிடுச்சி. ஏண்டி இத்தனை வருஷம் ஆகியும் உனக்கு இந்த பயம் மட்டும் போகலியா. ம்ஹூம் உன்னைக் கல்யாணம் பண்ணிட்டு நான் என்னதான் பண்ணப்போறேனோ'' அலுத்துக்கொண்டான் ரகு.

'' ஓஹோ. அவ்வளவு தைரியமா. எங்கிட்டயேவா. உங்கள்'' என்றவாறு சுற்றும் முற்றும் தேடி ஒரு சிறு குச்சியை எடுத்துக் கொண்டு அடிக்க ஓடிவர '' ஐயோ! என்னை விட்டுடும்மா. ஸாரிடா என்செல்லம் இல்ல. என்பட்டு இல்ல. என் புஜ்ஜிக்குட்டி இல்ல. விட்டுடும்மா. ப்ளீஸ். ப்ளீஸ். என் ரோஜாக்குட்டி இல்ல'' கொஞ்சியவாறே புளியமரத்தை சுற்றி சுற்றி ஓடிவர அதற்கு ஈடாக அவளும் துரத்திக் கொண்டு வர கோதை மெல்ல மெல்ல இயல்பு நிலைக்கு திரும்பி பழைய குறும்போடு கலகலத்து சிரிக்க ரகு மனநிறைவோடு நின்று விட்டான் ஓடிவந்த கோதை அவன் மீது மோதி பாதுகாப்பில் வெட்கமாய் சிரித்தபோதுதான் சரவணன் மூச்சிறைக்க ஓடிவந்தான். சரவணனைப் பார்த்ததும் சட்டென விலக. சரவணன்

'' ஓ. ஸாரி. நான் கரடிமாதிரி வந்திட்டேனோ'' என்றான்.

'' இதை வேற கேட்கணுமா. போடா. சூப்பர் சீன்ல வந்து கெடுத்துட்ட ''என்ற ரகுவின் இடுப்பில் கிள்ளினாள் கோதை'' ஐயோ வெட்கத்

தைப் பாருடா என் கோதைக்கு. இதை பார்த்துக் கொண்டிருந்தால் போதுமே. சாப்பாடு தூக்கம் எதுவுமே வேண்டாமே '' கோதையை ரசனையோடு பார்த்துக் கொண்டு கிறங்கிப் போயிருந்த ரகுவை கொஞ்சம் நகர்த்திக் கொண்டு போய் காதிற்குள் கிசுகிசுத்தான் சரவணன். சட்டென ரகுவின் முகம் கருத்தது. உடல் விறைத்துக் கொண்டது. கோதையின் அருகில் வந்து அவளது தோள்பற்றி. '' கோதை எனக்கு ஒரு அவசர வேலை இருக்கு. நீ சரவணனோட வீட்டுக்கு போ. நான் சவினிங் வந்து பார்க்கிறேன். சரியா'' என்றான்,அவளது கண்களை கவனமாய் பார்த்து. '' அத்தான் எதுவும் பிரச்சனையா?'' கேட்கும் போதே குரல் பிசிறியது.

மெல்ல சிரித்து அவளது கன்னத்தைத் தட்டி ''ஒண்ணும் பிரச்சனை இல்லடா. ஒரு அர்ஜெண்ட் ஓர்க் நம்ம கல்யாணத்துக்குதாலி புடவை எல்லாம் எடுக்கணுமே. ஏ.டி.எம். போய் பணம் எடுத்திட்டு வரணும். மறந்திட்டேன். அதான் சரவணன் ஞாபகப்படுத்துறான். சரியா. சரவணன்'' என சரவணனிடம் கண்ணைக் காட்டிவிட்டு ஓட்டமும் நடையுமாக சென்றவனை கோதை கொஞ்சம் கலவரமாக பார்த்துக் கொண்டே நின்றாள்.

வியர்க்க விறுவிறுக்க ஓடிவந்த ரதி தம்பியைக்கண்டதும் மூச்சுவாங்க நின்றாள் ''தம்பி! இந்த அம்மா..'' என தொடங்க,

'' எல்லாம் சரவணன் சொன்னான் இந்த அப்பா எங்கே? ''நடந்து கொண்டே கேட்டான் ரகு. ''அப்பா அம்மாவை இறக்கிவிட்டுட்டு சித்தப்பா குடும்பத்தையும் மாமா குடும்பத்தையும் நேர்ல போய் அழைச்சிட்டு வரணும்னு பாபநாசம் கிளம்பி போயிட்டாங்கடா. அம்மாவுக்கு எப்படி விஷயம் தெரிஞ்சதுன்னு தெரியல்ல. ஒரு வேளை மதுவோட அப்பா போன்ல சொல்லியிருப்பாரோ. நான் எவ்வளவோ தடுத்துப் பார்த்தேன். கேட்கவே இல்லடா'' ரதி பேசிக்கொண்டே வர மது வீட்டிற்கருகே வந்து நின்றனர் இருவரும்.

16

**உள்ளங்கைகளால் உன்னை ஏந்துவேன்**
**உன்னைக்காக்கவே மண்ணில் வாழ்கிறேன்**
**வாழும் காலம் யாவும்**
**மடியில் சாய்ந்தால் போதும்!**

ரஞ்சிதம் ருத்ரதாண்டவம் ஆடிக் கொண்டிருந்தாள். மாவிலைத் தோரணம் பந்தல் அலங்காரம் என அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்த மது வீட்டில் அனைவரும் செய்வதறியாது நிற்க, எதிர்த்து பேச ஆளின்றி குதித்துக் கொண்டிருந்தாள்.

'' ஏன்யா! நீயெல்லாம் என்னய்யா பெரிய மனுஷன். உம் பேச்சைக் கேட்டுத்தானே உம்பொண்ணை நம்பித்தானே எம்புள்ளைய இந்த ஊருக்கு அனுப்பினேன். நீங்க என்ன காரியம் பண்ணி வெச்சிருக்கீங்க. சமையல்காரன் பந்தல்காரன்னு எல்லாவனும் வந்துட்டானுக. நீங்க என்னன்னா எம்புள்ளைய விட்டுட்டு இன்னொருத்தனை மாப்பிள்ளையா பேசி வச்சிருக்கீங்க. மனுஷனா நீ. உங்க குடும்பம் விளங்குமா?''



'' அம்மா...'' - ரகு போட்ட அதட்டலில் பேச்சு நின்று திரும்பினாள் ரஞ்சிதம். அதற்குள் கோபால கிருஷ்ணன் ரகுவிடம் ஓடி வந்தார்.

'' தம்பி! நல்ல வேளையா வந்தீங்க. உங்கம்மா அளவு மீறி பேசறாங்க. வீடு நிறைய விருந்தாளிங்க வந்தாச்சு. பொண்ணும், மாப்பிள்ளையும் கோவிலுக்கு போயிருக்காங்க. இப்ப வர்றநேரம் தான். இந்த பேச்செல்லாம் மாப்பிள்ளை கேட்டா நம்மைப்பத்தி என்ன நினைப்பார்? தயவு செய்து உங்கம்மாவை உடனே கூட்டிட்டு போயிடுங்க.''

'' யோவ்! எது பேசினாலும் எங்கிட்ட பேசய்யா. சின்னப்பையன் அவன்கிட்ட என்ன பேச்சு. நீ போடா அந்தப்பக்கம் ''- என ரகுவை நகர்த்த தாயின் கையை கெட்டியாகப் பிடித்தான் ரகு.

''ஸாரி ஸார். மன்னிச்சிடுங்க. இனி இப்படி நடக்காது. என் அம்மா சார்பா நான் மன்னிப்பு கேட்டுக்கிறேன்''- பொதுவாய் மன்னிப்பு கேட்டுவிட்டு பற்றிய கையை விடாமல் ஏறக்குறைய தாயை இழுத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தான். பின்னாலேயே ரதியும், சரவணனும் ஓடிவர, பலங்கொண்ட மட்டும் கையை உதறினாள் ரஞ்சிதம்.

''விடுடா கையை! என்னை ஏன்டா இழுத்திட்டு வர்ற. அவனை தாக்கை புடுங்கிற மாதிரி நாலு கேள்வி கேட்க வேண்டாமா?''

'' போதும் நீ கேட்டதெல்லாம் போதும். நீ கேட்டது தாளாமல் இரண்டு உயிர்கள் தாக்கை புடுங்கி செத்ததும் போதும். மேலும் மேலும் பாவக்கணக்கை கூட்டி என்னையும் அக்காவையும் சாகடிச்சிடாதே'' - ரகு அத்தனை ஆங்காரமாய் பேசி யாரும் பார்த்ததில்லை. அதனால் அனைவரும் வாயடைத்துப் போய் நிற்க, தாயை நேராய் பார்த்து கேட்டான்.

''என்ன பார்க்கிற. உண்மையை எத்தனை வருஷம் தான் பொத்தி வெச்சாலும் அது வெளியே வராம போகாது. பொம்பளையா நீ. ஒரு தாய் செய்யும் காரியமா செய்தாய்?. பெற்ற மகள் பூவிழந்து, தாலியிழந்து துடிக்கும் போது கூட நீ இன்னொரு பெண்ணின் குடும்பத்தை சிதைத்து விட்டுத்தான் வந்தாய் இல்லையா? நீ மற்றவர்களுக்கு கொடுக்கும் சாபம் எல்லாம் உன் பெண்ணின் தலையில் தானே விடிந்தது.

திருமணமாகி இத்தனை ஆண்டுகளில் ஒரு குழந்தைக்கும் வழியில்லாமல் இதோ கணவனையும் இழந்து நிற்கிறாளே. இது அவள் செய்த பாவமா?

இல்லை நீ செய்த பாவத்திற்கான சாபமா? பணம் பணம் என்று பறந்து தானே ஒரு குடிகாரனுக்கு உன் பொண்ணை கொடுத்தாய். அக்கா படிக்காதவள் என்ற காரணத்திற்காக அவளை பிடிக்காமல் போய் குடித்து குடித்து குடல் வெந்து செத்துப் போனான் அவன்.

இப்படி யார் யாரெல்லாமோ தப்பு செய்ய தண்டனை அனுபவிப்பது என் அக்கா தானே''

ரதி குலுங்கி குலுங்கி அழ ரஞ்சிதத்தின் பார்வை மகளிடம் பதிந்து மீண்டது.

''மருமகனையும் சாகடிச்சாச்சு. சொந்த அண்ணன் அவன் மனைவியையும் கொன்று விட்டாய். இப்போது மது வீட்டிலும் சாவு விழ வேண்டும் என்றா அங்கே போய் ஆர்ப்பாட்டம் செய்கிறாய்?

என்ன அற்புத மனிதர் தெரியுமா அவர். தன் மகளின் மனதில் இன்

ளொருவன் இருக்கிறான் என்று தெரிந்ததும் என்னிடம் மன்னிப்பு கேட்டு என் சம்மதம் வாங்கிய பிறகு தான் பிரதாப்பை மாப்பிள்ளையாக ஏற்றுக் கொண்டார்.

பணம் யாரிடம் வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் பண்பு? அந்த பண்பு உன்னிடம் இருந்ததா? உனக்கு நான் ஒரே மகன். என்னை என் விருப்பம் போல் வாழ வைத்தாயா? ஒன்பது வருடம்... ஒன்பது வருடமாய் என்னை நடைபிணமாய் நடமாட வைத்து விட்டாயே. அப்பவும் உன் பிடிவாதம் தளர்ந்ததா?

அதுவும் கோதையின் நிலை... கடவுளே! அது எத்தனை கொடுமை. அத்தான் வருவான் வருவான் என்று வழிமேல் விழிவைத்து கால் கடுக்க காத்து நின்று உயிரை இழுத்துப் பிடித்துக் கொண்டு காத்துக் கிடந்தாளே. அதைப் பார்த்து அவள் தங்கை எத்தனை நாள் வயிறு எரிந்திருப்பாள். அந்த வயிற்றெரிச்சல் நம்மை சும்மா விடுமா.

பாவத்தில் கொடிய பாவம் பெண் பாவம். அது ஏழு ஜென்மம் எடுத்தாலும் நம்மை விடாது. சொல். இன்னும் என்ன பாவம் செய்யப் போகிறாய்?

என்னை வைத்து தானே நீ இத்தனை பாவங்களையும் செய்து கொண்டே போகிறாய். நான் என்னை முடித்துக் கொண்டால் நீ பாவம் செய்வதை நிறுத்தி விடுவாயா? சொல் நான் எனக்கு சாவைத் தேடிக் கொள்ளவா?''

கண் செந்தியாய் கொழுந்து விட்டெரிய கேட்ட மகனைப் பார்த்து அசரவில்லை ரஞ்சிதம்.

''என்னடா! அந்த சிறுக்கிங்க என்ன சொன்னாலும் அப்படியே நம்பிடுவியா. நான் உன்னோட அம்மா. என்னை நம்ப மாட்டாய். எவனோ எதுவோ சொன்னால் நம்பிடுவாய் இல்ல.''

சட்டென தன் தலை மீது தாயின் கையை எடுத்து வைத்தான். ''என் மீது சத்தியம் பண்ணும்மா. நீ எதுவுமே பண்ணலைன்னு சொல்லு'' மகனின் செய்கை பீதியை கிளப்பியது. பேச்சு எழவில்லை. சில நொடிகள் தான் அந்த பயம். உடனே கையை இழுத்துக் கொண்டாள். ''தப்புத் தாண்டா. நான் செய்தது தப்புதான். அந்த ஓடுகாலிகளை அன்னிக்கே ஊரை விட்டு அடித்து விரட்டி விட்டிருந்தால்.. இன்று என்னை நிற்க வைத்து கேள்வி கேட்டுக் கொண்டிருக்க மாட்டாய். நான் செய்தது தவறு தான்.''

''பார்த்தியாக்கா,... பாத்தியா. இது திருந்துகிற ஜென்மமா. நான் போகிறேன். எனக்கு இந்த வீடு வாசல் தோட்டம் சொத்துன்னு எதுவும் வேண்டாம். எல்லாத்தையும் உன் அம்மாவையே கட்டிட்டு அழச் சொல்லு. எனக்கு என் கோதை மட்டும் போதும். அக்கா அப்பா வந்ததும் சொல்லு. இன்னும் ரெண்டு நாள்ல எனக்கும் கோதைக்கும் கல்யாணம். உடனே நாங்க சென்னைக்கு புறப்பட்டு போயிடுவோம். அப்பா மட்டும் வந்தால் வரட்டும். உன் அம்மா நிழல் கூட அங்கு விழ வேண்டாம். என் கோதை இந்த முகத்தில் அவள் மீண்டும் விழிக்க வேண்டாம். நான் போறேன்.'' - விடுவிடுவென மாடிக்கு சென்று தன் துணிமணிகளை அடைத்துக் கொண்டு பையுடன் கீழே இறங்க ,ரஞ்சிதம் இடுப்



பில் கைவைத்துக் கொண்டு கோபமே உருவாய் நின்றாள்.

''இதோ பாருடா. என்னை மீறிப்போய் அந்தப் பிச்சைக்காரிய கல்யாணம் பண்ணினே நான் பட்டினி கிடந்தே செத்துடுவேன். உனக்கே நல்லா தெரியும். நான் சொன்னதை செய்வேன். பச்சைத் தண்ணி கூட குடிக்க மாட்டேன். என்னை மீறி போய்டுவியா'' - கர்வம் தொனிக்க கேட்டாள்.

''என்னை பெற்று விட்ட ஒரே காரணத்திற்காகத்தான் உன்னை ஒன்றும் செய்யாமல் விட்டேன். நீயே உனக்கு தண்டனை கொடுத்து கொண்டாலும் எனக்கு சந்தோஷம் தான். யார் என்ன செய்தாலும் அதற்குரிய பலனை அனுபவித்தே ஆக வேண்டும். அக்கா நான் போகிறேன். அப்பா வந்ததும் சொல்'' அதற்கு மேல் அங்கு நிற்காமல் நேராக கோதையின் வீட்டுக்கு வந்தான்.

அவனைப் பார்த்த பிறகு தான் கோதைக்கு இயல்பான மூச்சு வந்தது. ''வந்துட்டீங்களா அத்தான். நான் ரொம்ப பயந்துட்டேன்.'' ஓடிவந்து கட்டிக் கொண்டாள். அவளை அணைத்து நெற்றியில் முத்தமிட்டான். ''இனியொரு முறை உன்னை விட்டு போக மாட்டேன் கோதை. உன்னை மணம் செய்து என்னோடு அழைத்துச் செல்வேன். இதுவரை நீ பட்ட துன்பம் போதும். இனி உன்னை என் கண்ணுக்குள் வைத்துக் காத்துக் கொள்வேன். என்னை மீறி உன்மீது ஒரு துரும்பு கூட தீண்டாது. நான் இருக்கிறேன். உனக்காகவே நான் இருக்கிறேன்.''

''போதும் அத்தான். இது போதும் அத்தான். நாலு வருஷம் உங்க கூட வாழ்ந்த திருப்தி கிடைச்சிடுச்சி'' - அவன் மார்போடு ஒண்டிக் கொண்டாள் கோதை.

''ஹலோ! சென்சார் போடுங்கப்பா. நானும் ராசாத்தியும் கூட இங்கேதான் நிற்கிறோம். எங்க மனசை கெடுத்திடாதீங்க'' - சரவணின் குரலில் பதறி வெட்கத்தோடு விலகினர்.

## 17

பொன் மாங்கல்யம் வண்ண பூச்சரம்
மஞ்சள் குங்குமம் எல்லாம் நீதந்தது
ஓராயிரம் வண்ணக் கோலங்கள்
என் கண்ணிலே இங்கு யார் போட்டது!

கழுத்து நிறைந்த மாலையோடு தன் காலில் விழுந்தவர்களை பூரிப்போடு ஆசிர்வதித்தார் சிவகுருநாதன்.

மனம் போல் அமோகமாக வாழுங்க கை உயர்த்தி ஆசி வழங்கினார். உமா சரவணன் ராசாத்தி தன் தந்தை நால்வர் மட்டுமே கலந்து கொண்ட அமைதியான திருமணம். மேள, தாளங்கள் இல்லை நண்பர்கள் கூட்டம் இல்லை. பூப்பந்தல் இல்லை. வாண வேடிக்கைகள் இல்லை. எனினும் அனைவரின் மனமும் நிறைந்து இருந்தது. உமா மெல்ல வந்து தன் சார்பாக கொண்டு வந்த கைச்செயினை கோதையின் கையில் மாட்டினாள். சரவணன் கண் அசைக்க ராசாத்தி தன் கையில் உள்ள நகை டப்பாவை திறந்தாள். உள்ளே ஐந்து பவுன் தங்கச்சங்கிலி மினு மினுக்கது. ''இதோ பாரு! ராசாத்தி. உன் வீம்பையெல்லாம் ஒத்தி வெச்சிட்டு இதை வாங்

இக்க. பொண்ணு வீட்டு சார்பா மாப்பிள்ளை கழுத்துல நீதான் இதை போடுற''- என்று முன்தினம் மாலையே கொண்டு தந்துவிட்டுப் போனான். எத்தனை நல்ல மனம் சரவணன் உங்களுக்கு.

இதற்கெல்லாம் ஈடாய் நான் என்ன செய்யப் போகிறேன். கை நடுங்க செயினை எடுத்தான். ''அட பாருடா. ராசாத்தி கிட்ட வாங்கிட்டு வந்திருக்கா. காட்டு காட்டு''- அவசரப்படுத்தினான் சரவணன். புன்னகையும் கண்ணீரும் போட்டியிட அதை எடுத்து அக்காவிடம் தந்தாள். ''நீ போடு அக்கா ''- கோதை விழி நிறைய ஆச்சர்யத்தோடும், பெருமிதத்தோடும் அதை வாங்கி அத்தானுக்கு அணிவித்தாள். ராசாத்தி கண்ணீரோடு அத்தானின் காலில் விழுந்தாள். பதறி பின் வாங்கினான் ரகு.

''என்னை மன்னித்து விடுங்கள் அத்தான். உங்களை நான் ரொம்ப மரியாதைக் குறைவாய் பேசிவிட்டேன். உங்களால் தான் என் அக்கா பிழைத்திருக்கிறாள்.

மறு ஜென்மம் எடுத்திருக்கிறாள். ரொம்ப நன்றி அத்தான். அக்காவிற்காக காத்திருந்த உங்களை நானும் கூட தப்பாக எண்ணிவிட்டேனே. நீங்கள் தெய்வம் அத்தான்.'' - அவளது கண்ணீரை துடைத்தான் ரகு.

''இல்லம்மா! என்னோட கோதையை இத்தனை வருஷமா பொத்தி பொத்தி பாதுகாத்து என்கிட்ட ஒப்படைச்சிருக்கியே. நீதான் என் தெய்வம். உனக்கு எப்படி நான் நன்றி சொல்வேன். அதை விட இத்தனை ஏற்பாடும் செய்த சரவணனுக்கு கோடி நன்றி சொல்லணும்.''

''சரிதான். திருமண விழாவை நன்றி நவிலும் படலமாக மாற்றிவிடும் எண்ணமா? அதெல்லாம் முடியாது. எனக்கு இப்பவே விருந்து வேண்டும். பசி வயிற்றை கிள்ளுகிறது - என சூழலை கல கலப்பாக்கினான் சரவணன். கோதை திருமாங்கல்யத்தை கண்ணில் ஒற்றிக் கொண்டாள். அத்தான் சொன்னது போலவே பதினைந்து பவுனில் தாலி செய்து வைத்திருந்து தன் கழுத்தில் கட்டியிருக்கிறான். கனமான தாலிச்சரடு மனதை லேசாக்கியது. புதிய பட்டுப்புடவையை நீவிவிட்டுக் கொண்டாள். இன்னும் இதையெல்லாம் நம்ப முடியவில்லை அவளால்.



''என் மனைவி அன்பா இருப்பா திடீர்னு கோபமா பேசுவாடா''

''அப்படின்னா 'ப(ா)தி பக்தி'ன்னு சொல்லு''

-பி.பாலாஜி கணேஷ், கோவில்வாம்பூண்டி.

'' கோதை! நடந்தது எல்லாம் நிஜம்தான். உனக்கு என்ன இன்னும் நம்ப முடியலியா'' - என்றான் கிசுகிசுப்பாக. '' ம்'' - என்றாள் நாணத்தோடு. முகத்தைப் பார்த்தே குறிப்பறிந்து விடுவானே அத்தான்.

''ஏய் உமா புதுமணத்தம்பதி இங்கேயே வேலையைக் காட்ட ஆரம்பிச்சிட்டாங்க. சீக்கிரமா எல்லாரும் கிளம்புங்க. இது கோவில் ஆத்தா கோவிச்சுப்பாங்க. கிளம்புங்க. மத்ததெல்லாம் வீட்டுல போய் பேசிக்கலாம்.'' - எல்லோரும் வெட்கச் சிரிப்போடு அந்த அம்மன் கோவிலை விட்டு வெளியேறி வீட்டை நோக்கி நடந்தனர்.

''ரகு! இப்போ நம்ம வீட்டுக்குத் தானே போறோம்'' - என்றார் ரகுநாதன் ஆவலாய். மறுப்பாய் தலையசைத்தான் ரகு. ''இல்லப்பா நாங்க அங்கே வரல்ல. கோதையோட வீட்டுக்கு போறோம்''

''என்ன கோதை வீட்டுக்கா! அந்த ஓட்டு வீட்டுக்கா. நோ. நோ. கடல் மாதிரி நம்ம வீடு இருக்கு. நீங்க அங்கேதான் தங்குறீங்க'' - உமா உத்தரவிட்டாள்.

'' இல்ல உமா! உங்க வீட்லயும் விருந்தாட்கள் இருவரும் ஒரு டிஸ்டர்பன்ஸ் இருக்காது. பிளீஸ் புரிஞ்சுக்கோங்க.'' ரகு தயங்கினான். ''புரியுதுண்ணா. நீங்க என்னதான் பேசினாலும் எங்களோட இன்னும் ஒட்ட முடியல்ல. அப்படித்தானே''-சரவணன் கேட்க, பதறினான் ரகு.

'' சேச்சே! என்ன வார்த்தை சொல்லிட்டேப்பா. நீ ராமனுக்குன்னே பிறந்த லட்சுமணன் மாதிரி. உன்ன என் சொந்தத்தம்பியாத்தேன் பார்க்கிறேன். நான் அங்க ஏன் வரலன்னா அந்த வீட்டு மாப்பிள்ளையா வர இருந்தவன். இப்போ இன்னொரு பெண்ணோட கணவனா வந்தா எல்லோரும் ஒரு மாதிரியா நினைக்க மாட்டாங்களா. அதான் கொஞ்சம் சங்கடமா இருக்கு.''

'' ப்பூ. இவ்ளோதானா. யாரும் எதையும் நினைச்சிக் கவலைப்படல்ல. எல்லோருக்குமே பிரதாப்பை ரொம்பப் பிடிச்சுப் போச்சு. அதுவும் மீனா அக்காவோட ஹஸ்பெண்ட் வழியிலே ஏதோ சொந்தமாம். அதனால சித்தப்பா டபுள் ஓ.கே. சொல்லி கல்யாணமும் நல்ல படியா முடிச்சு மாப்பிள்ளையும் பொண்ணும் ஹனிமூனுக்கே போயாச்சு. இப்ப வந்து உங்களை யார் என்ன சொல்லப் போறாங்க. உண்மையைச் சொல்லணும்னா சித்தப்பாதான் உங்களை நேரில் பார்த்து பேச வருத்தப்படுறாங்க. அதனால நீங்க நேரே நம்ம வீட்டுக்குத்தான் வரணும்! ராசாத்தி என்ன உம்முன்னு வர்றே. சொல்லேன்'' ம்- இடுக்கிட்டு திரும்பினாள்.

'' என்ன கேட்டீங்க.'' '' சரிதான் அம்மா இத்தனை நேரம் இந்த உலகத்திலேயே இல்லியோ'' - உமா கேட்க அனைவரும் கொல்லென சிரித்தனர்.

அமைதியாக வந்த தந்தையைப் பார்த்தான் ரகு.

'' என்னப்பா அமைதியாயிட்டீங்க'' தயக்கமாய் மகனைப் பார்த்தார்.

''ரகு! சொல்றேன்னு தப்பா நினைக்கக்காதேப்பா. நல்லவளோ, கெட்டவளோ அவ உன் அம்மா இல்லையா. உன்னை கல்யாணக்கோலத்தில் பார்க்க ஆசைப்படமாட்டாளா? அவகிட்ட போய் ஆசிர்வாதம் வாங்க வேண்டாமா''-என்றார்.

ரகுவின் முகம் இறுகியது. அனைவரும் நின்று விட்டனர். கோதை பயமாய் கணவனைப் பார்க்க, ''வேண்டாம்ப்பா! அம்மா ஆசிர்வதிச்சா நான் நல்லா இருக்கமாட்டேம்ப்பா! இத்தனை வருஷம் அம்மாவோட விளையாட்டு பொருளா இருந்திட்டேன். எனக்கு என் கோதைதான் இனி முக்கியம்ப்பா. இனியொரு முறை அவளை இழக்கத் தயாராக இல்லை.

நான் கோதையைக் கல்யாணம் பண்ணப்போகிறேன் என்றதும் அதை தடுக்க இரண்டு நாளாய் உண்ணாவிரத நாடகம் நடக்கிறது. இப்போது தாலிகட்டி விட்டேன் என்று தெரிந்தால் நிச்சயம் ஹார்ட் அட்டாக் அல்லது வலிப்பு என ஏதாவது ஒரு நாடகம் ஆடி நிச்சயம் என்னை கோதையிடமிருந்து பிரிக்க முயற்சிப்பாள். அம்மா புத்தியை மாற்றவே முடியாது.

நான் போட்ட சின்ன சங்கிலியையே பிடித்து அறுக்கப் போனவள் இத்தனை பெரிய தாலியை விட்டு வைப்பாளா. வேண்டாம்பா. ஒரு வேளை அம்மாவைப் பார்த்து கோதை மீண்டும் பழைய நிலைக்கே போய் விட்டால்... என்னால் முடியாதுப்பா. இத்தனை ஆண்டுகள் அவள் அனுபவித்த வேதனை போதாதா. இதற்கு மேலும் அவளை நாம் வேதனைப் பட வைக்க வேண்டுமா. சொல்லுங்கப்பா-தொண்டை கமற மகன் கேட்டதும் பதறிப்போனார்.

'' வேண்டாம்ப்பா. வேண்டாம். இன்று காலைவரை இந்தப் பெண்ணை சபித்துக் கொண்டுதான் இருந்தாள். இந்த ஜென்மத்தில் அவள் திருந்தப் போவதில்லை. சரி அவளை நான் சமாளித்துக் கொள்கிறேன்: நீங்க சரவணன் வீட்டுக்குப்போங்க. நான் இப்படியே நம்ம வீட்டுக்கு போயிடுறேன். - சரிவில் இறங்கி நடக்க ஆரம்பித்தார்.

'' அப்பா'' நின்று திரும்பினார். ''என்னப்பா'' ''எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா'' ''சொல்லுய்யா. உனக்கு செய்யாம வேற யாருக்குச் செய்யப் போறேன். சொல்லுய்யா. ''

ஒரு நிமிடம் தயங்கினான். ''அப்பா! நாங்க நாளைக்கே சென்னைக்கு கிளம்பறோம். அம்மா இங்கேயே அக்காவோட இருக்கட்டும். அங்க வந்தா பேசியே என் கோதையைக் கொன்னுடுவா. அக்காவும் இங்கே தனியாத்தானே இருக்கா. அவளோட இருக்கட்டும். உங்களுக்கு இங்க இருக்க விருப்பம்னா இங்க இருங்க. இல்லைன்னா அங்கே வந்திருங்க. சரியாப்பா?'' - என்றான்.

யோசனையாய் தலையாட்டினார். ''சரிப்பா! நாளைக்கு நீங்க கிளம்பும் போது வந்து பார்க்கிறேன் சரியா. நான்...'' அவர் முடிக்கும் முன் சுயம்பு ஓடிவந்தான்.

''ஐயோ! நம்ம அம்மாவுக்கு வலிப்பு வந்து கை, கால் எல்லாம் இழுத்துக்கிச்சய்யா. சின்னம்மா உங்கள கூட்டியாரச் சொன்னாக'' - பதறியபடி கூறினான்.

ரகுவின் முகம் கடுத்தது. ''பார்த்தீங்களாப்பா,. நான் சொன்னேனில்லை. இதோ அடுத்த நாடகம் தொடங்கியாச்சி. ச்சே. தன் தாயை எந்த மகனும் வெறுக்க மாட்டான். ஆனால் என் தாயை எப்படியப்பா வெறுக்காமல் இருப்பேன் நான். போங்க போய்ச் சொல்லுங்க. இனி எந்த நாடகமும் ரகுவிடம் செல்லுபடியாகாது என்று உறுதியா சொல்லுங்கள். அவனுக்கும் சுயபுத்தி இருக்கிறது என்று சொல்லுங்கள்''- என கோபத்தில் படபடத்தவனை சரவணன் ஒருவாறாக சமாளித்து அனைவரும் மொத்தமாய் போய் சேர்ந்த போது ரதிதான் அழுது கொண்டிருந்தாள். ''தம்பி! அம்மாவைப் பாருடா. திமர்னு வெட்டு வந்திச்சு. கையும், காலும் மடங்கிடுச்சி. நாக்கும் இழுத்துக்கிச்சப்பா'' என ஓலமிட்டாள்.

ரகு முகத்தில் எந்த உணர்ச்சியும் இன்றி கட்டிலைப் பார்த்தான்.



அம்மா உண்மையாகவே பக்கவாதம் ஏற்பட்டு முடங்கியிருந்தாள். கையும், காலும் அசைவற்று பிரண்டு போயிருக்க வாய் ஒரு பக்கமாய் கோணி விகாரமாய் இருந்தது. பேச நா எழவில்லை.




இந்த வாய் எத்தனை பேரை சபித்திருக்கும். இந்த நாக்கு எத்தனை பேரை வாளாய் மாறி குத்தி, குதறியிருக்கும். வசுமதி அத்தையை, மாமாவை கோதையை ராசாத்தியை. கண்ணுக்கு தெரிந்து இத்தனை பேர் என்றால் கண்ணுக்கு தெரியாமல் எத்தனை பேரோ. அத்தனை பேர் வயிற்றெரிச்சலும் கண்ணீரும் சும்மாவா விடும்? இப்போதெல்லாம் தெய்வம் நின்று கொல்வதில்லை போலும். கைமேல் கொடுத்து விடுகிறதோ. இருக்கட்டும். இவளைப் போன்ற மற்ற பெண்களுக்கு இவள் ஒரு பாடமாக இருக்கட்டும். மனமும், முகமும் இறுகிப் போய் நின்றிருந்த மகளையும், கோதையையும் மாறி, மாறிப் பார்த்து அலைபாய்ந்தன ரஞ்சிதத்தின் கண்கள். கோதையின் கழுத்தில் கூர்மையாய் நின்றன. கோதை தன் தாலியை இறுகப் பற்றிக் கொண்டு அத்தானின் முதுகோடு ஒண்டி தன்னை மறைத்துக் கொண்டாள். அவள் உடல் நடுங்குவதை உணர்ந்தான் ரகு.

'' இந்த ஜென்மத்தில் நீ திருந்தப் போவதில்லை. உனக்கு பாவப்பட்டால் அது என்னை நானே அழித்துக் கொள்வதற்கு சமம். அப்போ நான் போகிறேன். அக்கா நீ பார்த்துக் கொள் - திரும்பியும் பாராமல் கோதையை அணைத்துக் கொண்டு வெளியேறினான்.

உமாவும் பின்னே செல்ல, ராசாத்தியிடம் அசைவேயில்லை. இமைக்காமல் அத்தையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். தாயும், தந்தையும் பிணமாய் தொங்கிய காட்சி கண்முன் வந்து போனது. அத்தை பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றாய் வந்து போயின. அவள் கண்களில் இத்தனை நாளாய் குடி கொண்டிருந்த நெருப்பு, வெறி அனைத்தும் கொஞ்சம் கொஞ்சமாய் அவளை விட்டு விலகிச் சென்றது. இறைவன் இருக்கின்றான். இல்லையென்றால் ஊரையே உருட்டி புரட்டியவள் இன்று இப்படி படுத்து கிடப்பாளா? என் தாயின் ஆத்மா சாந்தி அடைந்திருக்கும். என் தந்தை ஆத்மா குளிர்ந்திருக்கும். இனி இவளால் என் அக்காவிற்கோ, அத்தானுக்கோ எந்த தொந்தரவும் இருக்காது இது போதும். இதுபோதும். இத்தனை காலம் நான் நெருப்பின் மீது வாழ்ந்ததற்கு இது போதும்.

மனதில் உள்ள ஆவேசங்கள் மெல்ல மெல்ல அடங்க தன் தோள் பற்றி

அணைத்த நிலையில் தன்னை வெளியே அழைத்து வந்த சரவணனை வெறுக்கவும் இல்லை. விலக்கவும் இல்லை. தன் வாழ்நாள் முழுக்க இந்த கைகளின் அணைப்பில் பாதுகாப்பாய் வாழ வேண்டும் என்ற எண்ணம் முதன் முதலாய் ராசாத்தியின் மனதில் அரும்பானது.

அவன் கை விரல்களை தன் கையால் கோர்த்து கொண்டாள்.

சரவணனும் அவளை விட்டு விலகாமல் வீடு வரை அணைத்துக் கொண்டே வந்தது அனைவர் கண்களையும் கவனிக்கச் செய்தது.

## சின்ன சின்ன பறவை அன்னை

18

**அவள் மடியில் தவழ்வதைப் போல்**
**நான் தவழ்ந்திருப்பேன் - உன்னை**
**கையில் எடுத்து நெஞ்சமதில் பதித்து**
**காலமெல்லாம் நான் காத்து நிற்பேன்!**

''ரகு அண்ணா கார் ரெடி. நீங்க ரெடியா'' - என்றவாறு உள்ளே நுழைந்த சரவணன் ஆளாளுக்கு ஒவ்வொரு புறமாய் திரும்பி அமர்ந்திருக்க குழப்பமாய் உமாவைப் பார்த்தான்.

''என்னாச்சு உமா? ''

இடுப்பில் கை ஊன்றி நின்ற உமா, ''வாண்ணா இந்த ராசாத்திய சமாளிக்க என்னால முடியல்ல. நீதான் இவளுக்குச் சரி. வந்து என்னன்னு கேளு''- என்றவாறு மூச்சு வாங்க அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

''ஏன் ராசாத்திக்கு என்ன? ராசாத்தி நீ இன்னும் கிளம்பலியா. கார் வந்தாச்சி''- இயல்பாய் பேசுபவன் போல் காட்டிக் கொண்டாலும் அவன் முகத்தின் வேதனை நன்றாகவே தெரிந்தது.

அவனது கண்களைப் பார்த்துக் கேட்டாள். ''நான் போகவா?''

ஒரு கணம் தடுமாறி பின் சுதாரித்து '' இது என்ன கேள்வி. நேற்று முழுவதும் இதைத்தானே பேசி முடிவெடுத்தோம்.

விடிந்ததும் எல்லாம் மறந்து போயிற்றா. இது என்ன புது வியாதி. இதற்கு என்ன பெயராக இருக்கும்''- தீவிரமாய் யோசித்தவனின் முதுகில் அறைந்தாள் உமா.

''உன்ன என்ன ஆராய்ச்சியா பண்ணச் சொன்னேன். கூடவே வந்தாக வேண்டும் என்று கோதையும், ரகுவும் ஒற்றைக் காலில் நிற்கிறார்கள். இவள் என்னன்னா இந்த ஊரைவிட்டு போகவே மாட்டேன் என்கிறாள், நீயே சொல் இவளைத் தனியே விட்டுவிட்டு போக அவர்களுக்கு மனம் வருமா? அப்படியே போனாலும் அவர்களால் மனம் ஒன்றி சந்தோஷமாக வாழ முடியுமா. இவள் ஏன் இப்படி பண்றா.''

''கேளுண்ணா. நாங்க மூணு பேர் சொல்லியும் கேட்கல்ல. பிடிவாதக்காரி. இங்கே தனியா இருந்து என்ன பணணுவாளாம்''

சரவணன் ராசாத்தியைப் பார்த்தான். இருவரின் கண்களும் கோர்த்துக் கொண்டன. ஊரை விட்டு போகத்தான் மனமில்லையா. என்னை விட்டு போக மனமில்லையா. எப்போதுதான் சொல்வாய் ராசாத்தி.



கோதை, கோதை என அவளுக்காகவே வாழ்ந்து என்னை ஒதுக்கினாய். நானும் ஒதுங்கிக் கொண்டேன். இப்போதுதான் கோதைக்கு அருமையான கணவரும், அற்புதமான வாழ்க்கையும் அமைந்து விட்டதே. இன்னும் ஏன் இப்படி மவுனத்தால் கொல்கிறாய். ஏன் என்னை பிடிக்கவில்லையா உனக்கு? ஆயிரம் கேள்விகள் கேட்ட கண்களை விட்டு தன் பார்வையை விலக்க முடியாமல் திணறினாள் ராசாத்தி.



''ஏண்டா நீ எப்பவும் அந்த ஹோட்டல்லையே சாப்பிடுறே?''

''அந்த ஹோட்டல்ல மாவாட்டுற ஆட்டுக்கல் சின்னதா இருக்கு''

பி.பாலாஜி கணேஷ்,
கோவிலாம்பூண்டி.

இத்தனை ஆண்டுகளாய் நிழலாய் தொடர்ந்து வந்தீர்களே சரவணன். இப்போது ஏன் அமைதியாய் என்னை அனுப்ப முடிவெடுத்து விட்டீர்கள். ஊரை விட்டு அனுப்புகிறீர்களா? இல்லை உங்கள் மனதை விட்டும் அனுப்பி விட்டீர்களா? எனக்கு நீங்கள் வேண்டும் சரவணன். என்னை உண்மையாய் நேசித்த நீங்கள் என் ஆயுள் முழுவதும் என் கூடவே இருக்க வேண்டும். இருப்பீர்களா? அத்தானிடம் சொல்லுங்களேன். ராசாத்தி இங்கேயே என்னுடனே இருக்கட்டும் என்று சொல்லுங்களேன். என் மனம் ஓலமிடுவது உங்களுக்கு கேட்க வில்லையா சரவணன்? மனம் பதற பார்வையால் மன்றாடினாள். இருவரிடமும் அசைவின்றி போகவே ''ம்ஹீம். இது சரி வராது. இனிமே நான் தான் முடிவெடுக்கணும். சரவணா டேய் சரவணா'' என்ற ரகுவின் குரலில் இருவரும் திடுக்கிட்டு விழிக்க ரகுவின் முகம் புன்னகை பூத்தது.

சரவணனின் தோளைத் தொட்டு, ''சரி சரவணா. ராசாத்தியும் எங்களோட வரமாட்டா. நானும் தொழில விட்டுட்டு ரொம்ப நாள் இங்க தங்கியிருக்க முடியாது. அதனால நீ ஒண்ணு பண்ணு. நல்லா அழகான படிச்ச வசதியான மாப்பிள்ளை எதுவும் இருந்தா சொல்லு. இருந்து நாலு நாள்ல கல்யாணத்தை முடிச்சிட்டே போயிடுறோம். ராசாத்தியும், ஊரோடயே இருப்பா. நாங்களும் எந்த டென்ஷனும் இல்லாம இருப்போம். என்ன ராசாத்தி இந்த டீல் ஓகேவா. நீ என்ன சொல்றே சரவணா''- கண்களில் குறும்பு மின்ன ரகு கேட்க சரவணன் தடுமாறினான்.

''வந்து... பெரிய இடம்னா அதிகமா எதிர்பார்ப்பாங்களே ரகு அண்ணா''- ஏதாவது சொல்ல வேண்டுமே என்ற ஆதங்கத்தில் சரவணன் கூற, ''அதற்கென்னப்பா! தாராளமாய் கேட்கட்டும். ராசாத்தி எனக்கு மக மாதிரி. அவளுக்குச் செய்யாம வேற யாருக்குச் செய்வேன். நூறு பவுன் நகை போடுறேன். ரொக்கம் எத்தனை லட்சம் என்றாலும் ஓ.கே. வேற என்ன எதிர்பார்த்தாலும் நான் தர தயாரா இருக்கேன். பட் ஒன்திங்க் மாப்

பிள்ளை தங்கமானவரா இருக்கணும். ராசாத்தியை பூப்போல வெச்சிக்கணும். அதோட பார்க்கிறதுக்கும் அழகா ராஜாவாட்டம் இருக்கணும். இப்படி ஒரு மாப்பிள்ளை நம்ம ஊர்ல கிடைப்பாரா. கிடைச்சா சொல்லு. நாளைக்கே கூட கல்யாணத்தை தடபுடலா நடத்திடலாம்'' - என்ற கணவனை பெருமை பொங்க பார்த்தாள் கோதை.

முகம் பூவாய் மலர ''நிஜம்மாவா அத்தான் சொல்றீங்க'' - என்றாள் வியப்பாய்.

''பின்னே இதில போய் யாராவது பொய் சொல்லுவாங்களா? என்ன சரவணா அப்படி எதுவும் மாப்பிள்ளை இருக்கா''

''ஓ இருக்குதுண்ணா. நம்ம உறவுலேயே இத்தனை அம்சமும் பொருந்திய மாப்பிள்ளை இருக்கார். ''சொல்லிய உமாவை பற்கள் அத்தனையும் நொறுங்கிவிடும் அளவிற்கு கடித்தவாறே முறைத்தான் சரவணன்.

அவனது முறைப்பை அலட்சியம் செய்து விட்டு,'' ஆமாண்ணா,

மாப்பிள்ளை படிச்சவர்தான். ஆனா ராசாத்தியை மாதிரியே இந்த ஊரை விட்டு போக மனமில்லாம விவசாயத்துறையில் மேலும் மேலும் பல முன்னேற்றங்களை செய்யணும்னு ஊர்லயே இருக்கார். வசதியும் உங்க அளவுக்கு இருக்கு. பையன் ஒரே பையன்தான். அதனால அத்தனை சொத்தும் அவருக்குத்தான். பார்க்கவும் ரொம்ப அழகாவே இருப்பார். நம்ம சரவணனை மாதிரியே ரொம்ப கலகலப்பான பேர்வழி. சிரிக்க சிரிக்க பேசுவார். ஒரு கெட்டப்பழக்கமும் கிடையாது. உங்களுக்கு ஓகேன்னா சொல்லுங்க. நானே மாப்பிள்ளை வீட்ல பேசி முடிவு பண்ணிடுறேன் என்ன சொல்றீங்க.''

''அட நீயே இத்தனை தூரம் சொன்னா அந்த மாப்பிள்ளை நல்லவராத்தான் இருப்பார். எனக்கு பிடிச்சிருக்கும்மா. நீயே பேசி முடிச்சிடேன்'' - ரகு சந்தோஷமாய் சொல்ல, சரவணன் ஜென்ம எதிரியைப் பார்ப்பது போல் உமாவைப் பார்த்தான். ''வெவ்வேவ்வே'' அழகாய் பழிப்பு காட்டினாள் உமா.

''இல்ல எனக்கு பிடிக்கல்ல ''- ராசாத்தி மறுப்பாய் தலையசைத்தாள்.

''ஏன்! ஏன் பிடிக்கலே உனக்கு''- கோதை கேட்டாள்.

''ஏனோ பிடிக்கல. வேண்டாம்னா விட்டுடுங்களேன்''-எரிச்சலாய் கத்தினாள்.

''அச்சச்சோ! ஏன் ராசாத்தி உனக்கு இத்தனை கோபம் வருது. அவருக்கு எத்தனை பெரிய இடத்து வரனெல்லாம் வருது தெரியுமா''-உமா சொல்ல,

''வந்தா என்ன? அதுலே ஒன்னை கட்டிக்க வேண்டியதுதானே. நான் எதுக்கு?''-என்றாள் விட்டேத்தியாய்.

''என்ன இப்படிச் சொல்லிட்ட. அவருக்கு எளிமையான நீதான் வேணுமாம்.

இல்ல. என்னால முடியாது. இதெல்லாம் எனக்கு பிடிக்கல்ல.

''எது பிடிக்கல்ல.''

''இந்த மாப்பிள்ளை கல்யாணம் எதுவும் பிடிக்கலை.''

''அடடா! சரவணா நீ சுத்த வேஸ்ட்டுடா. இனிமே என்னால



ஒன்னும் பண்ண முடியாது. போ. ராசாத்திக்கு உன்னை பிடிக்கலியாம். வேற மாப்பிள்ளை பார் ''- அலட்சியமாய் உமா சொல்ல ராசாத்தி மட்டுமல்ல சரவணனும் அதிர்ந்து தான் போனான்.

''ஏய் வாலு. என்ன சொல்றே நீ''-கூவினான் சரவணன்.

''ஏன். தமிழ்லதானே சொன்னேன். காதும் இப்ப கேட்கிறதில்லையா. சரியாப் போச்சு. நல்லா கேளுடா. ராசாத்திக்கு உன்ன பிடிக்கலையாம்'' சத்தமாய் சொன்னாள்.

''ஏய்! உமா! நான் எங்கே அப்படிச் சொன்னேன்''- அவசரமாய் மறுத்தாள் ராசாத்தி.

''இப்பத்தானேப்பா. சொன்னே'' நீ யாரையோ சொல்றேன்னு நினைச்சேன். ஓஹோ சரி. இப்பக் கேட்கிறேன். எங்க அண்ணனை பிடிச்சிருக்கா''- கண்களில் குறும்பு மின்ன கேட்டாள் உமா.



'என்னது உங்க பத்திரிகையில திடீர்னு 'நாணயம் ஸ்பெஷல்' விட்டிருக்கீங்க?'

'எல்லாம் ஒரு 'சேஞ்ச்'க் குத்தான்!'

-எம்.மோகனசுந்தரி, கிருஷ்ணகிரி.

''அவகிட்ட என்ன கேள்வி. எனக்கு புடிக்கல்ல''-ரகு சொல்ல பதறினான் சரவணன்.

''அண்ணா! என்ன சொல்றீங்க. என் தலையில கல்லை போட்டுடாதீங்க.

ஏன் அத்தான் உங்களுக்கு அவரை புடிக்கலை.''- கோபமாய் கேட்டாள் ராசாத்தி.

''எனக்கு இல்லம்மா. உனக்கு பிடிக்காதுன்னு தான்..''

''நான் சொன்னேனா. பிடிக்காதுன்னு''

''ஓ..அப்போ உனக்கு பிடிக்குமா சரவணனை'' மடக்கினான் ரகு.

''அ..அது...வந்து...'' - தடுமாறி அசடு வழிந்தாள் ராசாத்தி.

பொறுமையிழந்தான் சரவணன். ரகுவின் முன் வந்து நின்றான். ''அண்ணா! நூறு பவுன் வேண்டாம். ஒரு பைசா வேண்டாம். எனக்கு என் ராசாத்திய மட்டும் கொடுத்திருங்கண்ணா. அவளை உள்ளங்கையிலே வெச்சு தாங்குவேன். அவ கண்ல ஒரு சொட்டு கண்ணீர் வராம நான் பார்த்துக் கொள்வேன். தருவீர்களா''- மணம் இளக கேட்டவனை ரகு அணைத்துக் கொண்டான்.

''அப்படி வா வழிக்கு! எப்ப உங்க ரெண்டு பேர் வாயையும் திறக்க வைக்க நானும், உமாவும் எவ்வளோ பாடுபட்டுப் போயிட்டோம். சரியான அழுத்தம்தான். ம்'' -என்றான்.

''அப்படியில்லண்ணா. அவ மனசு தெரியாம நான் எப்படி உங்ககிட்டே கேட்கிறதுக்குன்னு தான் தயங்கினேன். அது சரி. நீங்க எப்படி?. ஏய் வாலு நீ சொன்னியா'' - உமாவை முறைத்தான்.



'என்னடி ஆச்சு உன் வீட்டுக்காரர் பேய் அறைஞ்ச மாதிரி வர்றார்?'

'நான் தாண்டி அடிச்சேன்'

-பி.பாலாஜி,
கோவிலாம்பூண்டி.

''ஹலோ! இங்கே யன் எகிறுற. பாம்பின் கால் பாம்பறியும்.

வந்த ரெண்டு நாள்லயே ரகு அண்ணா உங்க ரெண்டு பேரையும் முகத்தைப் பார்த்தே கண்டுபிடிச்சுட்டார். மத்த விபரங்கள்தான் என் உபயம்'' கூலாக சொல்லி முடித்தாள் உமா.

''அய்யோ! என்னதான் நடக்கிறது இங்கே. எனக்கு தலையே வெடித்து விடும் போலிருக்கே''- தலையைப் பற்றிக்கொண்டு உட்கார்ந்தாள் கோதை.

அவளருகே ஓடினான் ரகு. ''இது ஒரு அருமையான லவ் சப்ஜெக்ட் கோதை. அதெல்லாம் நான் அப்புறம் பொறுமையா தெளிவா சொல்றேன். முதல்ல சரவணனை உனக்கு பிடிச்சிருக்காப் பாரு. ராசாத்திக்கு பொருத்தமா இருப்பானா?

நன்றாகப் பார்''- என்றவாறு சரவணனைக் கோதையின் முன் கொண்டு வந்து நிறுத்தினான். சில நொடிகள் மேலும், கீழுமாய்ப் பார்த்தாள் கோதை. டென்ஷனாகிப் போனான் சரவணன். கோதையின் வாயிலிருந்து வரும் வார்த்தைக்காக அனைவரும் கையை பிசைந்து கொண்டு நிற்க, கோதை உதட்டை பிதுக்கியபடி மறுப்பாய் தலை அசைத்தாள்.

''ஐயோ! அண்ணி. ப்ளீஸ் அண்ணி. ப்ளீஸ். உங்க வார்த்தையில தான் என் வாழ்க்கையே இருக்கு. வேண்டாம்னு மட்டும் சொல்லிடாதீங்க''-சாஷ்டாங்கமாய் அவள் காலில் விழுந்தான். பதறி எழுந்து அவனை எழுப்பினாள்.

''ம்ஹூம். உங்களுக்கு மட்டும் தான் நாடகம் போடத் தெரியுமா. எனக்கு தெரியுமாக்கும்''-கோதை காலரை உயர்த்திக் காட்டுவது போல் காட்ட ''ஹோ'' என அனைவரும் கோரஸாய் சிரித்தனர். ராசாத்தியை உமாவும், கோதையும் கட்டிக் கொள்ள, சரவணனிடம் ரகு கேட்டான். ''ஏன் சரவணா இனிமே நீதான் வீட்ல சமைப்பியோ''

''ஏண்ணா திடீர்னு இந்த கேள்வி உங்களுக்கு.''

''இல்ல, ராசாத்தி கண்ல ஒரு சொட்டு கண்ணீர் வரவிடமாட்டேன்னு சொன்னியே. இந்த வெங்காயமெல்லாம் நறுக்கினா கண்ணீர் வருமாமே''

''இதான் மேட்டரா. இனிமே வெங்காயம் இந்த ஊருக்குள்ளேயே வர விடாம தடா சட்டம் போட்டுடமாட்டேன்''- சரவணன் சொல்ல மீண்டும் பலத்த ஆரவாரம் ஆரம்பமானது.

இனி அவர்களின் வாழ்வில் சுகம் சுகமே.

**முற்றும்**